
கல்கி

KALKI 9.2.2003
ரூ. 6.00

'கெட்டிமேளம்!
கெட்டிமேளம்!'
இலவச இணைப்பு



"ரஜினியால் அது முடியாது..."

- கமல் பேட்டி


Heinz
Trust • Taste • Nutrition
என்னையே நம்பி
இருக்கும் என்
குழந்தையின்
ஊட்டசத்துக்கு
நான் யாரை
நம்புவது?
என் குழந்தைதான் எனக்கு ஒப்பற்ற செல்வம். அவன் என்னையே நம்பியிருப்பதால், கொஞ்சம் கவலைப்படுவது இயற்கைதான். பெரும்பாலான தாய்மார்கள், 'அவனுக்கு சரியான ஊட்டசத்து கிடைக்கிறதா, சரியான முறையில் வளர்ச்சி இருக்கிறதா?' என்றெல்லாம் கவலைப்படுகிறார்கள். ஆனால் எனக்கு அந்த கவலை இல்லை.
ஏனெனில், ஃபாரெக்ஸ் இருக்கிறதே!
ஃபாரெக்ஸை எளிதில் தயார் செய்ய முடியும். எனவே, குழந்தைக்கு பசி எடுத்தவுடனேயே ஊட்டலாம். அதுமட்டுமா? ஃபாரெக்ஸ் ஒரு விசேஷ முறையில் தயாரிக்கப் படுவதால் எளிதில் செரிக்கக் கூடியது. மற்றும், பால், கோதுமை, அரிசி, பழங்கள் மற்றும் காய்கறிகளின் இயற்கையான நற்குணங்கள் அதிசிறப்பாக அப்படியே இருக்கும். மேலும், ஃபாரெக்ஸ் என் குழந்தைக்கு புரோட்டீன்ஸ், கார்போஹைட்ரேட்ஸ், விட்டமின்ஸ் மற்றும் மினரல்ஸின் சரியான கலவை அடங்கிய சமச்சீர் ஊட்டசத்து அளிக்கிறது. எனவே, என் குழந்தையின் சரியான வளர்ச்சிக்கு வீட்டில் தயார் செய்த ஆகாரங்களுடன், நான் நம்புவது ஃபாரெக்ஸைதான்.
எனவே, 50 ஆண்டுகளுக்கும் மேலாக, பல தலைமுறைகளாக தாய்மார்கள் ஃபாரெக்ஸை நம்புவதில் ஆச்சரியம் இல்லை. ஒவ்வொரு முறையும் என் குழந்தை சிரிக்கும் போது, 'நன்றி, ஃபாரெக்ஸ் அம்மா!' என்று கூறுவது போல் இருக்கும்.
ஃபாரெக்ஸ்®
வளர்ச்சிக்கு சிறந்த வழி
6 ருசிகரமான சுவைகளில்
ரைஸ், வீட், வீட் வெஜிடபிள், வீட் மிக்ஸ்டு ஃப்ரூட்ஸ், வீட் ஆப்பிள்
வீட் எக்
இலவச குழந்தை பராமரிப்பு புத்தகத்திற்கு, குழந்தையின் பெயர்/பிறந்த தேதியுடன் எங்களுக்கு எழுதுங்கள்: ஹைன்ஸ் இந்தியா பி. லிட், த. பெ. எண் : 1907, மும்பை - 400 001.
IMPORTANT NOTICE: MOTHER'S MILK IS BEST FOR YOUR BABY, INFANT FOOD SHALL BE INTRODUCED ONLY AFTER 4 MONTHS OF AGE.
महत्वपूर्ण सूचना: माँ का दूध आपके बच्चे के लिये सर्वोत्तम है. ४ महीने के बाद ही उसे शिशु आहार देना शुरू करें.

அட்டை
டு
அட்டை

8



மனம் திறக்கிறார் கமல்...

அன்னலட்சுமி
ஜெயலலிதா!
2,3,4



எலி வால்
விபரீதம்!
28 ,29



குவா குவா வங்கி
37,38



அழகான ஐஸ்
அஞ்சாத அம்மா!
86





கல்கி
9.2.2003




அன்னலட்சுமி ஜெயலலிதா!

சென்ற வருடம் பிப்ரவரி 24ல் ஆண்டிப்பட்டி தேர்தல் வெற்றியை, பிறந்தநாள் பரிசாகப் பெற்று, முதல்வரானார் ஜெயலலிதா... அ.தி.மு.க அரசின் ஒரு வருட ஆட்சி பற்றி சென்னைவாசிகளில் சிலர்:

ஜூலியன் (தனியார் நிறுவனம்):

ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்பேற்றபோது தமிழக அரசுக்குக் கடுமையான நிதி நெருக்கடி. இது ஒரு பக்கம் இருக்க, அரசியல் ரீதியாக பல சறுக்கல்கள். இருந்தும் டான்ஸி வழக்கில் வென்று மீண்டும் முதல்வராக வந்தது முதல், நிதி நெருக்கடியைச் சீர்படுத்த பல நடவடிக்கைகளை எடுத்தது மட்டுமல்லாமல், கோடிக் கணக்கான ரூபாய்க்கு புதிய திட்டங்கள் பல அமலாக்கப்படவிருக்கின்றன. உதாரணமாகச் சொல்வதென்றால், மெரினாவைச் சுத்தப்படுத்தி, சுற்றுலாவை மேம்படுத்துவது, தலைமைச் செயலகத்தை மாற்றி புதிய நகரத்தை நிர்மாணிப்பது, புதிய வீராணம் திட்டம் என்று பல திட்டங்கள்.



பதவிக் காலத்தில் இரண்டு வருடங்களைக் கூட முடிக்காத இந்த அரசுக்குப் பல்வேறு நெருக்கடிகளைக் கொடுக்கின்றன எதிர்க் கட்சிகள். இவர்கள் தூண்டிவிடும் போராட்டங்களுக்கு மக்கள் ஆதரவு இல்லை. ஆனால் அதே சமயம் போராடுபவர்களை அரசு அலட்சியம் செய்யக்கூடாது.

தேன்மொழி (குடும்பத் தலைவி):

தமிழக அரசின் திட்டங்களில் எனக்குப் பிடித்தது மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான திட்டங்கள்தான். குறிப்பாக பதினெட்டு அம்சத் திட்டத்தில் மகளிர் கல்வி, பெண் குழந்தை பாதுகாப்பு என்று பல ஆக்கபூர்வமான செயல் திட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. தொட்டில் குழந்தை திட்டம் சிறப்பாக நடைபெறுகிறது. இதுவரை எந்த முதலமைச்சரும் காவலர்களின் குறைகளை நேரிடையாகக் கேட்டதில்லை. ஆனால் முதல்வர் ஜெயலலிதா மட்டுமே காவலர்களின் குறைகளை நேரிடையாகக் கேட்டுள்ளார். அடிக்கடி மக்களைச் சந்தித்து அவர்களது குறைகளை நீக்க முதல்வர் முயல வேண்டும். இப்போது முதல்வருக்குக் கொடுக்கப்படும் மனுக்களுக்குத் தீர்வு கிடைக்க பல காலம் ஆகிறது. இந்த நிலை மாற வேண்டும்.

ஏழுமலை (தனியார் நிறுவனம்):

காவிரிப் பிரச்னையில் கர்நாடகத்தைக் கெஞ்சிக் கொண்டிருக்காமல் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட அவர் எடுத்த நடவடிக்கைகளைப் பாராட்டியே தீர வேண்டும். இந்த விவகாரத்தால் இறுதி முடிவாக கர்நாடகம் தமிழகத்துக்குத் தேவையான தண்ணீரை விட்டே ஆக வேண்டும். அதே சமயம் சம்பாவும், குறுவையும் பொய்த்துப் போன நிலையில், உடனடித் தீர்வாக லட்சக்கணக்கான விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு மனம் மகிழும்படி மதிய உணவு போட்டதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இது தவிர,

● சித்ரா



பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
2 234 5622 / 23 / 24
தொலைநகல் :
044 - 2 234 5621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited, Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

கோயில்களில் தினசரி அன்னதானம். 'தமிழகத்தின் அன்னலட்சுமி' ஜெயலலிதா என்று சொல்லலாம். அதே சமயம் அமைச்சர்களை அடிக்கடி மாற்றாமல், அவர்கள் தன்னம்பிக்கை பெற்று, சிறப்பாகப் பணியாற்றும்படியும் முதல்வர் பார்த்துக் கொள்ள வேண்டும். சொல்ல மறந்து விட்டேனே... தீவிரவாதம் தலை தூக்காமல் இரும்புக்கரம் கொண்டு அடக்குவதைப் பாராட்டாமல் இருக்க முடியுமா?

விநாயகம் (பல்கலைக் கழக ஊழியர்):

தமிழகம் முழுவதும் கிட்டத்தட்ட இருபது லட்சம் ஹெக்டேர் தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்ற முதல்வர் எடுத்திருக்கும் முயற்சி, கண்டிப்பாகப் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். குறிப்பாக, இந்த நிலங்கள், கிராம சுய உதவிக் குழுக்களுக்குக் குத்தகைக்கு வழங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது போன்ற முற்போக்கான திட்டங்களில் முதல்வர் கவனம் செலுத்த வேண்டும். முந்தைய அரசு செய்த தவறுகளை விசாரித்து, நடவடிக்கை எடுக்கும் விஷயத்தில் கொஞ்சம் எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டும். அதையே வேலைத் திட்டமாகக் கொண்டிருக்கக் கூடாது. ஏனென்றால், அது அரசியல் ரீதியாக எதிர்மறையான விளைவுகளை உண்டாக்கும். முதல்வருக்கு இருக்கும் அரசியல் ஆதரவு காரணமாக, பல உறுதியான முடிவுகளை அவரால் எடுக்க முடியும்.

சித்ரா (தனியார் நிறுவனம்):

தாழ்த்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பள்ளி செல்லும் மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டம் மிகச் சிறந்தது; ஆசிரியர்களுக்கு கவுன்ஸலிங் முறையில் டிரான்ஸ்பர், மார்ச் மாதம் தோல்வியடையும் மாணவ, மாணவிகள், அக்டோபர் மாதம் மீண்டும் தேர்வெழுதி, ஒரு வருடம் வீணாகாமல் கல்லூரியில் சேர வசதி என்ற நல்ல அணுகுமுறைகள்; காவலர்களுக்கும், அதிகாரிகளுக்கும் சலுகை காட்டும் அதே சமயத்தில், லஞ்சம் வாங்குபவர்களை தயவு தாட்சண்யம் பார்க்காமல் உள்ளே தள்ளுவது, மக்கள் மத்தியில் ஆதரவைக் கூட்டும். அதிகாரிகளை, அடிக்கடி மாற்றாமல் முதல்வர் நிர்வாகத்தை நடத்த வேண்டும்.

சந்திப்பு: ரமா
படங்கள்: ராஜன்



காதலர் தினத்துக்காக என் கனவுக் கன்னிக்கு க்ரீட்டிங்ஸ் ரெடி பண்றேன்.
கெட்டுது குடி!
ஜல்லு மல்லு
—கதிர்
நீயும் யாரையாவது கற்பனை பண்ணி வைச்சிருக்கியா?
ஆமா. அவன் ஸ்லிம்மா, அழகா...
கொஞ்சம் குண்டா... ஆரோக்யமா... இருக்கிற ஆண்கள் பத்தி என்ன நினைக்கிறே?
நல்லா சாப்பிடுவாங்கன்னு தெரியுது.
!!
வர்ற காதலர் தினத்தன்னிக்கு என் காதல அவகிட்ட சொல்வேன்.
இல்ல, குண்டா இருக்கிறவங்களுக்கு நல்ல மனசு இருக்குமாம்
அப்படின்னு யார் சொன்னது?
குண்டான, ஆரோக்யமான ஒருத்தர் சொல்லியிருக்காரு



பேருந்தும் லாரியும் கிளப்பிய தூசும், சோடியம் விளக்கின் வெளிச்சமும், எட்டாமல் கொஞ்சம் தள்ளியிருந்த மரத்தடிதான் அவனுடைய வாடிக்கையான இடம். கார்த்திகை தீபம் போல் வரிசையாக அவன் திரி விளக்குகளை ஏற்றியிருந்தான். சிம்னியின் அரண் இல்லாமல் ஏதோ



தர்மத்திற்கு எரிந்து கொண்டிருந்தது. அவனுடைய அன்றைய படைப்பு கீதை சொல்லும் கண்ணன். தார் ரோட்டையே திரைச் சீலையாக்கி மிக நேர்த்தியாக வரைந்திருந்தான். வெறும் கண்ணாம்புக் கட்டியால் அந்த ஓவியத்திற்கு உயிர் கொடுத்திருந்தான்.

அவனுடைய பார்வை அவனுடைய ஓவியத்தில் தீவிரமாயிருந்தது. விழப் போகும் சில்லரைகளை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

திடீர் என்று ஒரு கூட்டம் அவனை முட்டித் தள்ளியது. அருகிலிருந்த நர்மதா அரங்கத்திலிருந்து கவர்ச்சி நடனம் பார்த்துவிட்டு வருகிற கும்பல் அது. வந்தவர்களில் ஓரிருவர் நின்று இவனது ஓவியத்தைப் பார்க்க, மெல்ல கூட்டம் சேர்ந்தது. பார்த்தார்களே தவிர, ரசித்துப் பாராட்டினார்களே தவிர, எவருக்கும் காசு போட மனம் வரவில்லை.

நின்றவர்களில் ஓர் இளைஞன் சொன்னான், ''இந்த ஆர்ட்டிஸ்ட் பொழைக்கத் தெரியாத ஆளா இருப்பான் போலருக்கு. போன செஞ்சுரியில வரைய வேண்டிய படத்தையெல்லாம் இப்போ போட்டா யார் பாப்பாங்க? இதையே கவர்ச்சிப் படமா போட்டிருந்தா நாலு காசாவது வந்திருக்கும்."


ஏற்கெனவே பசியினாலும், காசு போடாமல் வெறும் விமர்சனங்களை அள்ளி வீசியவர்களாலும் நொந்திருந்த ஓவியனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. எழுந்த வேகத்தில் அந்த இளைஞனின் சட்டையை இறுக்கிப் பிடித்தான்.

"இது கலைடா, கலை. கலைக்கும், கவர்ச்சிக்கும், வித்தியாசம் தெரியாதவனுங்கல்லாம் கமெண்ட் சொல்ல வந்துடறானுங்க" என்றவன் அவன் சட்டையை ஒரு உலுக்கு உலுக்கித் தள்ளினான்.

கீழே விழுந்த இளைஞன் ஆடையைச் சரி செய்து கொண்டு, ஓவியனை எதிர்க்கத் துணிவில்லாது திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்று விட்டான்.



வானத்தில் பளிச்சென மின்னல் ஒன்று வெட்டியது. பொட்டுப் பொட்டாய் மழைத் துளி விழுந்து சிதற ஆரம்பித்தது. சாரல் வலுத்து, ஓடிய நீரில் அந்த ஓவியம் கரைய ஆரம்பித்தது. ஓவியனின் கண்ணீரும் அதில் கலந்தது.

இருந்தாலும் அவனுக்குள் ஒரு திருப்தி. பழிக்கப்படுவதை விட அழிக்கப்படுவது மேல்.




"ரஜினியால் கூட அது முடியாது!"

அர்ஜுனோ, சரத்தோ இப்படிக் கேட்கத் தயங்குவார்கள்.



- கமல்ஹாசன்



நடிகர் கமலாகத் தெரியாமல், 'நல்லசிவம்'எனும், மனிதம் பேசும் நல்ல மனிதனாகத் தெரியும்படி, நடிப்பில் கூடு விட்டுக் கூடு பாய்ந்துத் திரும்பியிருக்கும் கமலை, அவரது ஆழ்வார்ப்பேட்டை அலுவலகத்தில் சந்தித்தோம்...

● *தீவிரவாதம் பூதாகாரமாய் அதிகரித்திருக்கும் இன்றைய சூழ்நிலையை முந்திக் கொண்டு, 'குருதிப்புனல்' கொடுத்த கமலை வியந்திருக்கிறோம். ஆனால் 'அன்பே சிவம்' மாதிரியான முயற்சிக்கு ஏன் இத்தனை காத்திருந்தீர்கள்?*

காத்திருந்தது பார்வையாளர்களாகத்தான் இருக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரை இதைப் பத்தாண்டுகளுக்கு முன்பு நினைத்திருந்தால் கூடப் பண்ணியிருக்க


முடியாது. காரணம், எனது பதினாறு வயதுத் தமிழ் எழுத்து இருபத்தாறில் இல்லை. இருபத்தாறு வயதில் எழுதியது முப்பத்தாறில் இல்லை. அதே தமிழ், அதே மொழிதான். ஒரு வேளை எனது இருபத்தாறு வயதுத் தமிழ் எழுத்தில் ஆளுமை அதிகமிருந்தது போலத் தோன்றியிருக்கலாம். அது தீபாவளி, இது பொங்கல். இது நிகழுதல். எனக்கே தெரியவில்லை. எதுவாக இருந்தாலும் இது ப்ரொக்ரெஷன்(முன்னேற்றம்).

● *அப்படியானால் கோபமாக நாத்திகம் பேசிய கமலின் கடவுள் கொள்கை இப்போது மாறி விட்டதா? இல்லை, மெல்ல மாறிக் கொண்டு வருகிறதா?*

நான் கோபமாக நாத்திகம் பேசிய காலங்களை இப்போது கேலியாகப் பார்க்கவில்லை. அது மிகவும் உன்னதமான உண்மை பேசிய நேரம். உள்ளத்தில் உள்ளதைப் பேசிய நேரம். உள்ளதைப் பேசுவதற்கு விவரமறியாத நேரம். ஆரம்பத்தில் அப்பா, அம்மா காட்டிய வழிப்படி, கேள்வியே கேட்காமல், ஆத்திகச் சலவை செய்யப் பட்டு, இஸ்திரி போடப் பட்ட நல்ல துணியாக இருந்தேன். பிறகு வெளி வெயில் பட்டு நாத்திக மழையில் நனைந்து, சுருங்கி, திரும்பவும் விடைத்து, அதன் பிறகு வேறு சலவைகள் செய்யப்பட்டு, கடைசியில் போட்டுக் கொள்வதற்கு சௌகரியமான துணியாக மாறினேன். அதுதானே முக்கியம்? அப்படிப்பட்ட ஒரு துணிதான் நான். இது பண்படுதலாகவும் இருக்கலாம். பழுது படுதலாகவும் இருக்கலாம். அதனால்தான் இதை ப்ரொக்ரெஷன் என்கிறேன்.

● *இந்தப் படத்தில் இந்துத்துவா மீது, மறைமுகமான தாக்குதலை கமல் தொடுத்திருக்கிறார் என்று சிலர் பேசுகிறார்களே?*

அப்படிப் பேசுகிறவர்கள் இருந்தால் அவர்கள் மீது எனக்குக் கோபம்தான் வருகிறது. 'ஹே ராமி'ல் கூடப் பூடகமாகத்தான் இருந்தது. இதில், அது கூடக் கிடையாது. 'அன்பே சிவம்' விளம்பரத்தில் பார்த்திருப்பீர்கள். கைகளை அகலமாக விரித்திருக்கிறேன்; எல்லோரும் வாங்க... இடம் அகலமாக, நிறைய இருக்கிறது. நீங்கள், குண்டு, ஒல்லி என்பது பற்றியெல்லாம் எனக்குக் கவலையில்லை. யாராக இருந்தாலும் அணைத்துக் கொண்டு விடுவேன் என்பதன் அடையாளம் அது. அந்த அன்பு வேண்டும். இது புரிந்தும் புரியாதது மாதிரிப் பேசுகிறவர்களைப் பற்றி எனக்குக் கவலையில்லை. இந்துத்துவா என்ன... என்னையும், என் வாழ்க்கையையும், என்னைச் சார்ந்தவர்களின் வாழ்க்கையையும் பாழாக்குவதற்கு கம்யூனிஸ்ட் காரணமாக இருந்தால், கம்யூனிஸ்ட்டையும் திட்டுவேன். வலியில் கத்தும்போது அநாதையாக இருந்தாலும், 'அம்மா' என்றுதான் கத்துவான். உனக்குத்தான் அம்மா இல்லையே என்று சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். இது நேச்சுரல் ரியாக்ஷன்!



● *இந்துத்துவா பற்றிய விவாதம் சூடு பிடித்திருக்கும் தருணம் என்பதால், இப்படிப் பேச வாய்ப்பு ஏற்பட்டிருக்கலாம் இல்லையா?*

இல. கணேசன் படம் பார்த்துவிட்டுக் கடிதம் எழுதியிருக்கிறார். இதற்குமேல் ஒரு நல்ல பாராட்டு இருக்க முடியாது. புயலின் மையம் அமைதியாக இருக்கும் என்பதற்காக அந்த இடத்தை நான் தேர்வு செய்யவில்லை. இது கெட்டிக்காரத்தனமாக நடுவில் நின்றதல்ல. என் நிலைமையில் நின்று அது நடுவாகப் போனது.

● *இந்தியாவின் இறையாண்மைக்கு இந்துத்துவா ஓர் அச்சுறுத்தலாக எழுச்சி பெற்று வருவதை ஒத்துக் கொள்கிறீர்களா?*

எதுதான் வரவில்லை? சீஸ் பர்கரிலிருந்து, இந்துத்துவா வரையிலும் எல்லாம் ஃபேஷனபிள். குக்கீஸில் போய் உட்கார்ந்து காப்பி குடிக்கிற மாதிரி ஆகி வருகிறது. அது நல்லதா என்று கூடத் தெரியாமல் குடிக்கிறார்கள். பக்கத்து வீட்டுக்

காரன் குடிக்கிறான், எனக்கும் வேண்டும் என்கிற மனித இயல்பின் மடத்தனம். இந்துத்துவாவும் கூட அது தான். இந்தியா ஒரு ஜனநாயக நாடு. இந்துத்துவாவை வெல்லுங்கள். அது ஒன்றும் முடியாததல்ல.

● *திருமூலர் குறிப்பிட்டுச் சொன்ன அன்பே சிவமெனும் அடிப்படை உண்மையை, மனித சமுதாயம் இன்னும் கூட முழுமையாக உணர்ந்து கொள்ளவில்லை, என்பதைத் தத்துவ நையாண்டியாகச் சுட்டிக் காட்டத்தானே இப்படியொரு தலைப்பைத் தேர்வு செய்தீர்கள்?*

இன்னும் ஒரு படி இறங்கி, அதை 'எளிய உண்மை' என்று சொல்ல வேண்டும். இதைத் திருமூலர் எழுதும் காலத்திலோ, எழுதுவதற்குக் கொஞ்சம் முன்னரோ உணர்ந்திருந்தார்கள் என்றால், இத்தனை சமணர்கள் செத்திருக்க வேண்டிய தில்லை. நாலடியாரை இழந்திருக்க வேண்டியதில்லை. எல் லாமே மதம் சார்ந்த இலக்கியம் என்பதால், இலக்கியத்தையும் தள்ளி வைத்துவிட்டார் களே என்கிற வருத்தம் எனக்குண்டு. நான் வெறும் கலைஞன். பெரியாரின் மகா ரசிகன். அங்கே போய்த் தொண்டனாக இருக்க வேண்டும். நான் சிவாஜியின் பரம ரசிகன். அவர் நடிப்பது மாதிரிதான் நான் நடிப் பேன் என்று சொல்ல மாட்டேன். அப்படி நடிக்கக் கூடாது. அதற் குத்தான் அவர் இருக் கிறாரே. குமுதம் மாதிரி திராநதி இருக்கக் கூடாது.

> **"இந்துத்துவா என்ன... கம்யூனிஸ்ட்டையும் திட்டுவேன்."**

● *இன்றைய தமிழ்ப் பத்திரிகைகள், ஊடகங்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

பாதசாரிகளுக்கு நடக்க, பிளாட்ஃபார்ம் என்பதே குறைந்து போய் விட்டது என்று நுகர்வோர் போராடுகிறார் கள். ஹுண்டாயும், பென்ஸும் ஓட மட்டும்தான் சாலையா என்று கேட்கிறார்கள். இதற்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட்டு விட்டு, எனக்குச் சைவம் பிடிக்குமா, அசைவம் பிடிக்குமா என்று கேட்டு, பெரிதாக போட்டோ போட்டுப் போடுகிறீர்கள். இப்போது கல்கியோடு பேட்டியென்றால், கல்கியைத் திட்டுவேன். கல்கியில் இதெல்லாம் கடுகளவு தானே? 'கண்ணியத்தையும், நடுநிலையையும் விடாமல் பிடித் துக் கொண்டிருக்கிறோமே' என்று கேட்கலாம். But you are also forced. எனக்கிருப்பதும் இதே பிரச்னைதான்! ஏன் சகலகலா வல்லவன் மாதிரி படத்தில் நடிக்கிறீர்கள் என்று கேட்டவர்களை நான் திரும்பிக் கூட பார்க்கவில்லை. கார ணம், நான் அடுத்து மூன்றாம் பிறை பண்ண வேண்டாமா?


'நடுப்பக்கம்' இருப்பதுதான் பத்திரிகை என்று எத்தனை விஷமத்தனமாக ஒரு பேட்டர்னை உருவாக்கி வைத்திருக் கிறோம். ஒருமுறை 'வண்ணத்திரை' பத்திரிகையின் ஓர் இதழைத் தயாரிக்கக் கூப்பிட்டார்கள். எனக்காக உங்கள் கோட்பாடுகளை மாற்றிக் கொள்ள வேண் டாம். நடுப்பக்கத்தில் சதையா, அதையே போட்டு விடுவோம் என்று, ஒரு எருமை மாட்டை பலி கொடுக்கும் கோரமான படத்தைப் போட்டேன். அடுத்த பக்கத்திலேயே 'நரபலி ஏன் கூடாது' என்ற பெரியாரின் கருத்தைப் போட்டேன். பிறகு கிசுகிசு வேண்டும் என்றார்கள். எனக்குத் தெரிந்த பத்திரி கையாளர்களைப் பற்றிக் கவலையோடு கிசுகிசு எழுதி னேன். இது ஏதோ கோபத்தில் பண்ணி யதில்லை. ஏனென்றால் நானே ஒரு பத்திரிகை யாளன்!

பத்திரிகைகள் கடமை தவறுகிறபோது, அதைச் சுட்டிக்காட்டக் கூட இங்கே குரல் கிடையாது. ஆனால் நான் அழுத்தமாகக் குரல் கொடுப்பேன். எந்த நடி கனும் இந்தப் பேச்சு பேச மாட்டான். ரஜினியால் கூட இது முடியாது.... அர்ஜுனோ, சரத்தோ இப்படிக் கேட்கத் தயங்கு வார்கள்.

அட்டை, படங்கள்:
யோகா

அடுத்த இதழில்....

கவிஞர் கமல்.... ஹாலிவுட் நடிகர் கமல்... தலைவர் கமல்... அப்பா கமல்... இசையமைப்பாளர் கமல்... மருதநாயகக் கனவு... மணிரத்னத்துடன் பிரச்னை.... — சூடும் சுவையுமாய்ப் பேசுகிறார் கமல்...



அமைச்சரவையில் அதிரடி மாற்றங்கள்!

மத்திய அமைச்சரவையில் மாற்றங்கள் செய்வது பிரதமரின் உரிமை. அவ்வாறு மாற்றங்கள் செய்யப்படும்போது, அவற்றுக்குப் பின்னே நிர்வாக ரீதியான காரணங்கள் மட்டும் இருப்பின் நாமும் அவற்றை மகிழ்ச்சியுடனும் கேள்வியின்றியும் ஏற்றுக் கொள்ளலாம்.

வாஜ்பாய் இம்முறை செய்துள்ள மாற்றங்களை அவ்வாறு கேள்வியின்றி ஏற்க இயலவில்லை.

தனியார் மயமாக்குதல் முயற்சிகளைத் துணிவுடனும் விடாமுயற்சியுடனும் நடைமுறைப்படுத்திய அருண் ஷோரிக்குக் கூடுதல் பொறுப்பு அளித்திருப்பதை ஏற்க முடிகிறது. தனியார் வரவால் ஆட்டங்கண்டிருக்கும் தொலைத் தொடர்புத்துறை இவரிடம் தரப்பட்டிருப்பதை வரவேற்கலாம்.

அதே சமயத்தில், இது நாள் வரை அப்பொறுப்பை வகித்த பிரமோத் மகாஜன், அமைச்சர் பதவி பறிக்கப்பட்டு கட்சிப் பணிக்கு மாற்றப்பட்டுள்ளது கவலையை ஏற்படுத்துகிற விஷயம். மகாஜனோடு அமைச்சரவையிலிருந்து வெளியேற்றப்படும் மற்ற மூவரும் (உமா பாரதி, வசுந்தரா ராஜே சிந்தியா, ராமன் சிங்) கூட கட்சிப் பணி ஆற்றும்படி கோரப்பட்டுள்ளனர்.

ஆக, நடந்தேறியிருக்கிற அமைச்சரவை மாற்றம், நாட்டை முன்னேற்ற வேண்டும் என்பதற்காக அல்ல; பிப்ரவரியில் நடக்கவிருக்கும் மாநிலத்




கல்கி



2003 பிப்ரவரி 9
சித்ரபானு தை 26
மலர் : 61
இதழ் : 28

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




தேர்தல்களிலும், அடுத்து வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலிலும், பி.ஜே.பியின் வெற்றியை உறுதிப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில்தான் அவை நிகழ்த்தப்பட்டுள்ளன. அதனால்தான், கூட்டணியின் இதர கட்சி அமைச்சர்களின் பொறுப்புகளில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. பிரதமருக்கு தேச நலனை விட, கட்சி நலன் முக்கியமாகிவிட்டது என்று தெரிய வருகிறது.

சட்ட அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட ஜனா கிருஷ்ணமூர்த்தி வேறு அமைச்சர் பதவி ஏற்க மறுப்பது அழகல்ல என்பது உண்மையே. ஆனால் அவரிடத்தில் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் சட்ட அமைச்சர் ஜெய்ட்லி, சட்டத்துறை சீர்திருத்தங்களில் தடாலடி அவசரம் காண்பிக்கக் கூடியவர். தேசிய நீதித்துறை கமிஷனை நிறுவும் முயற்சியில் இறங்கியுள்ள சட்ட அமைச்சகம், அதனை அரசியல் கலப்பின்றி நிறுவுதல் அவசியம். சற்றே அரசியல் புகுந்தாலும் விரைவில் நீதித்துறையே நடு நிலை தவறவும் நீர்த்துப் போகவும் நேரிடும். அப்புறம் இந்த நாட்டைக் கடவுளும் காப்பாற்ற முடியாது.

கட்சி நலன் கருதி நிறைவேற்றியுள்ள மாற்றங்கள் கட்சிக்கேனும் எதிர்பார்த்த பலன்களை அளிக்குமா?

பிரமோத் மகாஜன், சுஷ்மா சுவராஜ், உமாபாரதி, வசுந்தரா ராஜே சிந்தியா போன்றோர் வாக்குச் சாதுர்யமும் சிறந்த ஆளுமையும் கொண்டவர்கள். ஆனால் இவர்கள் பி.ஜே.பி. ஆட்சியின் எந்த சாதனையை முன்னிறுத்தி வோட்டுக் கேட்க முடியும்..? தோண்டித் துருவிப் பார்த்தாலும் பட்டியலிட எதுவும் இல்லை. விலைவாசி உயர்வு கட்டுப்படுத்தப்பட்டது என்றோ, மதக் கலவரங்கள் குறைந்தன என்றோ, பங்குச் சந்தை உயிர்ப்பிக்கப்பட்டது என்றோ, தொழில் முன்னேற்றம் நிகழ்ந்தது என்றோ கூற இயலாத நிலையில், பி.ஜே.பி. தனது 'பரிவார்' தேவதைகளை நம்பித்தான் தேர்தல் களத்தில் இறங்கும். சங் பரிவாரின் ஹிந்துத்வா செயல் திட்டம்தான் தேர்தல் ஆயுதமாகப் பிரயோகமாகும் (குஜராத் தேர்தல் வெற்றிக்குப் பிறகு இந்தச் செயல் திட்டம் பகிரங்கமாக்கப்பட்டும்



இருக்கிறது.)

பிரமோத் மகாஜனும், சுஷ்மா சுவராஜும், உமா பாரதியும் இன்னும் பிறரும் சங்க் பரிவார் அமைப்பின் ஊழியர்களாக இயங்கி வோட்டுக் கேட்பதை நாம் பார்க்கப் போகிறோம்.

சிறுபான்மையினரின் அச்சத்தைத் தூண்டி, விரோதத்தையும் ஏற்கெனவே சம்பாதித்து விட்டது பி.ஜே.பியின் ஹிந்துத்வா அச்சுறுத்தல். அண்டை நாடான பாகிஸ்தானுடன் உறவுகள் மேலும் நலிந்து போய் குட்டிச் சுவராவதற்கும் காரணமாக இருந்திருக்கிறது. உமா பாரதி போன்ற பகிரங்க சங் பரிவார் ஆதரவாளர் ஒருவரைத் தேர்தல் பணியில் ஈடுபடுத்துவதன் மூலம் நிலைமையை மேலும் மோசமாக்குகிறார் பிரதமர்.

வாஜ்பாய் அரசு தனது சாதனையாகக் கூறிக் கொள்ளக் கூடிய ஒரு விஷயம் கூட்டணி ஒன்றைச் சிதறவிடாமல் காத்ததுதான். ஆனால், அதைச் சொல்லி பா.ஜ.க. வாக்கு கேட்கப் போவதில்லை; தனித்து வெற்றி பெறவே திட்டமிடுகிறது.

ஹிந்துத்வா செயல் திட்டமானது, ஹிந்துக்கள் அல்லாதாரை வெறுப்புடன் நோக்குகிறவரையில், அதனை ஆதரிக்கும் எந்தக் கட்சியும் அரசம் உருப்பட முடியாது. சிறுபான்மையினரை மகிழ்வித்து வோட்டுக் கேட்பது எத்தனை அறிவீனமோ, அத்தனை அறிவீனம் ஹிந்து பெரும்பான்மையினரின் மத உணர்வுகளைத் தூண்டி வோட்டுக் கேட்பது. இந்திய சமுதாயம், பல ஜாதி மதங்களின் சேர்க்கை. அதை பலப்படுத்தி, அன்பினால் ஆள முற்படாமல் பிரிவினையை வளர்த்து, விரோத உணர்வுகளைத் தூண்டும் முயற்சி, இறுதியில் அவ்வாறு தூண்டுவோரையே அழிக்கும்.

பாரதிய ஜனதா, இந்நாட்டின் வரலாற்றில் நிலைத்து நற்பெயர் பெற வேண்டுமானால், அமைச்சர்களைக் கட்சிப் பணிக்கு அனுப்பி வைத்தால் போதாது. கட்சியைக் காட்டுமிராண்டித்தனமான சக்திகளிடத்திலிருந்து காப்பாற்றி, சொந்தக் கால்களில் நிற்கச் செய்ய வேண்டும். சுதந்திரமாக இயங்கச் செய்ய வேண்டும். ○

மனசெல்லாம்...

தார் காய்ச்சும் இயந்திரம் சீற்றத்துடன் உறுமியது. என் வலக்கரத்தை மெத்தென்று பிடித்திருந்த கை அழுந்தி விரல்களை இறுக்கியது. இடது பக்கம் இந்துவின் உடல் நெருங்கி வந்து காலோடு ஒட்டிக் கொண்டது.

பேரன் ஒரு பக்கம், பேத்தி ஒரு பக்கம் வட்டக் கருவிழிகளில் பிரமிப்பு வழிந்தோட என் மீது



ஒட்டி நின்றனர்.

தெரு முனையில் தொடங்கி தார்ச் சாலை போடும் மகாமகோத்ஸவம் ஐந்தும் ஆறும் வயதான இந்த பாரதப் பிரஜைகள் பார்த்தறியாத வைபவம்.

ரோட் இஞ்சினையும் ஹைதர் அலி காலத்துத் தார் காய்ச்சும் கரும்பூதத்தையும், ரப்பர் டயரைக் காலில் கட்டிக் கொண்டு வேலை செய்த பணியாளர்களையும் புல்லட்டில் தொப்பையைச் சாய்த்து நின்று ராஜபார்வை செலுத்திய கான்ட்ராக்டரையும் மாறி மாறி வியந்த வண்ணமிருந்தனர் குழந்தைகள்.

ராஜவீதி அல்ல நாங்கள் வசிக்கும் தெரு. ஒரு டஜன் வீடுகளே கொண்ட எம்.ஜி.ஆர். நகரின் ஏழாவது குறுக்குச் சந்து. பொய்த்த மழையிலும் பெய்த மழையிலும் உருக்குலைந்து கிடந்த அதனைச் செப்பனிட கவுன்சிலருக்கு மனு மேல் மனு செய்ய வேண்டியிருந்தது. எங்கள் தெருவில் என்ன அமைச்சரா, வி.ஐ.பி யா..? அத்தனை பேரும் நாணயமாய் வரி செலுத்தும் நடுத்தர வர்க்கம்...

கடைக்கோடி வீட்டிலிருந்து இந்த முனைக்கு நடந்து வருவதற்குள் எத்தனை பதிவுகள்?

"ரோடு போடறாங்க சார்!"... ஜெர்மனியிலிருந்து 'ஆட்டோபான்'னை இறக்குமதி செய்துவிட்ட களிப்பு!

"நான் அப்பவே சொன்னேன் பாருங்க... மனு கொடுத்தா வேலை நடக்கும்..."

"யுனைடெட் வி ஸ்டான்ட்..."

"இனிமே நைட்ல கவலையில்லாம கைனடிக்ல வரலாம்ப்பா..."

"இதே மாதிரி லெட்டர் தந்து வாட்டர் பிராப்ளமையும் தீர்த்துடணும்..."

ஜல்லியும் தாரும் கலந்து நெரித்து பள்ளங்களை நிரப்பி சுமார் முப்பதடி நீளத்துக்குப் பளபளத்துக் கொண்டிருந்தது சாலை. ஹா! மக்களாட்சியின் ராஜமார்க்கம்! இந்த சாலைப் பணி, எங்கள் ஜனநாயக உரிமைக்குக் கிடைத்த வெற்றி!

"தாத்தா!" அதோ பாரு... - ஜெய் சுட்டிய திசையில் ஒரு குழந்தை... உடம்பில் பொட்டுத் துணியின்றி ஒரு குழந்தை... புதுச் சாலையில் - ஸ்டீல் தட்டொன்றைக் கவிழ்த்துப் போட்டு அதன் மேல் உட்கார்ந்திருந்தது. ஏதோ ஒரு சாலைப் பணியாளரின் செல்வக் களஞ்சியம்!

"சாப்பாட்டுத் தட்டு மேல உட்கார்ந்திருக்கு பாப்பா" - இந்து கொஞ்சம் கலவரத்துடன் என் முகம் பார்த்துச் சொன்னாள்.

இதற்கு யார் மனு கொடுக்கப் போகிறார்கள்....!

சீதா ரவி



பொன்னிறத்தில் பளபளக்கும் ஜோதிகாவின் தலைமுடியில் தமிழ் கூறும் நல்லுலகமே மயங்கிக் கிடக்க, மும்பையிலிருந்து வந்த சன்ஸில்க் கூந்தல் நிபுணர்கள் சொன்ன விஷயம் இலேசாகத் துணுக்குற வைத்தது.

“அதெல்லாம் ஓல்டாகிப் போச்சு. எலெக்ட்ரிக் ப்ளூ நிறத்தில் முடிக்குச் சாயம் பூசுங்கள். அதுதான் லேட்டஸ்ட் 2003 ஹேர் ஸ்டைல்!” என்றார் சமந்தா கோச்சர். கூடவே ஜாவேத் ஹபீப். ஒரு லட்சம் ஹேர் ஸ்டைல்களை உருவாக்கி, லிம்கா சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்ற பிரபல ஹேர் - ஸ்டைலிஸ்ட்!

இவர்கள் வருகையை எப்படியோ மோப்பம் பிடித்துக் கொண்ட கல்லூரி மாணவ மாணவிகள், கேள்வி மேல் கேள்வி கேட்டு கூந்தல் பற்றிய அறிவை வளர்த்துக் கொண்டதோடு, இலவச ஹேர் ஸ்டைல் க்யூவிலும் முட்டி மோதினார்கள்.



சமந்தாவும் ஹபீபும் பகிர்ந்து கொண்ட தலை முடி ஆரோக்கிய ரகசியங்களில் ஒரு சில :

● தலையைத் தொங்கவிட்டு, கீழிலிருந்து மேலாக வாரி, அழுக்கு, தூசியை அகற்றிய பின்பு, ஷாம்பூ பயன்படுத்தவும். இதனால் தலைப் பகுதியில் இரத்த ஓட்டம் வேகமெடுக்கும் என்பதோடு, ஷாம்பூவும் அதிகமாகச் செலவாகாது.

● வாரம் ஒரு முறையாவது எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும். வெதுவெதுப்பான எண்ணெயைத் தலைக்குத் தடவி, மசாஜ் செய்யவும். சூடான நீரில் டவலை, முக்கி எடுத்துப் பிழிந்து, தலையில் கட்டிக் கொள்ளவும். பத்து நிமிடம் கழித்துக் குளிக்க, மயிர்க் கால்கள் பலம் பெறும். முடி உதிர்வது நிற்கும்.

● தலைமுடிக்கு டை பூசும் போது அதிலிருக்கும் அம்மோனியாவின் அளவு பற்றித் தெரிந்து கொள்ளுங்கள். மூன்று சதவிகிதம் அம்மோனிய கலப்பு இருப்பது நார்மலான அளவு! டை பூசிய அன்று நிறையத் தண்ணீர் பருக வேண்டும். இதனால் அம்மோனியாவின் வீரியம் குறையும்.

— ஐஸ்வர்யா

'இந்துத்துவா' என்ற வார்த்தை சமீபத்தில் எல்லார் வாயிலும் விழுந்து எழுந்தது. சிலர் தங்களுடைய 'துவா'க்களை (கற்பனையாக) விளக்க ஆரம்பித்தால்...



உண்மையில் நான் படித்தது உயிர் காக்கும் 'மருத்துவா'தான். ஆனால் மரங்களை வெட்டிச் சாய்த்து சாலை நடுவே போட்டு நாங்கள் செய்த சாதனைதான் எங்களுக்கு 'வளர்ச்சி'யைக் கொடுத்தது. வன்னிய வீரப்பனுக்கு ஆதரவாக நாங்கள் வக்காலத்து வாங்குவதும் மரங்கள் மேலுள்ள பாசத்தால்தான்! ஆனால் கட்சியின் இப்போதைய உயிர்ப்பிரச்னை, 'மகனுக்கு முக்யத்துவா'தான்! அன்புமணியின் முன்னேற்றத்தில் கட்சிக்குள்ள அக்கறையால்தான், மகன்களை முன்னேற்றும் கட்சியுடன் கூட்டணி கண்டுள்ளேன்! அடுத்த தேர்தல் வரை(யாவது) அது தொடரும் என நினைக்கிறேன்(!)

அரசியல் சிரித்துவா!



இந்துத்வாவிற்கு எதிராக 'மதச் சார்பற்ற முன்னணி' சார்பாக நான் கையில் எடுத்ததுதான் 'சந்துத்வா' கொள்கை. சிறு சந்து கிடைத்தாலும் புகுந்து விடும் சென்னை நகர ஆட்டோவைப் போல, இந்து மதத்திலுள்ள இண்டு இடுக்கிலெல்லாம் நுழைந்து, குடாய்ந்து, அதிலுள்ள குறைகளையும் குற்றங்களையும் வெளிச்சம் போட்டுக் காட்டுவதே, 'சந்துத்வா'வின் ஒரே நோக்கம்! முள்ளை முள்ளால் எடுப்பது போல, இந்து மத ஜாதி துவேஷங்களை ஆயுதமாகக் கொண்டே 'இந்துத்துவா'வை எதிர்கொள்ள நினைக்கும் என் முயற்சிகளுக்கு ஆதரவு தராமல், வழக்கம் போல் மார்க்சிஸ்டுகள் மௌனம் காப்பதுதான் கவலையளிக்கிறது.



‘மகத்தில்’ பிறந்து ஜெகத்தையே ஆளத் துடிக்கும் என்னுடைய ‘மகத்துவா’, எதிலும் விட்டுக் கொடுக்காத தன்மையாகும். நாகப்பா கடத்தலிலும், காவிரிப் பிரச்னையிலும் அதை நிரூபித்திருக்கிறேன். அடிக்கடி அமைச்சர்களை மாற்றுவது, அன்னமிடுவது, ஊழல் பண்ணுவது, பரிகாரம் செய்வது, ஊழல் வழக்குகளிலிருந்து விடுபடுவது... என்று, என் ‘மகத்துவா’க்களை அடுக்கிக் கொண்டே போகலாம்!



போலீஸ்காரர்களையும், கூடயிருந்தே காட்டிக் கொடுத்தவர்களையும், வரிசையாக போட்டுத் தள்ளி, ‘அமரத்துவா’ கொடுத்துக் கொண்டிருந்த என் (கொள்)கையை, நடிகர் ராஜ்குமாரையும் அப்படியே ‘முடித்து விடாமல்’ கட்டிப் போட்டது... ‘ரூபாய் 20 கோடி’ என்ற மந்திரம்தான். ஆனால் பேசிய பணம் முழுவதும் என் கைக்கு வந்து சேரவில்லை. அதன் விளைவுதான், ‘அமரத்துவா’வை நாகப்பாவிலிருந்து மறுபடியும் தொடர ஆரம்பித்திருப்பது. இனி அதை யாராலும் நிறுத்த முடியாது - மத்திய படைகள் வந்தாலும்கூட.



‘என் வழி தனி வழி’ என்பது தெரிந்ததுதான். அந்த ‘தனித்துவா’தான் என் கொள்கையும்கூட! மற்ற நடிகர்கள் எல்லாரும் கட்சி ஆரம்பித்து ஆட்சியைப் பிடிக்க ஆலாய்ப் பறக்கும் நேரத்தில், மக்கள் இயக்கம் ஆரம்பிக்கவே யோசிப்பதுதான் என்னுடைய ‘தனித்துவா!!’ நான் ‘சொன்னதைச் செய்வேன்; சொல்லாததையும் செய்வேன்’ ஆனால் எப்போது செய்வேன் என்பது எனக்கே தெரியாமலிருப்பதுதான் என் ‘தனித்துவா’வின் ஸ்பெஷாலிட்டி!

சாவித்திரி வேங்கடசுப்பிரமணியன்

ஆசை ஆசையாய்

"அந்தப் பொம்மையை எடுத்து விளையாடாதீங்கன்னு உங்க ரெண்டு பேருக்கும் எத்தனை தடவை சொல்றது?" என்று கத்திய அப்பாவின் குரல் கேட்டு ரிஷியும்



சிநேகாவும் திகைத்து நின்றனர்.

"இப்ப எதுக்கு இப்படிக் கத்தறீங்க? இரண்டு பேரும் பத்திரமாத்தான் பார்த்துட்டு இருக்காங்க'' என்றபடி வந்தாள் விமலா.

''எவ்வளவு பொம்மை வாங்கிக் கொடுத்திருக்கேன். இதை மட்டும்தான் தொட வேண்டாம்னு சொல்றேன். உங்களுக்கு ஏன் புரிய மாட்டேங்குது?'' என்ற கண்ணன், ரிஷியின் கையிலிருந்த பொம்மையை வெடுக்கென்று பிடுங்கி ஷோ கேஸில் வைத்தான்.

அடுத்த வாரம் கண்ணனின் நண்பன் பாலாஜி தன் மனைவி மகனுடன் வரவே, எட்டு ஆண்டுகளுக்குப் பின் சந்தித்த சந்தோஷம் எல்லோருக்கும்.

''அங்கிள், எனக்கு அந்த மாட்டு வண்டி பொம்மை வேணும்'' என்றான் ராகுல். ரிஷி, சிநேகாவைவிடப் பெரியவன் அவன். கண்ணன் சந்தோஷமாக எடுத்துக் கொடுத்தான்.

"சூப்பர் ஆர்ட் பீஸ்! எங்கே வாங்கினே?'' என்றான் பாலாஜி.

"அஸ்ஸாம் போனபோது வாங்கினேன். மூங்கிலில் எவ்வளவு கலையம்சத்தோட செஞ்சிருக்காங்க பார்!'' என்றான் பெருமிதத்துடன்.

கொஞ்ச நேரம்தான். ராகுல், மாடு, சக்கரம், வண்டி என பார்ட் பார்டாகப் பிய்த்துப் போட்டுவிட்டு வெளியே ஓடிவிட்டான்.

"அய்யோ... இப்படிப் பிச்சுட்டானே...'' என்று சொல்லிக் கொண்டே, சக்கரத்தை ஒட்ட வைக்க முயற்சி செய்தான் பாலாஜி.

''குழந்தைங்கன்னா அப்படித்தான். விடு'' என்று சமாதானம் செய்தான் கண்ணன். சிறிது நேரத்தில் அவர்கள் கிளம்ப, கண்ணன் பாலாஜி குடும்பத்தை ஸ்டேஷனுக்குப் போய் வழி அனுப்பி விட்டு வந்தான்.

வீட்டுக்குள் நுழைந்ததும் விமலா பார்த்த பார்வையில் எல்லாம் புரிந்தது. கண்ணனுக்கு மனசு வலித்தது.

"ஸாரிடா" என்றபடி சிநேகாவையும் ரிஷியையும் இழுக்க, 'ஓ' வென இருவரும் அழுதனர்.

சிநேகாவின் மடியிலிருந்த மாட்டு வண்டியின் ஒற்றைச் சக்கரம் கீழே உருண்டோடியது...

எஸ். சுஜாதா

பாய்ஸ்!

மகேஷ்வரன்

"**சா**ர்... எம்பேரு... தினா! இவன்... முருகு... இது... சக்திவேல்... இது... மூர்த்தி!"

பெயர்களைக் கூறி அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். தொடர்ந்து தாங்கள் தேடிவந்த விஷயத்தை ஒப்பித்தார்கள்.

"நாங்க நாலு பேருமே டிகிரி முடிச்சிட்டு வீட்ல சும்மா இருக்கோம் சார். தேன்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவங்க. வேலைக் கிடைக்கற வரைக்கும், தண்டமா பொழுதைக் கழிக்காம உருப்படியா ஏதாவது செய்யணும்னு ஆசைப் படறோம் சார்!"

இருட்டறையில் தீக்குச்சியை உரசியது போல சோம சுந்தரத்தின் முகத்தில் வெளிச்சம் பரவியது.

"ஒழிக்கணும் சார்! மொதல்ல இந்த கள்ளச் சாராயத்தை ஒழிக்கணும்" ஆவேஷமாய் பேசினார்கள்.

"அதுக்கு நான் என்ன பண்றது தம்பி..?"

"நீங்க ரிடையர்டு வாத்யார்! மத்தவங்க தெய்வமாப் பார்க்கற நல்ல மனுசன். உங்க வார்த்தைக்கு இருக்கற மதிப்பே தனிதான். நீங்க எங்களுக்கு ஒத்துழைப்பு தந்தா கள்ளச்சாராயத்தை அடியோட ஒழிச்சுடலாம்."

நால்வரும் பேசிக்கொண்டே போனார்கள்.

முதலில் தயங்கினாலும் பிறகு சம்மதித்தார் சோமசுந்தரம். அவர்களுடன் சேர்ந்து தெருத்தெருவாய் நடந்தார். கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும்படி, பெண்களோடு போலீஸ் ஸ்டேஷன் வாசலில் நின்று கூக்குரல் எழுப்பினார். கலெக்டருக்கு மனு கொடுத்தார். பீப்பாய்கள், பானைகள் அடித்து நொறுக்கப்பட்டன.

"**நீ**ங்க மனுசனே இல்ல சார்! கடவுள்!"

சோமசுந்தரம் வாத்தியாரைக் கையெடுத்துக் கும்பிட்டார்கள். கர்வம் துளியும் இல்லாத சின்னப் புன்னகையைச் சிந்தி அவர்களுடைய முதுகில் தட்டிக் கொடுத்தார்.

மூன்று மாதங்கள் கழிந்திருந்தன.

தஞ்சாவூரில் உறவினர் வீட்டுத் திருமணத்தில் கலந்துக் கொண்டு விட்டு பஸ் ஸ்டாண்ட்டிற்கு வந்திருந்தார்கள், சோமசுந்தரம் வாத்தியாரும் கல்யாணி அம்மாளும்.



இனி மினி பஸ் ஏறி கிராமத்துக்குச் செல்ல வேண்டும்.

பஸ்ஸுக்காக காத்திருந்தார்கள்.

நேர் எதிரே...

ஜன நெருக்கடி மிகுந்த அந்த ரோட்டில் 'ப்ரெண்ட்ஸ் ஒயின்ஸ்' என்ற புத்தம் புது பெயர்ப் பலகையோடு ஒயின் ஷாப் திறக்கப்பட்டிருந்தது.

அந்த நான்கு இளைஞர்களில் ஒருவன் கல்லாவில் அமர்ந்திருந்தான்.

மற்றவர்களும் கடைக்குள்தான் இருந்தார்கள்.

சுற்றுப் புற கிராமங்களில் சாராயம் ஒழிக்கப்பட்டு விட்டால் குடிப்பவர்கள் டவுனுக்குத் தானே வர வேண்டும்? அவர்களுடைய வியாபாரத் தந்திரம் புரிந்தது!

எட்டு மைல்!

மார்ஷல் மாதர்ஸ் ஒரு பாப் பாடகர். இந்தப் பெயரில் அவரை யாருக்கும் தெரியாது. அவரது பாப் உலகப் புனை பெயர் எமினெம். அமெரிக்க பாப் உலகில் அதிகம் பேசப்படும் நபர் இவர் தான். எமினெம் என்ற பெயரைச் சொன்னாலே முகம் சுளிப்பவர்கள் தான் அதிகம் இருந்தார்கள். அமெரிக்க அம்மாக்கள் தங்கள் குழந்தைகளை இவர் பாடல்களைக் கேட்க விட மாட்டார்கள். இசை விழாக்கள், பொது நிகழ்ச்சிகளிலெல்லாம் இவரைக் கண்டால் பயப்படுவார்கள். அப்படி என்ன கோளாறு இவரிடம்? இவர் பாடல்களும், அதில் சொல்லும் கருத்துக்களும் இவரது மோசமான இமேஜும் தான் காரணம்.



இதெல்லாம் இரண்டு வருடங்களுக்கு முன்பு. இப்போது இந்த எமினெம் தான் அமெரிக்க பாப் உலகின் மன்னன். அவரது பாடல்கள் கடந்த இரண்டு வருடங்களில், இது வரை எந்த ஒரு பாடகருக்கும் விற்காத அளவு, மூன்று கோடி காப்பிகள் விற்று விட்டன. சமீபத்தில் வழங்கப்பட்ட அமெரிக்க இசை விருதுகளில் நான்கு விருதுகளை வென்றிருக்கிறார். எல்லாவற்றிற்கும் சிகரமாய், அவர் முதன் முறையாக நடித்த '8 மைல்' என்ற திரைப்படம் சூப்பர் ஹிட் ஆகி, ஹாலிவுட்டிலும் அவரைப் பெரிய ஸ்டார் ஆக்கிவிட்டது. இந்தப் படத்தின் பாடல்கள் ஒரே வாரத்தில் எட்டு லட்சம் காப்பிகள் விற்றன. '8 மைல்' படம் கிட்டத்தட்ட அவர் சொந்தக் கதை என்று சொல்லப்படுகிறது. ஒரு கார் தொழிற்சாலையில் வேலை செய்யும் ஒரு சாதாரண இளைஞன், தன் குடிகார அம்மா, அவளைக் கொடுமைப்படுத்தும் காதலன், ஏழ்மை, அவன் வாழும் பகுதியின் ரவுடியிசம் என்று எல்லாத் தடைகளையும் மீறி, ஒரு பெரிய ராப் பாடகனாக ஆவது தான் கதை. இந்தப் படத்தின் வெற்றி, இவரது தனிப்பட்ட இமேஜுக்குக் கிடைத்த வெற்றி என்று கணிக்கப்படுகிறது. இன்று வரை இணையில்லை என்று கருதப்பட்ட அமெரிக்காவின் பாப் சூப்பர் ஸ்டாராகிய எல்விஸ் பிரெஸ்லியுடன் எமினெம்மை ஒப்பிட ஆரம்பித்து விட்டார்கள். அமெரிக்காவின் பிரபல பத்திரிகைகள் முதற்கொண்டு அவர் புகழ் பாட ஆரம்பித்து விட்டன.

இந்த சர்ச்சைக்குரிய பாடகரின் வெற்றி, இசைத் துறையின் பரிணாம மாற்றமா, இல்லை அமெரிக்கச் சமுதாயத்தின் சீரழிவா என்பதுதான் கேள்வி!

\- ஆனந்த் ராகவ்

மகளிர்க்கு மட்டும்...

67 விழுக்காடு



கட்டணச் சலுகை

உலக மகளிர் தினம்

'மார்ச் 8, 2003'

இத்தினத்தை முன்னிட்டு மகளிர்க்காக CSC வழங்கும் 67 விழுக்காடு கட்டணச் சலுகை.

COURSES	Actual Fee Rs.	You pay 33% fee Rs.
HDCA (One Year)	18,800	6,200
DMO (MS OFFICE, INTERNET - 2 months)	3,600	1,200
DUC (UNIX, C & C++ - 4 months)	5,800	1,900
PCP (Foxpro, Ms-Office & Internet -4 Months)	5,800	1,900

CSC®

COMPUTER EDUCATION

AN ISO 9001 : 2000 CERTIFIED INSTITUTION

BOON FOR MIDDLE CLASS

Contact nearest CSC centre

www.cscindiajobs.com

லேசா... லேசா...!

வயது பதினாறு : பஸ்ஸில் கூட்டமாய் இருந்தது. கூட்டமெல்லாம் ஏறி முடியட்டும் என்று சங்கர் காத்திருந்து ஏறினான். படிக்கட்டில் என்னவோ தட்டுப்பட குனிந்தான். கறுப்பு நிற பர்ஸ் கிடந்தது. எடுத்துப் பார்த்தான். நிறைய நூறு ரூபாய்த் தாள்கள்.



சங்கரின் நண்பர்கள் உற்சாகமானார்கள். "செம லக்குடா! கொடைக்கானல் டூருக்குப் போக காசு இல்லேன்னு உங்கப்பா சொல்லிட்டாருன்னு ரொம்ப வருத்தப்பட்டுக்கிட்டு இருந்தே இல்லே! அப்படியே அமுக்கு'' மகி சொன்னான்.

''சே... சே...! யாரோட காசோ என்னவோ! நமக்கு எதுக்கு?"

"பெரிய்ய புத்தரு இவரு. பணத்தைக் கொடுடா. பங்கு போட்டுக்கலாம்!" ரவி பர்ஸைப் பிடுங்கினான்.

"பர்ஸைத் தொலைச்சவங்க எவ்வளவு தவிச்சுப் போவாங்க. உரியவங்கக் கிட்டே சேர்க்கிறதுதான் சரி" என்று சொன்னவன். "இங்க ஒரு பர்ஸ் கிடக்கு. இது யாரோடது?" என்று சத்தமாகக் குரல் கொடுத்தான்.

சில நிமிட சலசலப்புக்குப் பிறகு, வயதான பெரியவர் ஒருவர், "தம்பி அது என் பர்ஸ்தாங்க! விஸிட்டிங் கார்டுலே சங்கரன், மீனாட்சி நகர்னு இருக்கும். பாருங்க" என்றார். பெரியவர் சொன்னது சரிதான்.

"ரொம்ப தாங்க்ஸ் தம்பி. பெண்டாட்டி கண் ஆபரேஷனுக்கு கடன் வாங்கின பணம்'' அழுதே விடுவார் போலிருந்தது. ரவியும், மகியும் முறைக்க, சங்கர் ஹீரோ போல உணர்ந்தான்.

வயது முப்பத்தாறு : சங்கர் மிகவும் பயத்தில் இருந்தான். இன்னும் இரண்டு நாளில் வீட்டுக்கடனுக்கான மாதத் தவணை கட்டாவிட்டால், நோட்டீஸ் வந்துவிடும். எப்போதும் ஒழுங்காகக் கட்டிவிடுபவன்தான். இந்த மாதம் குழந்தைக்கு திடீரென்று உடம்பு சரியில்லாமல் போய், ஏகப்பட்ட செலவாகிவிட்டது. பணத்துக்கு என்ன செய்வது என்று ஏகப்பட்ட மன உளைச்சலுடன் தெருவில் நடந்து கொண்டிருந்தபோது அந்தப் பர்ஸ் கண்ணில் பட்டது.

சட்டென்று எடுத்துக் கொண்டான். சுற்றிலும் பார்த்தான். யாருமில்லை. பர்ஸின் உள்ளே மூவாயிரம் ரூபாய் இருந்தது. அப்பாடா! இரண்டு மாச வட்டியைக் கட்டிவிடலாம்.

பணத்தை மட்டும் எடுத்துக் கொண்டு பர்ஸைத் தூக்கிப் போடப் போனான்.

"பதினாறு வயதில், இதே போன்ற சம்பவம் நடந்தபோது, நேர்மையாக பர்ஸைத் திருப்பிக் கொடுத்த நீ இப்படிச் செய்வது சரியா?" என்று மனசாட்சி உறுத்தவே ஒரு முடிவுக்கு வந்தான்.

அருகிலிருந்த டெலிஃபோன் பூத்துக்குப் போனான். "ஸார்.. என் பேர் சங்கர்.. உங்க ஐ.டி. கார்டுலே இருந்து ஃபோன் நம்பர் கிடைச்சது. உங்க பர்ஸ் நடுரோட்டுலே கிடந்தது. நான் பத்திரமா எடுத்து வைச்சிருக்கேன்!" என்று தகவல் கொடுத்துவிட்டு ஃபோனை வைத்தான்.

சங்கர் மீண்டும் ஒரு முறை ஹீரோ போல உணர்ந்தான். மனம் இலேசானது!

யோகி

ராமசந்திரா!

"உங்கப்பா செய்யறது கொஞ்சமாவது நல்லாயிருக்கா?" ஜகதா கோபத்துடன் கேட்டாள்.

"அப்படி அவர் என்ன செய்துட்டார்?" என்றான் பத்ரன் புரியாமல்.

"உங்க பிள்ளை மனோவோடு ஜாகிங் போயிருக்கார். வயசு அறுபதைத் தாண்டியாச்சு."

"அப்பா ஏழு வயசிலிருந்தே ஜாகிங் போறார். இப்போ ஏன் புதுசா சொல்றே?"

"சரி, அதுக்காக. மனோ காலேஜ் பையன். அவனுக்குச் சரியா இவரும் ஓடணுமா? இல்லை ஓடத்தான் முடியுமா? எங்கேயாவது சறுக்கி விழுந்து காலை முறிச்சுக்கப் போறார்"

"அதெல்லாம் மாட்டார்"

மறு நாள் பத்ரன் ஆபீசிலிருந்து வீடு திரும்பியபோது நிசப்தமாக இருந்தது.

"எங்கே எல்லாரும்?" ஜாடையாகக் கேட்டான்.

"மறந்து போச்சா? மனோ தன் பிறந்த நாளுக்கு பிஸ்ஸா ஆர்டர் கொடுக்கறேன்னான். உங்கப்பாவும் ஸ்கூட்டர்லே அவனோடு போயிருக்கார். எல்லாத்துக்கும் முந்திரிக் கொட்டை மாதிரி முதல்லே கிளம்பிடறார்"

"பேரன் கூப்பிட்டான், போயிருக்கார். அதுக்கு நீ ஏன் அலுத்துக்கறே?"

"இந்த வயசிலே சீஸ் அப்பி வைச்ச பிஸ்ஸா சாப்பிட்டால் அவர் உடம்புக்கு ஒத்துக்குமா? கொலஸ்ட்ரல் ஏறிடாதா?"

"இப்போதைக்கு எந்தப் பிரச்னையும் இல்லே. ஏன் கவலைப்படறே?"

அதற்கடுத்த நாள்....

"நேத்து இங்கிலீஷ் படத்துக்கு உங்கப்பா தானும் கிளம்பி நின்னுட்டாரே. நடுராத்திரி வரையில் கண் விழிச்சு தூக்கம் கெட்டா உடம்புக்கு வந்துடாதோ? ஒரு உபசாரத்துக்குக் கேட்டால் தன் வயசை நினைச்சு ஒதுங்கிட வேண்டியதுதானே. அதை விட்டுட்டு..." அவள் பேசுவதைக் கேட்டு தனக்குள் சிரித்துக் கொண்டே மாமனார் போய்விட்டார்.

அன்று பிற்பகலில் அலுவலக வேலையில் ஆழ்ந்திருந்த பத்ரனுக்கு அவன் தந்தை போன் செய்தார்.



"ஜகதாவுக்கு ரத்த அழுத்தம் அதிகமாகி திடீர்னு மயக்கமாயிட்டா. ஆஸ்பத்திரியிலே சேர்த்திருக்கேன். உடனே வா"

"என்னது.. ஜகதாவையா, எப்படிப்பா!"

"என்னைப் பத்திக் கவலைப்பட்டே அவள் உடம்பு கெட்டுப் போச்சு. இது மாதிரி மருமகள் கிடைக்க நான் ரொம்ப கொடுத்து வைச்சிருக்கணும்"

பத்ரனுக்கு 'அட ராமச்சந்திரா!' என்றிருந்தது.

லக்ஷ்மி ரமணன்

புக் பேங்க்







வேலை கிடைக்கும் வித்தியாசமான படிப்புகள் - ம. லெனின்

நாற்பத்தைந்து விதமான படிப்புகள். அவற்றின் மூலம் வேலை வாய்ப்பு பெறவும், சொந்தமாகத் தொழில் தொடங்கவும் வழிகளும், பயிற்சிகளும், ஆலோசனைகளும் கூறும் நூல். மாணவர்க்கு, ஆசிரியர்க்கு, பெற்றோருக்கு, பணிபுரிவோருக்கு என அனைவருக்கும் உதவக்கூடியது.

சிக்ஸ்த்சென்ஸ் பப்ளிகேஷன்ஸ், 51/24, வி.சி. கார்டன் முதல்தெரு, மந்தைவெளி, சென்னை - 600 028.
விலை ரூ. 298/-

அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் அன்பு மொழிகள் - சுவாமி ஆசுதோஷானந்தர்

ஐந்து வயதில் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் வாழ்க்கைத் துணைவியான அன்னை சாரதாதேவியின் வாழ்க்கை வரலாறு. வங்க மொழியில் வெளியான நூல்களின் தொகுப்பு. அன்னையின் 150வது பிறந்த நாள் சிறப்பு வெளியீடு.

ஸ்ரீ ராமகிருஷ்ணாமடம், மயிலாப்பூர், சென்னை - 600 004.
விலை ரூ. 100/-

பத்திரங்களும் ரிஜிஸ்திரேஷனும்

பத்திரங்கள் எழுதுவோருக்கும், பதிவுத் துறையில் உள்ளவர்களுக்கும் உபயோகமான அடிப்படைத் தகவல்களைக் கொண்ட நூல். 2001 வரை வெளியான அரசாணைகள், வழிமுறைகளின் விளக்கம் என பதிவுத் துறைக்கு வழிகாட்டும் நூல்

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, தி. நகர், சென்னை - 600 017. விலை ரூ. 100/-

நூறு கோடி ரூபாய் வைரம் - இந்திரா சௌந்தர்ராஜன்

அனுபவமிக்க எழுத்தாளரின் இரண்டு மர்மக் குறுநாவல்களின் தொகுப்பு. முடிச்சு முடிச்சாய் மர்மங்கள் திகிலூட்டியபடியே கதையை நகர்த்துகின்றன.


திருமகள் நிலையம், 16, வெங்கட் நாராயணா சாலை, தி. நகர், சென்னை - 600 017. விலை ரூ. 60/-

வெள்ளைத் தாமரை - பாலகுமாரன்

உறவுகள், ஆசைகள், அவற்றால் எழும் சிக்கல்கள், போராட்டங்கள் என "வெள்ளைத் தாமரை பதிப்பகம்" பலரது வாழ்வில் ஏற்படுத்திய பாதிப்புகள். வெறும் வாழ்வியலாக மட்டுமின்றி இதில் சில வழிகாட்டல்களும் இருக்கின்றன.

விசா பப்ளிகேஷன்ஸ், 16, வெங்கட்நாராயணா சாலை, தி. நகர், சென்னை - 600 017
விலை ரூ. 80/-

— விஸ்வக்







• •

இதயம், மூளை போன்ற உறுப்புகளில் மட்டும்தான் திடீர் அடைப்பு ஏற்படும் என்று நினைக்காதீர்கள். குடலிலும் திடீர் அடைப்பு உண்டாகும் அபாயம் உள்ளது

• •

'நீயா?' சினிமா படத்தில் நாகினி ஸ்ரீப்ரியாவைப் பார்த்து எல்லாருமே கேட்பார்களே... அது போல, "நீயா?" என்று மனைவியையே பார்த்து, கேட்டு விட்டார் அந்த நெல்லூர்க்காரர்.

கிட்டத்தட்ட நூறு கிலோ எடையுடன் அறுவை சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த மனைவி சரஸ்வதி. ஆபரேஷனுக்குப் பிறகு 'சிக்' என்ற இடையுடன் தோன்றினால் இன்ப அதிர்ச்சியாக இருக்காதா என்ன?

சரஸ்வதிக்கு, பரம்பரையாகவே பருமனான உடல் வாகு... சிசேரியன் ஆபரேஷன் ஆன அடி வயிறு, கனத்துத் தொங்கிப் போயிருக்க, கூடவே இலவச இணைப்பாக பெரிய ஹெர்னியா வேறு. ஹெர்னியா நீக்கப்பட்டதோடு, ஏடாகூடமான வடிவத்தில் இருந்த சரஸ்வதியின் வயிறும் இடுப்பும் அளவாகச் செதுக்கப்பட்டு, அறுவை சிகிச்சை திருப்திகரமாக முடித்ததற்காக வைக்கப்பட்ட திருஷ்டிப் போட்டு போல, புதிதாக தொப்புள் ஒன்றும் பொருத்தப்பட்டு விட்டது!

"'டம்மிடக்' எனப்படும் அதி நவீன அறுவை சிகிச்சை மூலம் எப்படிப்பட்ட தொப்பையையும் அழகாகப் படிய வைத்துவிடலாம். அதுவும் நிரந்தரமாக" என்கிறார் தி.நகர். ஜி.என். சாலையில் உள்ள ஜெனரல் சர்ஜிகல் க்ளினிக் டாக்டர் எஸ். அசோக்.

எலி வால் விபரீதம்!


உடற்பயிற்சி, உணவுக் கட்டுப்பாடு, யோகா போன்றவற்றால் உடல் பருமனைக் குறைக்கலாம் என்றாலும், நாள்பட்ட உடல் பருமனைக் குறைப்பது சிரமமான காரியம்தான். அதிலும் சிஸேரியன், கருப்பை அகற்றும் சிகிச்சை, ஹெர்னியா போன்றவற்றால் வயிறும் இடுப்பும் மேலும் பருத்து, உடலை இன்னும் பருமனாக்கி விடுகிறது.

இத்தகைய நிலைமையில், 'டம்மிடக்' என்ற அதி நவீன அறுவை சிகிச்சை பயன் தருகிறது.

"டயர் டயராகச் சேர்ந்திருக்கும் கொழுப்பை அகற்றி, தொங்கிப் போன சதைகளைக் கவனமாக நீக்குவோம். 'மெஷ்' போன்ற நூதன வலையை வைத்து, மேல் வயிற்றிலிருந்து, அடி வயிறு வரை இறுக்கமாக ஒட்டி, தைத்து விடுவோம். 'மெஷ்' வைத்துத் தைப்பதால், மீண்டும் அந்தப் பகுதிகளில் கொழுப்புச் சேர வாய்ப்பே இல்லை. முறையான உடற்பயிற்சியும், உணவுக் கட்டுப்பாடும் மேற்கொண்டால் அதே உடல் வாகை பராமரிக்கலாம். போடப்படும் தையலும், வயிற்றின் மிக மிக அடியில்,

நுணுக்கமாகப் போடப்படுவதால், ஆபரேஷனுக்குப் பிறகு சன்னமான கோடு மட்டுமே தெரியும். ஒரு சிலருக்குத் தொப்புள் மீது கூட ஹெர்னியா வளர்ந்திருக்கும். அத்தகையவர்களுக்கு, கான்டூர்ஸ் எனப்படும் இடுப்பு வளைவுகளை அமைத்து, புதிய தொப்புள் கூடத் தைத்து விடுகிறோம். இதனால் பின் விளைவோ, பக்க விளைவோ இருக்காது என உத்திரவாதமே தருகிறோம்.

"பித்தப்பை கோளாறு, ஹெர்னியா, குடல்வால் கோளாறு.. போன்ற சிகிச்சைகளுக்காக வருகின்ற ஆண்கள்கூட 'டம்மி டக்' பற்றி கேள்விப்பட்டு, அதையும் சேர்த்துச் செய்து கொள்கிறார்கள். ரீ சர்வீஸ் செய்தது போல சிலிம்மாகி விடுகிறார்கள்" என்றார் பெருமிதமாக!



டாக்டர் அசோக் விவரித்த இன்னொரு கேஸும் சவாலானதுதான்!

"கல்பாக்கத்தில் பணிபுரியும் இளம் விஞ்ஞானி அவர். நல்ல ஆரோக்கியமானவர். எந்தக் கெட்டப் பழக்கமும் இல்லாதவர். ஒருநாள் டென்னிஸ் விளையாடிக் கொண்டிருந்தவருக்குத் திடீரென்று வயிற்று வலி. பலமுறை வாந்தி எடுத்திருக்கிறார். உடனே நாடித்துடிப்பு விழுந்துவிட, என்னிடம் அழைத்து வந்தார்கள்.

"பரிசோதித்த உடனேயே, மரணத்தின் விளிம்பில் நிற்கும் கேஸ் என எனக்குப் புரிந்துவிட்டது. ஆனால் அழைத்து வந்தவர்களோ, "டயரியா ஸார்" என்றார்கள் கூலாக. உண்மையில் இன்னும் சில மணி நேரங்கள் தாமதித்திருந்தாலும், அவரது உயிருக்கே ஆபத்து நேர்ந்திருக்கும்.

"சுப்பீரியர் மெஸன்ட்ரிக் ஆர்டரி'னு சொல்வோம். சிறு குடலுக்குப் போகின்ற அந்த ரத்தக் குழாயில் திடீர் அடைப்பு ஏற்பட்டதால், குடல் அழுகிவிட்டது. கிட்டத்தட்ட முப்பத்து இரண்டடி இருக்க வேண்டிய குடல் பகுதியில், ஆறு அங்குலம் மட்டுமே நல்ல நிலைமையில் இருந்தது.

"உடனடியாக அறுவை சிகிச்சை செய்து, எலி வால் போல இருந்த குடல் பகுதியை சர்வ ஜாக்கிரதையாக வெட்டி, மீண்டும் பெருங்குடலுடன் இணைத்துத் தைத்து விட்டோம். இப்போது அவர் அந்தச் சிறு (!) குடலை வைத்துக் கொண்டே, இட்லி, தயிர் சாதம் எல்லாம் சாப்பிட்டுக் கொண்டு ஆரோக்கியமாக இருக்கிறார்.

"இதயம், மூளை போன்ற உறுப்புகளில் மட்டும்தான் திடீர் அடைப்பு ஏற்படும் என்று நினைக்காதீர்கள். குடலிலும் திடீர் அடைப்பு உண்டாகும் அபாயம் உள்ளது" என்றார் டாக்டர் எஸ். அசோக்.

குடலைப் பொறுத்தவரை, 'வருமுன் காப்போம்' திட்டம் மட்டுமே உதவும் என்று அடித்துக் கூறும் இவர், குடலைப் பாதுகாக்க சில அடிப்படை டிப்ஸ் தந்தார்.

"அமிலம் அதிகமாகச் சுரக்கக்கூடிய மது, டீ, காபி போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். உடற்பயிற்சி சீராகச் செய்ய வேண்டும். சுத்தமான, கொழுப்பு இல்லாத நார்ச்சத்து மிகுந்த உணவை, வேளை தவறாது சாப்பிட்டு வந்தாலே குடல் நோய் அண்டாது" என்கிறார் டாக்டர் எஸ். அசோக்.

- அனு

ஓடட்டும் விடய்யா!



"ஆராய்ச்சி மணியை அடிக்கறது யார்?"

"அதை உருவாக்கியவன்தான் மன்னா... இன்னும் பணம் செட்டில் பண்ணலையாம்!"

- அம்பை தேவா



"அதிரடி டிரான்ஸ்ஃபர் வந்துடுமோன்னு நம்ம ஐ.ஜிக்கு ரொம்பக் கவலை..."

"அதுக்காக, 'தமிழ்நாட்டில் மிதவாதிகள்தான் அதிகரித்து வருகிறார்கள்'னு அடிக்கடி சொல்லிக்கிட்டிருக்கணுமா, என்ன?"

- தஞ்சை தாமு

"தன்னை நிறையப் பேர் காதலிக்கிறாங்கன்றதுல மாலு ரொம்ப கர்வமா இருக்கா..."

"எப்படிக் கண்டுபிடிச்சே...?"

"தனக்கு காம்படிஷன் கார்டுலதான் லவ் லெட்டர் வரதா பெருமை அடிச்சுக்கறா!"

- எம். வினோத்





"எதுக்கு மோப்ப நாயோட போலீஸ் ஸ்குவாட் போகுது? கொலைகாரங்க யாரையாவது பிடிக்கவா?"

"இல்லை. மாமூல் கொடுக்காம ஒளிஞ்சு இருக்கிற ரவுடிகளை மோப்பம் பிடிக்கத்தான்!

- வி. சகிதா முருகன்

"நம்ம ஜெயிலுக்கு புதுசா வந்த சில கைதிகள் தப்பிச்சு ஓடிட்டாங்க, சார்...!"

"போகட்டும்! போகட்டும்! வெளியே போய் வேலை கிடைக்காமல் பட்டினி கிடந்தால்தான் இந்த இடத்தின் அருமை தெரியும்...!"

- புன்னகை மன்னன்



சு.சங்கர சுப்ரமணியன்

சாப்பிட்ட இடம் கழுவ
சாணம் கிடைக்காத குறை
பாட்டிக்கு.

கன்னத்தில் போட்டுக்
கொள்ள கருடன்
தென்படாத ஆதங்கம்
தாத்தாவுக்கு.

உலை கொதிக்கும்
இடைவெளிக்கு
உயிர்த்தோழி
அகப்படாத துன்பம்
அம்மாவுக்கு.

தினத்தாள் புரட்டி
அசைபோட
திண்ணை வாய்க்காத
ஏமாற்றம்
அப்பாவுக்கு.

அடுக்கு மாடிக்
குடியிருப்புக்கு
அடுத்த தவணைக்கான
கவலை
எனக்கு.



நகரம்

வட்டமேஜை





✉ சினிமாவில் தன் சுயநலத்திற்காக பெண்கள் தங்கும் விடுதியை மிகத் தரக் குறைவாகக் காண்பிக்கும் டைரக்டர்களை, தோலுரித்துக் காட்டியது பாராட்டுக்குரியது.

மணப்பாறை, து.ஆனந்தி ராஜா

✉ 'அன்பே சிவம்' படத்தில் 'பூவாசம் புறப்படும் பெண்ணே' என்ற இனிமையான பாடலைத் தந்த வித்யா சாகரை ஒரு வரி பாராட்டியிருக்கலாம்.

அயன்புரம், த.சத்தியநாராயணன்

✉ 'கண்ணகி பராக்' நான்கு பக்கங்கள் கிரிமினல் வேஸ்ட்!

பாலா, மதுரை

✉ மதிய உணவைக் காட்டி, மனம் ஒடிந்துபோன விவசாயிகளின் மனத்தை மாற்றி விடலாமென, தப்புக் கணக்குப் போட்ட அரசுக்கு, கல்கியில் வெளியான கட்டுரை சரியான எச்சரிக்கை.

கும்பகோணம், புலவர் எஸ்.கே.மூர்த்தி.


✉ 'அன்புள்ள அரவிந்தன்', 'இதுவும் வெற்றி' இரண்டுமே மணிமணியான கதைகள்.

சென்னை, கே. சுந்தரம்

✉ 'குடிக்கக் கூழ் இல்லை, கொப்பளிக்க பன்னீர் கேக்குதாம்' பழமொழி மிகவும் சரியென்று நிரூபிப்பது போல்தான் உள்ளது, தமிழக அரசின் புதிய நிர்வாக நகரம் அமைப்பது மற்றும் மெரினாவை அழகுபடுத்துவது என்கின்ற அறிவிப்புக்கள். ஆனால் கல்கி அதனைச் சாடியிருந்த விதம், பன்னீர் கேட்ட வாயில் வெந்நீர் ஊற்றியது போல் இருந்தது!

ஆதமங்கலம், கே.சண்முகம்

முந்திரி மசாலா டீ!



✉ 'குளோனிங் குழந்தை வரமா..? பயங்கரமா?' அலசல் விவாதம் கார முந்திரி வறுவலும், ஏலக்காய் மசாலா டீயும் சாப்பிட்ட சுவாரஸ்ய சுறுசுறுப்பு சுகம் தந்தது.

திருவண்ணாமலை, எல்.எம்.மங்கை

✉ கற்பனைதான் என்றாலும் 'கண்ணகி பராக்' கட்டுரை சில்மிஷங்கள் சிறிது நேரம் சிரிக்க வைத்தன!

சென்னை, கே.என்.பாலகிருஷ்ணன்

✉ வாராவாரம் கவிதைப் பக்கம் தந்து வருவது குறித்து மகிழ்ச்சி. சமீபத்திய கவிதைகளில் 19.1.2003 இதழில் வெளியான 'கீர்த்தி'யின் கவிதை சந்தோஷம் தந்தது. 26.1.2003 இதழில் வெளியான கவிதை, வெறும்னே உரையாடல்தனமாய் இருந்துவிட்டதுதான் ஏனோ உறுத்தலாய் உள்ளது. கவனம் கொள்க.

சத்தியமங்கலம், ரத்தினசாமி

✉ மெரினாவை அழகுபடுத்தும் பியூட்டி பார்லராக மலேஷியா! அதற்கு மசாஜ் பண்ணும் வேலையில் தமிழக அரசு. இலவசத்துக்கு அலையும் கையேந்தி பவன்களாக தமிழக மக்கள். எந்தப் பொருத்தமுமே சரியில்லை சாமி.

நெல்லையப்பபுரம், டி. செல்வன்

✉ அழகூட்டுதல் மாநிலத்தின் முன்னேற்றத்திற்கு எந்த அளவு உதவப் போகிறது? மக்களை அப்புறப்படுத்தி மாளிகைகள் கட்டுவது என்ன நியாயம்? தலையங்கம் ஆதங்கப்பட வைத்தது!

ஸ்ரீரங்கம், எஸ்.கௌரிலஷ்மி



வசீகரா

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்குமா இல்லையா என்கிற சர்வதேச டென்ஷனில் கச்சா எண்ணெய், தங்கம் விலை உயர்கிறதோ இல்லையோ... 'வசீகரா' படத்தில் வலிய வந்து, "ஐ லவ் யூ" சொல்லும் சினேகாவின் காதலை, இந்த வீம்பு பிடித்த விஜய் ஏற்றுக் கொள்வாரா மாட்டாரா என்கிற டென்ஷனில், ஏ.சி தியேட்டருக்குள்ளேயே எக்குத் தப்பாய் இரத்தக் கொதிப்பு ஏறுகிறது. அத்தனை விறுவிறுப்பான படமோ என்று தவறாய் விளங்கிக் கொண்டு விடாதீர்கள்! கிராமத்துக் கப்பிச் சாலையில் சிக்கிக் கொண்ட கட்டை வண்டி மாதிரி, கடமுடாவென்று திணறித் திணறி நகரும் திரைக்கதையால்தான் இந்தப் பிரச்னை. நகரத்து நாஸர், கிராமத்து மணிவண்ணன் இருவரும் கண்ணனும் குசேலரும் போல. நல்ல வேலை வாங்கித் தருவான் என்ற நம்பிக்கையோடு கோவையிலிருந்து தமது மகன் விஜயை, சென்னையிலிருக்கும் நாஸர் வீட்டுக்கு மணி அனுப்ப, வந்த இடத்தில் நாஸரின் மகளான சினேகாவுக்கு விஜய் மீது காதல் வருகிறது. அதுவும் எந்த சூழ்நிலையில் என்கிறீர்கள்... அமெரிக்க மாப்பிள்ளைக்கு நிச்சயம் செய்யப்பட்ட நிலையில்... (ஆரம்பிச்சுட்டாங்கப்பா...!)

நிச்சயமான பெண்ணை தைரியமாய் காதலிப்பது, அல்லது காதல் வலையில் வீழ்த்துவது என்றெல்லாம் அரை சதம் படமெடுத்து அலுத்துப் போனதால் இப்படியொரு மாறுபட்ட (?) தெலுங்குக் கதையை சுவீகாரம் வாங்கி, சவலைப் பிள்ளை மாதிரி படத்தை வளர்த்திருக்கிறார் இயக்குனர்... போனால் போகட்டும்... பாத்திரங்களின் குணாதியங்களை பளிச்சென்று சொல்லி விடுகிற இயக்குனர் செல்வபாரதியின் 'வசன' உழைப்பிற்காக இதை மன்னித்து விடுவோம். தவிர இன்னும் டீன் தோற்றத்தில் இருந்து கொண்டு, ஆக்ஷன் கழனிப் பானைக்குள் அவசரப்பட்டுக் கையை விடும் விஜயை மீட்டு வந்திருக்கிறார்.

சினேகா வழக்கமாய் உருகும் நாயகிதான் எனினும் "என்னைத் தவிர வேறு எவரையாவது திரும்பிப் பார்த்தே தொலைச்சுடுவேன்" என்று விஜயின் காதருகே வந்து ரகசியமாய்ச் சொல்லும் தருணங்களில் எல்லாம், அவரைப் பார்த்து 'தீவிரவாத தேவதை!' என தியேட்டரிலேயே கத்தலாம் போலிருக்கிறது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு உருப்படியான கௌரவத் தோற்றத்தில், சுகாசினி கவனிக்க வைக்கிறார்.

பாவம் காயத்ரி ஜெயராம்! இப்போதெல்லாம் கௌரவமான படங்களில்கூட இவரைக் கவர்ச்சி ஊக்கியாக பயன்படுத்துகிறார்கள். இதே நிலை நீடித்தால், ஒற்றைப் பாடலுக்கு ஆட்டம் போடுங்கள் என்று அட்வான்ஸ் கொடுத்து விடுவார்கள் ஜாக்கிரதை!

ஒளிப்பதிவுத் துறையில் பிரகாசிக்கத் தொடங்கியிருக்கும் திறமையான புதியவர்களின் பட்டியலில் இந்தப் படத்தின் சினிமட்டோகிராபர் பாலு சுப்ரமணியமும் இடம் பிடித்து விடுகிறார்.

ஒரே மாதிரியான மெட்டுக்களில் கட்டுண்டு கிடந்த எஸ்.ஏ. ராஜ்குமாரின் இசைதானா இது என்று வியக்கும்படி... "பூப்போல தீப்போல வந்தாள்" பாடலை கலர்ஃபுல் ஜுகல்பந்தியாக்கி 'கலக்கி' விட்டார்.

சின்னச் சின்ன குறைகளை நீக்கிவிட்டுப் பார்த்தால்கூட, வசீகரா பாதி கவிதை, மீதி உரைநடை.

- விஷுவல்தாசன்

● ஆவரெஜ்

குவா குவா வங்கி!



• வீணா



• பாஷிணி




• சூர்ய காந்த்

"ஆறடிக்குக் குறையாத, நல்ல சிவப்பு நிறமுள்ள, மருத்துவர்கள் நிரம்பிய குடும்பத்தில் பிறந்த, ஆரோக்கியமான ஆண் மகனிடமிருந்து விந்து தேவை" - இப்படிப்பட்ட விண்ணப்பங்களைப் பரிசீலித்து, உதவும் வங்கி பெங்களூரில் இருக்கிறது.

குழந்தையற்ற தம்பதிக்கு, விந்து தானம் செய்து மழலைப் புரட்சி செய்யும் CRYO Genie என்ற இந்த வங்கி, ஜெயநகரில் 96லிருந்து இயங்கி வருகிறது. இதன் டைரக்டர்களான டாக்டர் பாஷிணி ராவையும் டாக்டர் வீணாவையும் சந்தித்து உரையாடினோம்.

"க்ரையோ வங்கியில் விந்து ஆராய்ச்சி மிக கவனத்துடன் நடைபெறுகிறது. இங்கு பலர் தாமே முன்வந்து விந்து தானம் கொடுக்கின்றனர். ஆனால் நாங்கள் அதற்கு பல விதிமுறைகள், கட்டுப்பாடுகள் வைத்திருக்கிறோம். முதலில் தானம் கொடுப்பவரின் வயது 20க்கு மேல் 40க்குக் கீழ் இருக்க வேண்டும். கண்டிப்பாக காலேஜ் படிப்பிருக்க வேண்டும். எந்தக் கெட்ட பழக்கங்களும் இருக்கக் கூடாது. உடல் ஆரோக்கியமாக நோயற்று இருக்க வேண்டும். அது மட்டுமல்ல, குடும்பத்தினரின் மருத்துவ வரலாறும் ஆராயப் படும். பரம்பரை வியாதிகள், மூளைக் கோளாறு உள்ளவர்களின் விந்து ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது! விந்து பெற்ற பின்பும் ஒரு வருடம் கடும் பரிசிலனை நடைபெறும். இதனால் எய்ட்ஸ் போன்ற நோய்கள் பரவுவது தடுக்கப்படுகிறது. சுகாதார முறையில் விந்து உறை நிலையில் (மைனஸ் 196 டிகிரி) வைக்கப்படுகிறது. இந்த நிலையில் சுமார் இருபது வருடங்கள் கூட அதன் தன்மை கெடாது. பயன் படுத்தலாம். இங்கிருந்து பல மாநிலங்களுக்கு இந்த விந்து உறைநிலையில், உயரமான கேனில் வைத்து அனுப்பப்படுகிறது. யாரிடமிருந்து, யாருக்கு போன்ற விஷயங்கள் எல்லாம் பரம ரகசியம்!" என்கிறார் டாக்டர் பாஷிணி.



முன்பெல்லாம் ஒருவரிடமிருந்து விந்து பெற்று உடனடியாகவே பெண்ணின் கருப்பையில் செலுத்திக் கொண்டிருந்தார்களாம். இம்மாதிரி பரிசோதிக்காமல் செய்தால், பால்வினை நோய்கள் மற்றும் எய்ட்ஸ் பரவும் அபாயம் மிக அதிகம். ஆனால் க்ரையோ வங்கியில் மிக நுண்ணிய முறையில் டெஸ்டுகள் நடைபெறுகின்றன. IVF என்ற முறையிலும் கருத்தரிக்கலாமாம். ஆனால் அதற்குச் செலவு எக்கச்சக்கம். சாமானியருக்குச் சரிப்பட்டு வராது.

"எங்களிடம் பல தம்பதிகள் வருவார்கள். பரிசோதனை முடிந்து தன்னிடம்தான் குறை என்று தெரிந்தவுடன் கணவனின் முகம் கூம்பிப் போய் விடும். ஒரு ஆண் தனக்கு ஒரு வாரிசு இருந்தால்தான்



கௌரவம், மதிப்பு என நினைக்கிறான். பெண்ணும் எப்படியாவது, தான் கருத்தரிக்க வேண்டும், மலட்டுப் பட்டம் கொடுத்தவர்கள் வாயை மூட வேண்டும் என்று நினைக்கிறாள். செயற்கை முறையில் கருத்தரித்தால், காதும் காதும் வைத்தாற்போலிருக்கும். கணவன், மனைவி, டாக்டரை தவிர வேறு யாருக்கும் தெரியாது. மேலும் ஒரு பெண் கர்ப்பம், மசக்கை, பிரசவம், தாய்மை போன்றவற்றை அனுபவபூர்வமாக உணர வேண்டும் என்று ஆசைப்படுகிறாள். நாங்கள் தத்தெடுத்துக் கொள்ளும் முறைக்கு எதிரியல்ல. ஆனால் அதில் பல சிக்கல்கள் உண்டு. மெத்த படித்தவர்களே, தத்தெடுக்கத் தயங்குகிறார்கள்" என்கிறார் டாக்டர் வீணா.

மாற்று உறுப்பு ரணசிகிச்சை சர்வ சாதாரணம். பிறருடைய கண், இதயம், சிறுநீரகம் போன்றவற்றைப் பெற்று நம் உடலில் பொருத்திக் கொள்ளும் போது விந்துக்களை ஏன் பெறக் கூடாது? அதை ஆண்கள் ஆரோக்கியமான கண்ணோட்டத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக, பலமுறை கவுன்சிலிங் வைக்கிறார்களாம்.

"பல தம்பதிகள் தங்களுடைய சாயலில், நிறத்தில் (சிவப்புக் குழந்தைதான் வேண்டும்!) உயரத்தில், ரத்தப் பிரிவில் குழந்தை பிறக்க வேண்டுமென்று விரும்புவார்கள். ஆதலால் கூடியவரை டோனரின் அம்சங்கள் பெறுனரின் அம்சங்களுடன் ஒத்துப் போகுமாறு கவனித்துச் செய்யப்படுகிறது. பெறுனரில் சுமார் முப்பது சதவிகிதத்தினர் முஸ்லீம்கள், ஐந்து சதவிகிதம் கிறித்துவர்கள். தில்லியில் சுமார் நூறு கருத்தரிப்புகள் இம்முறையில் தினமும் நடைபெறுகிறது. மும்பையில் ஒவ்வொரு மாதமும் சுமார் நாலாயிரம் கருத்தரிப்புக்கள். எல்லாமே வெற்றிகரமாக முடியுமென்று சொல்ல முடியாது. பொறுமை காப்பதைத் தவிர வேறு வழியில்லை" என்கிறார்கள்.

"எங்களிடம் ஒரு டாக்டர் வந்தார். மிகப் படித்த டாக்டருடைய, அதுவும் எம்.டி. பண்ணிய நபரின் விந்துதான் வேண்டும் என நிபந்தனை போட்டார்!" என்றார் டாக்டர் சூர்யகாந்த்.

ஒரு நபரிடமிருந்து அதிகப்படியாக பத்து முறை மட்டுமே விந்து தானம் பெறுகிறார்கள். இதில் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மிக அதிகமான முறை முன்வருகிறார்களாம். எந்தவித உணர்வு பூர்வமான ஒட்டுதலும் கிடையாது. நம் குழந்தை எது, தேடினால் கிடைக்குமா, இது நம் சாயலா போன்ற சினிமாத்தனங்கள் கிடையாது என்பது ஆறுதல்.

பேட்டி, புகைப்படங்கள் :

லதா சேகர்


"டார்லிங்! உன்னால ஒரு உதவி ஆகணும்!"

"சொல்லுங்க செந்தில்..."

"டெய்லி உன்கூட பேசிப் பேசி போரடிக்குது. நாளைக்கு உன் ஃபிரெண்டை வரச் சொல்லேன்!"

- ஜூனியர் சக்தி





"காலேஜுக்குப் போனா காதல் கத்திரிக்காய்னு கெட்டுப் போய்டுவாளோன்னு பயந்துக்கிட்டு என் பொண்ணை தபால் மூலம் படிக்கச் சொன்னது தப்பாயிடுச்சு!"

"ஏன்"

"தபால்காரரைக் காதலிக்க ஆரம்பிச்சுட்டா!"

- மேல்மங்கலம் பத்ரா



சிவகாமியின் சபதம்

நாற்பத்து ஒன்றாம் அத்தியாயம்

அஜந்தா குகையில்

புலிகேசியின் உணர்ச்சி மிகுதியையோ, கண்ணீரையோ, கவனியாதவராய்ப் புத்த பிக்ஷு கீழ் வானத்தில் மிதந்து வந்த பூரண சந்திரனைப் பார்த்துக் கொண்டே மேலும் கூறினார்:

"அந்தக் கிராதகர்கள் என்னை நீ என்றே எண்ணிக் கொண்டு பிடித்துப் போனார்கள். வனப் பிரதேசங்களையெல்லாம் தாண்டி அப்பால் கொண்டு போனதும் என்னைக் குதிரை மேல் ஏறச் சொன்னார்கள். நான் குதிரை ஏறத் தெரியாமல் தவித்ததைப் பார்த்ததும் அவர்களுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. நான் பாசாங்கு செய்கிறேனோ என்று அவர்கள் முதலில் எண்ணினார்கள். பிறகு உண்மையாகவே எனக்குக் குதிரை ஏறத் தெரியவில்லையென்று அறிந்ததும் அவர்களுடைய தலைவன் என்னை என்னவெல்லாமோ கேள்விகள் கேட்டான். என்னுடைய விடைகளைக் கேட்டு அவர்கள் திகைத்தார்கள். உன்னுடைய காதுகளில் நீ குண்டலம் போட்டுக் கொண்டிருந்தாய். அதற்காகத் துவாரங்களும் இருந்தன. என் காதுகளில் துவாரமே இல்லையென்பதைப் பார்த்ததும் அவர்களுக்கு நான் நீ இல்லையென்பது நிச்சயமாய்த் தெரிந்து விட்டது. உன்னைப் பிடிக்க முடியாததனால் ஏற்பட்ட கோபத்தையெல்லாம் என் பேரில் காட்டி உபத்திரவப்படுத்தினார்கள். ஆ! அவர்கள் அப்போது சாட்டையினால் என்னை அடித்த அடியின் தழும்புகள் இதோ இன்னும் இருக்கின்றன!" என்று புத்த பிக்ஷு தம் முதுகைத் தொட்டுப் பார்த்துக் கொண்டார்.

"ஐயோ! அண்ணா! அந்தத் தழும்பு

அமரர் கல்கி

களைப் பார்த்து எத்தனையோ நாள் நான் தூக்கமின்றித் தவித்திருக்கிறேன். ஆனால் அதையெல்லாம் எதற்காக இப்போது ஞாபகப்படுத்துகிறாய்?'' என்று புலிகேசி அலறினார்.

''தம்பி! உனக்கு ஞாபகப்படுத்த வில்லை. எனக்கு நானே ஞாபகப் படுத்திக் கொள்கிறேன். அதையெல்லாம் இன்றைக்கு எண்ணிப் பார்த்தால் எனக்கு மனக்கஷ்டம் உண்டாகவில்லை. குதூகலந்தான் உண்டாகிறது. பரோ பகாரம் செய்வதில் உள்ள பலன் இது தான். ஒருவருக்கு ஒத்தாசை செய்வதற் காக நாம் கஷ்டப்பட்டோமானால், கஷ்டம் அதை அனுபவிக்கும்போது மட்டுமே நீடிக்கிறது. சீக்கிரத்தில் அது போய் விடுகிறது. அப்புறம் வாழ்நாள் உள்ளவரை நாம் செய்த உதவியை நினைத்து நினைத்துச் சந்தோஷப்படு கிறோம். ஆனால், தம்பி! அந்தப் பழைய கதையையெல்லாம் இப்போது ஞாபகப் படுத்துவது உனக்கு ஒருவேளை மனக் கஷ்டத்தை உண்டாக்கினால் நான் சொல்லவில்லை'' என்று நாகநந்தி நிறுத் தினார்.

''அண்ணா, என்ன சொல்கிறாய்? எனக்கும் அந்தக் காலத்தை நினைத் தால் எத்தனையோ மகிழ்ச்சி உண்டா கிறது!''

''அப்படியானால் சரி, கொஞ்ச நேரம் வரையில் அந்தக் கிராதகர்கள் துன் புறுத்தியதையெல்லாம் பொறுத்துக் கொண்டிருந்தேன். பொறுக்க முடியாமற் போன பிறகு, நான் அஜந்தா புத்த சங்கிராமத்தைச் சேர்ந்தவன் என்று தெரிவித்தேன். உடனே அவர்கள் பயந்து விட்டார்கள். நான் அணிந்திருந்த உடை கள் எப்படிக் கிடைத்தன என்று கேட் டார்கள். பொய்கைக் கரையிலே அவை கிடைத்தனவென்றும், நான் அவற்றை வெறுமனே உடுத்திக் கொண்டதாகவும் சொன்னேன். என்னை அழைத்துக் கொண்டு திரும்பி அதே பொய்கைக் கரைக்கு வந்தார்கள். சுற்றியிருந்த வனப் பிரதேசமெங்கும் தேடிப் பார்த்தார்கள். கடைசியில் ஏதோ காட்டு மிருகம் உன்னைக் கொன்று தின்றிருக்க வேண் டும் என்று தீர்மானித்துக் கொண்டு என்னை விட்டு விட்டுத் திரும்பிப் போய்ச் சேர்ந்தார்கள். பிறகு, நீ வழி கண்டுபிடித்துப் பத்திரமாய்ப் போய்ச் சேர்ந்தாயோ என்னவோ என்ற கவலையுடன் நானும் அஜந்தாவை நோக்கிக் கிளம்பினேன்.''

வாதாபிச் சக்கரவர்த்தி அப்போது குறுக்கிட் டுக் கூறினார்: ''நீ சொல்லியிருந்தபடியே நான் நதி வழி யைப் பிடித்துக் கொண்டு போனேன். வளைந்து வளைந்து போன நதியோடு எத்தனை தூரம் போனாலும் மனித சஞ் சாரமே இல்லை. அடிக்கடி எதிரே சுவர் வைத்தது போல் மலை நின்று அப்பால் வழியே இல்லையென்று தோன்றியது. போகப் போக இப்படியே இருந்தது. ஒரு வேளை நீ சொன்னதை நான் நன்றாய்த் தெரிந்து கொள்ளாமல் தப்பான வழி யைப் பிடித்துக் கொண்டு போகிறேனோ என்று எண்ணினேன். அதைவிடப் பயங்கரமான எண்ணம் ஒன்று தோன் றியது. நீ ஒருவேளை என்னை ஏமாற்றி விட்டாயோ, சித்தப்பன் மங்களேசனிடம் போய்ச் சமாதானம் செய்து கொண்டு இராஜ்யம் ஆளப் பார்க்கிறாயோ என்று நினைத்தேன். கடைசியில் அஜந்தாவின் அற்புதச் சித்திரக் குகைகளை அடைந் தேன். நீ சொன்னபடியே அங்கு யாரோ டும் பேச்சுக் கொடாமல் சிற்பியின் சீடனாக நடித்துக் காலங் கழித்துக் கொண்டிருந்தேன். ஒரு வாரங் கழித்து நீ வந்து சேர்ந்தாய். உன்னுடைய கதை யைக் கேட்டு, உன்னுடைய முதுகிலிருந்த காயங்களையும் பார்த்து விட்டு, உனக்கு நான் மனத்தினால் செய்த அநீதியை எண்ணி 'ஓ'வென்று அழுதேன்...''

''தம்பி! என் விஷயத்தில் உன்னுடைய மனம் அப்போது கூட முழு நிம்மதி அடையவில்லை. சங்கிராமத்தின் தலைமை பிக்ஷு நம்மை ஒருநாள் சேர்ந் தாற்போல் பார்த்து விட்டார். நாம் நதி யில் தனி இடத்திற்குச் சென்று குளித்துக்



கொண்டிருந்தபோது அவர் பார்த்தார். உன்னைப் பற்றி விசாரித்தார். நான் உண்மையைச் சொன்னேன். அஜந்தா சட்டத்துக்கு நேர் விரோதமாக அந்நியனாகிய உன்னை நான் அங்கே கொண்டு வந்ததற்காக என்னை எவ்விதம் தண்டிப்பாரோ என்று பயந்தேன். ஆனால், குரு என்னைக் கோபிக்கவும் இல்லை; தண்டிக்கவும் இல்லை. அன்று சாயங்காலம் அவருடைய தலைமை விஹாரத்தில் ஒருவரும் வராத சமயத்தில் நம்மை அழைத்து வைத்துக் கொண்டு நம்மைப் பற்றிய கதையைச் சொன்னார். அதைக் கேட்ட பிறகு உன்னுடைய மனநிம்மதி இன்னும் அதிகமாகக் குலைந்தது. தம்பி! என் விஷயமாக உன் உள்ளத்தில் பொறாமைத் தீ மூண்டு, வரவரப் பெரிதாகிக் கொழுந்து விட்டெரியத் தொடங்கியது."

"ஆம், அண்ணா! அது உண்மைதான். ஆனால் அதே சமயத்தில் என்னுடைய நீச குணத்தைப் பற்றியும் நான் அடிக்கடி எண்ணமிட்டு வெட்கமடைந்தேன்."

"உன் பேரில் தவறில்லை. தம்பி! சிறிதும் தவறில்லை. அப்போதும் நான் அவ்வாறுதான் எண்ணினேன். நீயும் நானும் இரட்டைப் பிள்ளைகள் என்றும், இரண்டு பேரில் நான் முதலில் பிறந்தவன் என்றும் தலைமைப் பிக்ஷு நமக்குத் தெரியப்படுத்தினார். நம் தந்தை நான் பிறந்தவுடனேயே என்னை அப்புறப்படுத்தி வைத்திருந்து ஐந்தாவது வயதில் என்னைப் பிக்ஷுவிடம் ஒப்புவித்தார். உன்னுடைய உயிருக்கு ஏதாவது அபாயம் நேர்ந்ததாகத் தெரிந்தால், அப்போது மட்டும் என்னைப் பற்றிய இரகசியத்தை வெளிப்படுத்தி என்னை இராஜ்யத்துக்குரியவனாகச் செய்ய வேண்டும் என்று சொல்லியிருந்தார். இதையெல்லாம் பிக்ஷு குரு நமக்குச் சொல்லி, உன்னை நானே காப்பாற்றும்படியாக நேர்ந்த விதியைக் குறித்து வியந்தார். என்னுடைய உத்தம குணத்தை வெகுவாகச் சிலாகித்தார். நான் பிறந்து அரை நாழிகைக்குப் பிறகு நீ பிறந்ததாகவும், ஜாதக ரீதியாக நீயே இராஜ்யமாளப் பிறந்தவன் என்று ஏற்பட்டபடியால் நம் தந்தை உன்னைச் சிம்மாசனத்துக்கு உரியவனாகத் தேர்ந்தெடுத்ததாகவும் கூறினார். இது தெரிந்ததும் உன் பேரில் எனக்கு ஏற்கெனவே இருந்த அன்பு பலமடங்கு ஆயிற்று. ஆனால், அதே செய்தியினால் உன்னுடைய மனத்தில் விஷம் பாய்ந்து விட்டது. அந்த நிமிஷம் முதல் நீ என்னை மனத்திற்குள் துவேஷிக்கத் தொடங்கினாய். அதைக் குறித்து நான் ஆச்சரியப்படவில்லை; உன் பேரில் கோபங் கொள்ளவும் இல்லை. நியாயமாக வாதாபிப் பட்டத்துக்குரியவன் நான் என்று ஏற்பட்டபடியால் நீ என் பேரில் சந்தேகப்படுவது இயற்கை என்பதை உணர்ந்தேன். உன்னுடைய சந்தேகத்தை அறவே போக்கத் தீர்மானித்தேன். பிக்ஷு குருவின் காலில் விழுந்து என்னையும் பிக்ஷு மண்டலத்தில் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டேன். குரு முதலில் ஆட்சேபித்தார். கடைசியில் ஒப்புக் கொண்டார். உன்னுடைய முன்னிலையில் நான் தலையை மொட்டை அடித்துக் கொண்டு காவி வஸ்திரம் தரித்த புத்த பிக்ஷு ஆனேன். என்றென்றைக்கும் உலக வாழ்க்கையைத் துறந்து விட்டதாகச் சத்தியம் செய்தேன். உன் உள்ளத்தில் மூண்டிருந்த தீ அணைந்தது. முன்போல் என்னிடம் அன்பும் விசுவாசமும் கொண்டாய்."

"அண்ணா! அது முதல் உன்னையே நான் தெய்வமாகக் கொண்டேன். எந்தக் காரியத்திலும் உன் இஷ்டப்படியே நடந்து வந்தேன். நீ சொன்ன சொல்லைத் தட்டி நடந்ததில்லை."

"அதனால் நீ எவ்வித நஷ்டமும் அடையவில்லை, தம்பி! உன்னை அஜந்தாவில் விட்டு விட்டு நான் வெளியேறினேன். மூன்று வருஷ காலம் நாடெங்கும் சுற்றினேன். இராஜ்யத்தின் அதிகாரிகள், இராணுவத் தலைவர்கள் எல்லாரையும் உன்னுடைய கட்சியில் சேரச் செய்தேன். பொது ஜனங்களையும் மங்களேசனுக்கு எதிராகக் கிளப்பி விட்டுக் கொண்டிருந்தேன். பக்குவமான



காலம் வந்தபோது உன்னை அஜந்தாவிலிருந்து வரவழைத்தேன். பெரிய சைனியத்துக்குத் தலைமை வகித்து நீ வாதாபி நோக்கிச் சென்றாய். மங்களேசன் போரில் உயிரை விட்டான். நம்முடைய புகழ் பெற்ற பாட்டனார் சத்யாச்ரயப் புலிகேசி வீற்றிருந்து ஆட்சி புரிந்த சளுக்க சிம்மாசனத்தில் நீ ஏறினாய்."

"அண்ணா! உன்னுடைய ஒத்தாசையினாலேதான் வாதாபிச் சிம்மாசனம் ஏறினேன். உனக்கு நியாயமாக உரிய சிம்மாசனத்தை நீ எனக்காகத் துறந்தாய். என் மனத்தில் சிறிதும் களங்கம் இருக்கக்கூடாது என்பதற்காக உலக வாழ்க்கையையே துறந்து பிக்ஷு ஆனாய். உன்னுடைய மகத்தான பிரயத்தனங்களினாலேதான் மங்களேசனைக் கொன்று சிம்மாசனம் ஏறினேன். அதற்குப் பிறகு, இருபது வருஷ காலமாக நீ எனக்கு அன்னை, தந்தையாகவும், மந்திரியாகவும், இராணுவ தந்திரியாகவும் இருந்து வந்திருக்கிறாய். இன்று நர்மதையிலிருந்து வடபெண்ணை வரையில் வராகக் கொடி பறந்து வருவதெல்லாம் உன்னாலேதான். இதையெல்லாம் நான் ஒப்புக் கொள்கிறேன்.ஒப்புக் கொண்டு உனக்கு நன்றி செலுத்துகிறேன். ஆனால், இந்தப் பழைய கதையையெல்லாம் எதற்காக இப்போது ஞாபகப்படுத்துகிறாய்? உன்னிடம் எனக்குள்ள நன்றியை எந்த விதத்திலாவது நான் தெரிவித்துக் கொள்ள இடமிருக்கிறதா?" என்று புலிகேசி கேட்டு விட்டு ஆவலுடன் நாகநந்தியின் முகத்தை நிலா வெளிச்சத்திலே பார்த்தார்.

கடுமையான விரதங்களினால் வற்றி உலர்ந்திருந்த பிக்ஷுவின் முகத்தில் புலிகேசி என்றும் காணாத கனிவு தென்பட்டது.

"ஆம்; தம்பி! நான் உனக்குச் செய்திருப்பதற்கெல்லாம் பிரதியாக நீ எனக்கு செய்யக்கூடியது ஒன்று இருக்கிறது" என்றார் பிக்ஷு.

"அப்படியானால் உடனே அதைச் சொல்லு. இருபத்தைந்து வருஷமாக உனக்கு நான் பட்டிருக்கும் நன்றிக் கடனில் ஒரு பகுதியையாவது கழிக்கிறேன்."

"தம்பி! நீ வாதாபியை விட்டுப் புறப்படுவதற்கு முன்பே உனக்கு ஓர் ஓலை அனுப்பியிருந்தேனல்லவா? அதில் என்ன எழுதியிருந்தேனென்பது ஞாபகம் இருக்கிறதா?"

"எவ்வளவோ விஷயம் எழுதியிருந்தாய்; எதைச் சொல்கிறாய்?"

"காஞ்சி சுந்தரியை நீ எடுத்துக் கொள்; சிவகாமி சுந்தரியை எனக்குக் கொடு! என்று எழுதியிருந்ததைச் சொல்கிறேன்."

"ஆமாம்; அதைப் பற்றி இப்போது என்ன?"

"அப்போது, கேட்டதையே இப்போதும் கேட்கிறேன்."

"அண்ணா! இது என்ன? காஞ்சி சுந்தரியைத்தான் நம்மால் கைப்பற்ற முடியவில்லையே?"

"காஞ்சி சுந்தரி உனக்குக் கிடைக்கவில்லை! ஆனாலும், சிவகாமியை எனக்குக் கொடு என்று கேட்கிறேன்."

"அதெப்படி முடியும்? உண்மையில் மகேந்திர பல்லவனுடைய சபையில் அந்தப் பெண் நாட்டியம் ஆடியபோது நீ ஓலையில் எழுதியிருந்தது எனக்கு ஞாபகம் வந்தது. அவளை என்னுடன் அனுப்ப முடியுமா என்று பல்லவனைக் கேட்டேன். அவன் என்ன சொன்னான் தெரியுமா? கலை உணர்ச்சியேயில்லாத என்னுடன் அவள் வர மாட்டாள் என்று சொன்னான்! இப்போது மறுபடியும் திரும்பி காஞ்சி மீது படையெடுக்கச் சொல்லுகிறாயா?"


"வேண்டாம், தம்பி! மறுபடியும் படையெடுக்க வேண்டாம். காஞ்சி சுந்தரி உனக்குக் கிட்டவில்லை. ஆனால், சிவகாமி சுந்தரி எனக்குக் கிடைத்தாள். அவளைக் கொண்டு வந்தேன்."


"என்ன? என்ன? உண்மையாகவா?"

"தம்பி! அவளுக்காகவே நான் உன்னைப் போல வேஷந் தரித்தேன். அவள்



தந்தையின் உயிரைக் காப்பாற்றினேன். சிவகாமிக்காகவே படைத் தலைமை வகித்து மகேந்திர பல்லவனுடன் மணி மங்கலத்தில் போர் செய்தேன். அவளை முன் னிட்டே போரை நடுவில் நிறுத்தி விட்டுப் பின் வாங்





அருள்வாக்கு!

பிரம்மா ஹம்ஸரூபமாகப் போய்ப் பார்த்தும் சிவபெருமானின் சிரஸ் அகப்பட வில்லை என்றும், விஷ்ணு வராக ரூபமாகப் போயும் பாதம் அகப்படவில்லை என்றும் சொல்வதன் தாத்பர்யம் என்னவென்றால், பரமாத்மா ஆதி அந்த ஹீனமான வஸ்து என்பதுதான். சிருஷ்டி, பரிபாலனம் எல்லாவற்றையும் கடந்த வஸ்து அது என்பதுதான். இப்படி அடி முடி தேடி பிரம்மாவும் விஷ்ணுவும் பெற முடியாதவரையே, 'என் சாமர்த்தியத்தால் அறிய முடியும்' என்கிற அகங்காரமில்லாமல், அன்போடு பக்தி செய்து உருகினால், வெகு சுலபத்தில் அவர் நமக்கு அகப்பட்டு விடுவார். அன்பினாலே மிக மிக விரைவில் திருப்தி பெற்று அனுக்கிரகிப்பவர் 'சிவபெருமான்' என்பதாலேயே அவருக்கு ஆசுதோஷி என்று ஒரு பெயர் இருக்கிறது. 'ஆஷுடோஷ் முகர்ஜி' என்று சீர்திருத்த (reformist) முக்கியஸ்தரைச் சொல்வார்கள். ஆசுதோஷிதான் 'ஆஷுடோஷ்' என்றாயிற்று. 'ஆசுகவி' என்றால் கேட்டவுடனே கவி பாடுகிறவர் அல்லவா? இப்படியே ஸ்மரித்த மாத்திரத்தில் சந்தோஷித்து அநுக்கிரகம் பண்ணுகிற வள்ளல்தான் ஆசுதோஷி.



சகல பிரபஞ்சமும் அடங்கியிருக்கிற லிங்க ரூபமானது ஆவிர் பவித்த சிவராத்திரி மகா சதுர்த்தசியிரவில் அவரை அப்படியே ஸ்மரித்து ஸ்மரித்து அவருக்குள் நாம் அடங்கியிருக்க வேண்டும். அதைவிட ஆனந்தம் வேறில்லை.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

கினேன்:"

"அண்ணா! எல்லாம் விவரமாகச் சொல்லு!" என்று புலிகேசி கேட்க, நாக நந்தி தாம் மூன்று வருஷத்துக்கு முன்னால் தென்னாட்டுக்கு வந்ததிலிருந்து செய்ததையெல்லாம் விவரமாய்க் கூறினார்.

எல்லாவற்றையும் கேட்ட புலிகேசி, "அண்ணா! அந்த நாட்டியப் பெண்ணின் மீது உண்மையாகவே நீ காதல் கொண்டிருப்பதாகவா சொல்கிறாய்?" என்று நம்பிக்கையில்லாத குரலில் வினவினார்.

"ஆமாம் தம்பி! சத்தியமாகத்தான்."

"ஆனால், நீ அஜந்தாவில் புத்த குருவின் முன்னால் செய்த பிரதிக்ஞை என்ன ஆவது? நாடெங்கும் காவித் துணி அணிந்து ஸ்திரீலோலர்களாய்த் திரியுங் கள்ளப் பிக்ஷுக்களின் கூட்டத்தில் நீயும் சேர்ந்து விடப் போகிறாயா, அண்ணா?"


"தம்பி! இந்தக் கேள்வியை எதிர் பார்த்தேன். இதற்கு மறுமொழி சொல்லவும் ஆயத்தமாயிருக்கிறேன். ஆனால், இரண்டொரு வார்த்தையிலே சொல்ல முடியாது. விவரமாகச் சொல்ல வேண்டும். கேட்கிறாயா?"

"கட்டாயம் கேட்கிறேன். ஆனால், சொல்லத்தான் வேண்டுமென்று உன்னை நான் கட்டாயப்படுத்தவில்லை. உனக்கு இஷ்டமிருந்தால் சொல்லு; இல்லாவிட்டால் சொல்ல வேண்டாம்!" என்றார் வாதாபிச் சக்கரவர்த்தி.

உண்மையில் மேற்படி விவரத்தைக் கேட்கப் புலிகேசியின் உள்ளம் துடிதுடித்தது. அதே கணத்தில் அவருடைய மனத்தில் அசூயையின் விதையும் விதைக்கப்பட்டது. இத்தனை நாளும் புத்த பிக்ஷுவின் இருதயத்தில் தன்னைத் தவிர வேறு யாரும் இடம் பெற்றதில்லை. அவருடைய அன்புக்கெல்லாம் தாமே உரியவராயிருந்தார். தம்முடைய நன்மையைத் தவிரப் பிக்ஷுவுக்கு வேறு எந்த விஷயத்திலும் கவலையும் கவனமும் இல்லாமலிருந்தது.

இவ்வளவு காலத்துக்குப் பிறகு இப்போது பெண் ஒருத்தி, நாட்டியக்காரி, அவருடைய உள்ளத்தில் இடம் பெற்று விட்டாள்! "ஆம்! இப்போது என்னைக் காட்டிலும் அந்தப் பெண்ணிடந்தான் பிக்ஷுவுக்கு அபிமானம்! அவள் படுநீலியாயிருக்க வேண்டும்!" என்று புலிகேசி தம் மனத்திற்குள் அசூயையுடன் எண்ணமிட்டார்.

(தொடரும்)



திருவருள் பொழியும்

திருவண்ணாமலையில் பௌர்ணமி தினத்தில் அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

பேரன்புடையீர்! நமஸ்காரம்.

பஞ்சபூதத் தலங்களில், அக்னி தத்துவமாக விளங்கும் திருவண்ணாமலை, நினைக்க முக்தி தரும் புண்ணிய க்ஷேத்திரம். கிரியே சிவமாகவும், சிவமே கிரியாகவும் விளங்குவதால் இங்கு கிரிவலம் வருவது சிவபெருமான் உறையும் கைலாயத்தையே வலம் வருவதற்கு ஒப்பாகும். ஏராளமான சித்தர்கள், ஞானிகள், முனிவர்கள், ரிஷிகள் வாழ்ந்து, தவமியற்றி, வரம் பெற்று, மோட்சம் அடைந்த புனித புண்ணிய க்ஷேத்திரம் திருவண்ணாமலை. இங்கு பௌர்ணமி காலத்தில் கிரிவலம் வரும் பக்தர்களுக்கும், சாதுக்கள், ஊனமுற்றோர், சன்யாசிகள், ஏழை எளிய மக்கள், பக்தர்கள் ஆகியோருக்கு அன்னம் அளிப்பது மகத்தான புண்ணியத்தை நமக்குத் தருகிறது.

தடுத்தாட் கொள்வது, கிரக நிலைகளை மாற்றுவது, ஊழ்வினைகளை நீக்குவது, முக்தி தருவது, ஆயுளை நீடிப்பது, நோய்களைக் குணப்படுத்துவது போன்ற சிவ லீலைகள் நிகழ்ந்த இவ்விடத்தில், அன்னதானத்தின் மூலம் புண்ணியம் பெறுவதும், மோக்ஷம் அடைய முயல்வதும் உயர்ந்த லட்சியமாகும்.

★ மனச்சாந்தி பெற ★ திருமணம் கைகூட ★ நோய்நொடிகள் தீர ★ எண்ணங்கள் வெற்றி பெற ★ சந்தான பாக்யம் பெற ★ பிரச்சனைகள் எளிதில் தீர ★ கணவன் மனைவி ஒற்றுமை ஏற்பட ★ தொழிலில் மேன்மை பெற ★ பிரிந்தவர்கள் ஒன்று சேர ★ கடன் தொல்லைகளிலிருந்து விடுபட ★ நினைத்த காரியம் நிறைவேற ★ உங்களுக்காக நாங்கள் அன்னதானம் செய்து பிரசாதம் அனுப்பி வைக்கிறோம்.

★ அன்னதானம் செய்ய சிறிய தொகையும் ஏற்றுக் கொள்ளப்படும். ★ ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பி வைக்கப்படும். ★ ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும். ★ ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் ஐந்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

ரூ.1000 மற்றும் ரூ. 5,000 அளிக்கும் அன்பர்களுக்கு பகவத்கீதை புத்தகம் அல்லது கந்தபுராணம் புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். அன்னதானப் பணிக்காக நன்கொடை வழங்கும் அன்பர்கள் நேரில் வந்து கலந்து கொள்ளலாம். கிரிப்பிரதட்சிணம் செய்து கோரிய பலனையும் பெற்றுக் கொள்ளலாம்.

நன்கொடைகளை **SRI ANNALAKSHMI ANNADHANA SEVA TRUST, CHENNAI-41** என்ற பெயரில் CHEQUE/D.D./M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். என்றென்றும் புனித சேவையில் மனப்பூர்வமாக செயலாற்றும் எமது பணிக்கு உங்களது மேலான ஒத்துழைப்பை என்றென்றும் நாடுகிறோம்.

CHEQUE/D.D./M.O. அனுப்ப வேண்டிய முகவரி :

ஸ்ரீ அன்னலஷ்மி அன்னதான ஸேவா டிரஸ்ட்

SRI ANNALAKSHMI ANNADHANA SEVA TRUST

M-11/F-4, TNHB FLATS, I MAIN ROAD, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041. SOUTH INDIA

☎: 4900303, 4900603 Fax: (044)4916316 E-mail: gopuradarisanam@yahoo.com

மூல நோய் வந்தால் இப்படிச் சிரிக்க முடியுமா?

சமீபத்தில் ஒரு கல்யாண விருந்து. பக்கத்து இலைக்காரர் என்னைச் சாப்பிட விட்டால்தானே...?

"ஸார்... எனக்கு உட்காருகிற இடத்தில் பிரச்னை" என்று ஆரம்பித்தார்.

"தள்ளி உட்கார்ந்துக்கிறதுதானே?" என்று நான் ஜோக் அடித்தாலும், அவர் விடுவதாயில்லை.

"அதில்லை ஸார்... எனக்கு மூல உபத்திரவம்" என்று நுணுக்கமாக விவரிக்க ஆரம்பித்தார்.

"ஆதி மூலமே" என்று மனசுக்குள் கதறுவதைத் தவிர வேறு வழி...?

"நான் அந்த அறையில்தான் இருக்கேன். சாப்பிட்டு முடிச்சதும் வாங்க... என்னன்னு பார்த்துடலாம்" என்றேன்.

அதே போல வந்தார்... பரிசோதித்தேன். ஆரம்ப நிலையில் இருந்தாலும், வலி கடுமையாக இருந்ததை என்னால் உணர முடிந்தது. கல்யாணம் முடிந்ததும் என்னுடைய கிளினிக்குக்கு வருவதாகச் சொன்னார்...

பத்து நாள் கழித்து வந்தார். பரிசோதித்துப் பார்த்தபோது, குணம் கூடியிருந்தது. வலியும் குறைந்திருப்பதாகச் சொன்னார்.

"வெரிகுட்...! பெட்டரா இருக்கீங்க.... மருந்து ஏதாவது சாப்பிட்டீங்களா?" என்று கேட்டேன்.

"மருந்தெல்லாம் சாப்பிடலை ஸார்... கல்யாணத்துக்கு வந்திருந்த எங்க பெரியம்மாக்கிட்டே பைல்ஸ் ப்ராப்ளம் பற்றிச் சொன்னேன். 'கடைந்தெடுத்த மோரும், கருணைக் கிழங்கும் சாப்பிடுடா. சரியாப் போயிடும்'னாங்க. சொன்னதோட, செஞ்சும் கொடுத்தாங்க... என்ன ஆச்சரியம்... வலி ரொம்பவே குறைஞ்சுடுச்சு..." என்றார்.

"கன்ஸல்டேஷன் ஃபீஸை பெரியம்மாக்கிட்டேக் கொடுங்க... ரொம்ப நல்ல கை வைத்தியம் சொல்லியிருக்காங்க" என்று பாராட்டினேன்.

உண்மைதான்! 'ஓல்டு ஈஸ் கோல்டு' என்று சும்மாவா சொன்னார்கள்! அவர்கள் அனுபவத்தில் பலன் கண்ட மருந்து, பெரும்பாலும் ஆயுர்வேத மருந்தாகவே இருக்கிறது.

ஆசனவாய், ஆயுர்வேதத்தில் ஒரு மர்மஸ்தானமாகக் கருதப்படுகிறது. இதற்கு 'சத்ய ப்ராணஹர மர்மம்' என்று பெயர். இதில் அடிபட்டு, இரத்தம் அதிகமாக வெளியேறினால், உயிர்ச்சேதம்கூட ஏற்பட்டுவிடும். இதனால் இந்த உறுப்புக்கு பிரத்யேக கவனம் தேவை.

'ப்ரோக்டோஸ்கோப்பி' என்று சொல்லக்கூடிய ஒரு நாளத்தை, ஆசனவாயில் செலுத்தி பரிசோதிக்கும் நவீன முறையை, சுஷ்ருத மகரிஷி அந்தக் காலத்திலேயே செய்திருக்கிறார் என அறியும்போது வியப்பு ஏற்படுகிறது. 'அர்சோ எந்திரம்' என்றும் 'பகந்தர எந்திரம்' என்றும் துவாரங்கள் பொருந்திய நாளங்களை (ட்யூப்ஸ்) ஆசனவாயில் செலுத்தி மூலத்தின் தன்மை அறியப்பட்டிருக்கிறது. இப்போது சிக்மாய்டோஸ்கோப், கொலனோஸ்கோப் என்றெல்லாம் வந்துவிட்டது.

மூலநோய் என்றால் என்ன? ஆசனவாய் பகுதியில் உள்ள சில இரத்த நாளங்களின் அழற்சியினால் ஏற்படக்கூடிய நோய்தான் மூலநோய். இதனால் அந்தப் பகுதியில் கட்டிகள், இரத்தக் கசிவு ஏற்படலாம். மூலம் வெளியில் தள்ளலாம். உள் மூலமாகவோ, வெளி மூலமாகவோ வலி ஏற்படுத்தலாம். மலச்சிக்கல் ஏற்பட்டு, முக்குவதாலும் இது அதிகரிக்கலாம். கல்லீரல் நோய் காரண



மாகவும் சில நேரங்களில் மூலம் உருவாகலாம். கர்ப்ப காலங்களில் அபான வாயுவின் வேகம் அதிகரித்தும் ஏற்படலாம்.

எட்டு நோய்களை ஆயுர்வேதம் மஹா வியாதிகள் என்று சொல்கிறது. வாத வியாதி, சிறுநீரகக் கற்கள், குஷ்ட நோய், மதுமேக நோய், பகந்தர நோய், அர்சஸ், அபஸ்மாரம், கிரஹணி போன்றவை முதல் எட்டு ரேங்குகள் வாங்கியுள்ளன. இதில் 'அர்சஸ்' என்பதுதான் மேதகு மூல நோய்.

மூலநோய் நிச்சயமாகக் கொடுமையான நோய்தான். சில நேரங்களில் வெளியில் பிதுங்குகின்ற மூலம், உள்ளே சென்று விடும். சில நேரங்களில் அடாவடி செய்யும். கையால் அழுத்தி, அதை உள்ளே தள்ள வேண்டியிருக்கும். முழுமையாக மலம் கழிக்காதது மாதிரி அவஸ்தையாக இருக்கும். ஆசனவாயில் அரிப்பு ஏற்படும். எரிச்சலும் வலியும் இருக்கும். ஆசன வாயில் வெடிப்பு ஏற்பட்டு புண் ஏற்பட்டால், அதற்கு fissure என்று பெயர். உலர்ந்த கட்டியான மலத்தை, முக்கித் தள்ளும்போது, ஆசன வாயில் வெடிப்பு ஏற்படலாம். மலம் கழிந்த பிறகு மிகுந்த வலியும், இரத்தப் போக்கும் ஏற்படலாம். சில நோயாளிகள் இந்த வலிக்கு பயந்தே, மலம் கழிப்பதைத் தள்ளிப் போடுவார்கள். அதனால் மலச்சிக்கல் பிரச்னையும் சேர்ந்து கொண்டு, ஓவர்ஆல் ஆரோக்கியமே சீர் குலைந்து விடும்.

இது தவிர, ஆசனவாயில் கட்டிகள் என ஒரு தினுசு இருக்கிறது. இதற்கு Ano rectal abscess என்று பெயர். கட்டிகளுக்கு, சரியான சிகிச்சை தரப்படாமல் போகும்போது, அவை ஆசனப் பாதையில் வேறு மார்க்கங்களை உருவாக்கும். 'பகந்தரம்' என்று சொல்லக்கூடிய fistula உருவாவது இப்படித்தான்.

இது அல்லாமல், 'பரிகாத்திகா' என்றொரு நோய் உண்டு. இதை 'Proctitis' என்று சொல்லலாம். ஆசன வாய் அழற்சி இது. இதனால் ஆசனவாயில் புண் ஏற்படும். இது இலேசில் மசியாத நோய் என்பதால் நாள்பட்ட சிகிச்சை தர வேண்டி வரும். சில வைரஸ் கிருமிகளினாலோ, குஷ்ய ரோகங்களினாலோ இவை ஏற்பட வாய்ப்புண்டு.

'குதப்பிரம்சம்' என்று சொல்லக்கூடிய rectal prolapse நோயும் பொதுவாகக் காணப்படுகிறது. ஆசனவாய் நழுவி, நெகிழ்ச்சி ஏற்படும்.

ஆசனவாயில் அரிப்பு வந்தாலும் தொல்லைதான். 'pruritis ani' எனப்படும் இந்த அரிப்பு நோய், சில சரும நோய்களினாலோ, ஒவ்வாமையினாலோ ஏற்படலாம். சுகா தாரமின்மை, அதிகமான வியர்வை, இறுக்கமான உள்ளாடை அணிதல் போன்றவற்றால் ஆசன அரிப்பு நோய் நேரலாம். முறையான பரிசோதனை செய்த பின்பே, நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி, சிகிச்சை தரப்பட வேண்டியிருக்கும்.

(தொடரும்)

டாக்டர் எல்.மகாதேவன்



ஜெயமின்றியும் ஜெயமுண்டு!





ஒவ்வொரு குறிப்பும் உணர்த்துவது 'ஜெய' என்று தொடங்கும் ஒருவரின் பெயரை. ஆனால் அவர்களின் பெயரிலுள்ள 'ஜெய' என்ற பகுதி நீக்கப் பட்டுள்ளது. கட்டங்களில் உள்ள 'வி' என்ற எழுத்தை நீக்கிவிட்டால் அவர்களை மேலும் எளிதாகக் கண்டு பிடிக்கலாம்.


வி	ர்	வ	தே	ணி	லி	மா
சூ	வி	வி	வி	வி	மோ	வி
வி	ர்	வி	வி	வி	க	வ
ஜ்	வி	யா	ன்	வி	ன்	ர்
ரா	வி	த	வி	தா	வி	த்
வி	ந்	வி	லி	வி	வி	த
கா	வி	ல	வி	வி	வி	னே

உதவிக் குறிப்புகள் :

1. சில நேரங்களில் பிரம்மோபதேசம்
2. 'அம்மா' என்றால் அன்பு
3. இலங்கைக்கு விளையாட்டாகப் புகழ் சேர்த்தவர்
4. தன் புதினங்களின் நீ...ளத்தாலும் பலரை கவனிக்க வைத்தவர்
5. 'புலிகள்' வெறுப்பு
6. அக்காவைப் போலவே இவரும் திரையில் ஆடாத ஆட்டமில்லை
7. அஷ்டபதிக்காரர்
8. தாத்தா-பாட்டியையும் மனத்தில் பதியவைத்த கவர்ச்சித் தூரிகைக்காரர்

- ஜி.எஸ்.எஸ்.

விடைகள் : 1. ஜெயகாந்தன் 2. ஜெயலலிதா 3. ஜெயசூர்யா 4. ஜெயமோகன் 5. ஜெயவர்த்தனே 6. ஜெயமாலினி 7. ஜெயதேவர் 8. ஜெயராஜ்



Machines approved by FDA & European Economy Council
முதன்முறையாக டாக்டர்களால் நடத்தப்படும் Health and Beauty Clinic
பிப்ரவரி 25 வரை Hair Scanning இலவசம்!
praba's
V Care
repêchage clinic
the ultimate health and beauty
உடல் எடையைக் குறைக்க...
வேண்டாத ரோமங்களை நீக்க...
மார்பகத்தை பெரிதாக்க, சிறிதாக்க...
அறுவை சிகிச்சையின்றி முகச்சுருக்கம் போக்க...
Acne, பரு, மங்கு மற்றும் மருநீக்க...
முகக்கருப்பை போக்க...
முகத்தை பொலிவாக்க...
ஹைடெக் ஃபேஷியல்ஸ்
பெர்மெனன்ட் மேக்கப்
பொடுகா? வழுக்கையா? முடிஉதிர்தலா? புழுவெட்டா? இவற்றிற்கு லேசர்சிகிச்சை
இந்தியாவிலேயே முதன்முறையாக!
praba's
are repêchage clinic
பொடுகு பிரச்சினையா? புழுவெட்டா?
கவலை வேண்டாம்! இந்தியாவிலேயே முதன்முறையாக Hair Scannerஆல் பொடுகின் அளவைப்பார்த்து Imporetd Laser Machines மற்றும் மூலிகைகளினால் பொடுகிற்கு நிரந்தர தீர்வு அளிக்கப்படுகிறது.
முடி வளரவேண்டுமா?
முடி உதிர்தலினால் வழுக்கையாகி விடுமோ என்ற பயம் வேண்டாம். எங்களின் மருத்துவர்கள் முடி சாம்பிள்ஸ் எடுத்து டெஸ்டிங் செய்து மயிர்க்கால்களை (Hair Folicle) வலுப்படுத்தும் Root Stimulation என்ற சிகிச்சையினால் முடி கால்களை வலுப்படுத்தி எந்தவிதமான முடி உதிர்தல் பிரச்சினைக்கும் தீர்வு அளிக்கிறார்கள்.
நிறுவனர் திருமதி Praba Reddy
(Member in British association of Beauty Therapy and cosmetology)
D.T.E., B.T.H.D., M.A., M.S., Dip. in Bridal Dressing (Singapore)
Cinema Secrets Hollywood Makeup (London) World Dip. in Hair Colouring (Paris)
Head office :
PRABA'S HERBAL BEAUTY CLINIC
116, Bussy Street, Pondycherry - 1.
Ph : 0413-2348920, 21, Cell : 98942 33777
எங்களின் மற்றுமொரு புதிய clinic
BABTAC
*for both ladies and gents
#15, new giri road, g.n.chetty road, (near apollo cliniq) t.nagar, chennai - 17.
ph : 28260064, cell : 98412 77688, 98942 33777 email : carolinpraba@yahoo.com

தூள்!

வாசலில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு வந்து முதுகில் விளாசினாள் கமலி.



"குழந்தையை அடிக்காதே, அதற்கு என்ன தெரியும்?"

"போதும், ஒண்ணும் பேச வேண்டாம்! எப்பப் பார்த்தாலும் புஸ்தகமும் கையுமா இருங்க! மாடு மாதிரி உழைக்கிறானே, ஏதோ கொஞ்சம் குழந்தையையாவது பார்த்துக் கொள்வோம்னு தோணுதா? என் தலையெழுத்து."

"மெள்ளப் பேசும்மா... அக்கம் பக்கத்திலே இருக்கிறவங்க என்ன நினைப்பாங்க?"

"நல்லா கேட்கட்டும்.... அப்படித்தான்..." – முணுமுணுத்துக் கொண்டே சமையலறைக்குள் விரைந்தாள்.

கமலி இவ்வளவு கத்தினாலும், அவள் தான் எல்லாம் செய்ய வேண்டியிருந்தது. உடல் நலம் குறைந்த தாய், தந்தை, இரண்டும்கெட்டான் வயதில் சகோதரிகள்....

கமலியைப் பார்த்தால் பாவமாக இருந்தது. அதைவிட, குழந்தையைப் பார்த்தால் பரிதாபமாக இருந்தது. என் மீது இருந்த கோபமெல்லாம் திசைமாறி குழந்தையைத் தாக்கிக் கொண்டிருந்தது.

கமலி, வசதியான குடும்பத்திலிருந்து வந்தவள். என்னோடு பிறந்த ஐந்து பேர் அவளுக்குக் கூட்டமாகவே பட்டது. "நான் இப்படி ஒரு குருவிக் கூட்டிலே மாட்டிப்பேன்னு கனவில் கூட நினைக்கலே"... அவள் தாபம் அவ்வப்பொழுது என்னைத் தாக்கியது.

யோசித்துப் பார்த்தேன். கமலி சந்தோஷமாக இருக்க வேண்டும். அவள் கஷ்டப்பட்டுக் கொண்டு நான் மட்டும் சந்தோஷமாக இருப்பது என்ன தாம்பத்யமோ!

தனிக்குடித்தனம்! எத்தனை பணப் பிரச்னை இதனால் ஏற்பட்டாலும் இது தான் முடிவு. அட்லீஸ்ட் மன நிம்மதியாவது எல்லாருக்கும் இருக்கும்.

அடுத்த மாதம், பூந்தமல்லியில் ஒரு போர்ஷன். தனிக்குடித்தனம் ஜாம், ஜாம் என்று ஆரம்பித்துவிட்டது.

"கமலி, தனிக்குடித்தனம் வைச்சது உனக்கு சந்தோஷந்தானே?" தனிமையில் ஆசையாகக் கேட்டேன்.

"ஆமாம், நீங்க வைச்சிங்களாக்கும்! அவங்க ஜாலியா இருக்கணும்னு நம்பளை துரத்திட்டாங்க. இதுலே சந்தோஷம் என்ன வேண்டிக்கிடக்கு. அநாதையாட்டம் இருக்கேன்... எல்லாம் என் தலையெழுத்து..." – சலித்துக் கொண்டாள்!

அரவிந்த் சந்திரா

ஈர நிலம்!

டியூஷன் முடிந்து ராசாத்தி வீட்டுக்குப் போனபோது, அவளுடைய அம்மா லட்சுமி கையில் மாவுக் கட்டுடன் படுத்துக் கிடந்தாள்.

"அய்யோ... என்னம்மா ஆச்சு..!" பதறினாள் ராசாத்தி..

"தண்ணி தூக்கப் போன இடத்துல வழுக்கி விழுந்துட்டேன்... நான் வேலை செய்யற பார்வதியம்மா வீட்டுலே, நாளைக்கு விருந்தாளிங்க வர்றாங்களாம். ஏகப்பட்ட வேலை இருக்கும். எனக்குத் தான் இப்படி ஆயிடுச்சே... எப்படிச் சமாளிக்கப் போறாங்களோ?"

"சரிம்மா. அதுக்கு இப்ப என்ன பண்றது?"

"அந்தம்மா என்னைத்தான் மலை போல் நம்பிக்கிட்டு இருப்பாங்க. அவங்களைத் தவிக்க விடலாமா? நீ நாளைக்கு மட்டும் போய் வேலை செஞ்சு கொடுத்துட்டு வாம்மா... என் கண்ணில்லே!" என்று கெஞ்சினாள்.



அம்மாவின் கெஞ்சலுக்குப் பணிந்து, ராசாத்தி மறுநாள் வேலைக்குப் புறப்பட்டாள்.

"ராசாத்தி... எனக்குக் கை ஒடிஞ்சு போச்சுன்னு கேள்விப் பட்டா அந்தம்மா துடி துடிச்சுப் போயிடுவாங்க. அதனாலே சின்ன காயம்தான். ஒரு வாரத்துலே வந்துடுவேன்னு சொல்லி வை – என்ன புரிஞ்சுதா?"

வாசல்வரை வந்தவள், "இலேசான அடிதான்னு சொல்லு. பயப்படற மாதிரி உளறி வைக்காதே... அந்த அம்மா ரொம்ப கவலைப்படும்" மீண்டும் ஞாபகப்படுத்தினாள். பார்வதியம்மா கவலைப்படாதவாறு அம்மாவுக்கு அடிப்பட்டதைச் சொல்ல வேண்டுமே, என்று கவலைப்பட தொடங்கினாள் ராசாத்தி.

"நீதான் லட்சுமியோட மகளா?... என்னாச்சு அவளுக்கு." என்று கேட்டுக் கொண்டே வெளியே வந்தாள் பார்வதி.

அவள் முகத்தில் தென்பட்ட கவலை ரேகைகள் ராசாத்திக்குச் சங்கடத்தை ஏற்படுத்தின.

"அம்மா... நேத்திக்கு, தண்ணி.." என்று சொல்லத் தொடங்கியதை, கவனிக்காமலேயே....

"வர முடியாதாம்மா... உன்னை அனுப்பிச்சாளா?" என்று எரிச்சல் பட்டாள்.

தலையாட்டினாள் ராசாத்தி.

"சரி...சரி... முதல்லே பாத்திரம் தேய்ச்சு அலம்பி வை. எனக்குத் தலைக்கு மேலே வேலை கிடக்கு" என்று உள்ளே போனாள்.

"அம்மாவுக்குக் காயம் அதிகமில்லை. கவலைப்பட வேண்டாம்" என்று சொல்லும் வாய்ப்பு, கடைசி வரை ராசாத்திக்குக் கிடைக்கவேயில்லை.

வடுவூர். சிவ முரளி

டைரக்டர் நினைத்தது... நேர்மை தவறாத போலீஸ் இன்ஸ்பெக்டராக ஹீரோ சத்யராஜ், சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப் பட்டு, தானே குற்றவாளி ஆகி, "நாட்டின் நிலைமை இப்படி ஆகிவிட்டதே" என்று படம் பார்ப்பவர்களின் மொத்த அனு தாபத்தையும், ஆதங்கத்தையும், ஆத்திரத் தையும் வாரி வாரிக் கொட்டிக் கொள்வார் என்பது!

கடைசியில் நடந்தது... ஐயோடைஸ்டு உப்பை விடுங்கள், கல் உப்புக் கூட பெறாத விஷயங்களுக்கு எல்லாம் பிளட்பிரஷரை ஏற்றிக் கொண்டு, டயலாக்குகளை அள்ளி வீசி, லபக், லபக் என்று சட்டத்தைப் பீச் சாங்கையில் எடுத்துக் கொண்டு, தீபாவளி துப்பாக்கி கணக்கில் டப்...டுப்... என்று மானாவாரியாகச் சுட்டுத் தள்ளும் ஒரு ஹாஃப்-பாயில்ட் இன்ஸ்பெக்டர்! 'பழம்-காய்' என்று மாறி மாறி தங்களுக்குள் அரை-டவுஸர் விளையாட்டு விளையாடும் 'குவார்ட்டர்-பாயில்ட்' வில்லன்கள்... "நாட் டின் நிலைமையைப் பற்றி அப்புறம் கவ லைப்படலாம். முதலில் தமிழ் சினிமாவின் நிலைமை இப்படி ஆகிவிட்டதே!" என்ற ஆடியன்ஸின் மொத்த அனுதாபத்தையும், ஆதங்கத்தையும், ஆத்திரத்தையும் வாரி வாரிக் கொட்டிக் கொண்டிருக்கிறார் டைரக்டர் ராஜ்கபூர்.

கதாபாத்திரங்கள் இருக்கும் லக்ஷணத் தில் நடிப்பு - அலசல் ஒன்றுதான் குறைச் சலாக்கும்!

'அடாவடித்தனம் - ஸ்திரீ லக்ஷணம்' என்று கொடி பிடிக்கும் டீ.வி சீரியல்களின் பாதிப்பு போலும்... அடேங்கப்பா, எஸ்.ஐ மனைவி என்ன, இந்தப் போடு போடுகிறார்?

தேவா, கேட்க வேண்டுமா? 'அச்' என்று தும்மினால் ஒரு டப் பாங்குத்து. 'லொக்' என்று இருமி னால் இன்னொரு டப்பாங்குத்து, உன்னிகிருஷ்ணனின் குரல் பாடல் மெட்டுக்கு - ம்ஹூம்...



ராமச்சந்திரா

ஏதோ கங்குலி மேட்ச்சை ஜெயித்த மாதிரி... கொஞ்சம்கூட பொருந்தவே இல்லை!

'உன்ற நொள்ளிக்கண்ணுக்கு ஒரு தம்மாத்தூண்டு நல்ல விச யம்கூட தெரியலையாக்கும்' என்று அங்கலாய்ப்பவர்களுக்கு: 'தெரிந் தது... 'திரு'பாண்டியராஜன்!'

- கிருஷ்ணா சிதம்பரம்

● ஜஸ்ட் பாஸ்

5

சிலீரென்று காற்று முகத்தில் அடித்தது. தலையைக் கலைத்தது. முகத்தைத் திருப்பிக்கொள்ள விருப்பமில்லை. முன்னிருக்கையில் அமர்ந்திருப்பவரின் கூந்தல்பூ காற்றில் ஆடியாடி அஞ்சலியின் முகத்தை வருடியது. பூச்சரம் எழுந் தெழுந்து அசைவது, வேறெதையும் கவனிக்க விடாமல் சிந்தனையைக் கலைத்தது.

நான்கைந்து நாட்களாக வீட்டிலேயே அடைந்து கிடந்ததும், கூடுதலான மன உளைச்சல்களும் வெளிக்காற்று பட்டவுடன் மெல்ல மெல்லக் கரைந்து, மனசே இலே சாகிப் போவது போலிருந்தது.

'பள்ளிக்கூடம் வருகிறோம்...' என்ற நினைவே உள்ளுக்குள் பரபரப்பாயிருந்தது. தினந்தினம் பார்க்கிற அதே பிள்ளைகள் என்றாலும்கூட, நான்கு நாட்களின் சிறு இடைவெளிக்குப் பிறகு பார்க்கையில், புது உற்சாகமொன்று தொற்றிக் கொள்கிறது. இவளிடம் சொல்வதற்கென்று குழந்தைகள் கதைகதையாய்ச் சேர்த்து வைத்திருப்பார்கள்.

'டீ...ச்...ச...ர்...' என்று இழுத்தபடி ஆரம்பித்து, 'கமலியோட ஆயா செத்துப் போச்சு. ரெண்டு நாளாவே அவ ஸ்கூலு வர்லீங்க... டீச்சர்....' என்பதாய் குழந்தைகள் செய்திகள் சொல்ல, ஆளாளுக்குப் போட்டி போடுவார்கள்.

எல்லாவற்றையும் மெலிதான தலையாட்டலோடும், 'உம்' கொட்டியபடியும் ரசித்துக் கேட்பாள் அஞ்சலி. கேட்கக் கேட்க குறையாத, சொல் லச் சொல்ல வற்றாத கதையுலகம் குழந்தை களினுடையது என்பதை அறிந்திருந்தாள்.

நிறுத்தம் வந்துவிட்டது. இறங்கிக் கொண் டாள்.

செம்மண்ணும், சரளைக் கற்களும் நிரவி விரிந்து கிடந்த பாதை, 'ஓ..'வென அவளை வரவேற்கக் காத்திருப்பது போல் சந்தோஷம் வந்தது.

சின்னக் கூழாங்கல்லொன்றை காலால் உதைத்தாள். கொஞ்ச தூரத்தில் கிடந்த மற் றொரு கல்லின் மேல் அது மோதியது. மோதிய கல்லை விடுத்து, அங்கிருந்த மற்

யாரிடம்



சொல்வேனடி தோழி!

அ.வெண்ணிலா

றொரு கல்லை திரும்ப உதைத்தான். அது வேறொரு கல்லில் மோதியது. மாறிமாறி உதைத்துக் கொண்டே நடந்தாள்.

புடைவை எதிலோ மாட்டிக் கொண்டு இழுத்தது. திரும்பிப் பார்த்தாள். கார முள். புடைவை செடியில் மாட்டியிருந்தது. உதைத்துக் கொண்ட கல்லின் போக்கில் நடந்ததில் பாதையை விட்டு, சற்றே ஒதுங்கி புற்களுக்கும், முட்களுக்குமான பகுதியில் நுழைந்திருந்தாள்.

முள்ளிலிருந்து புடைவையை இழுத்து சரி செய்து கொண்டு, கூழாங்கல்லைக் கையில் எடுத்துக் கொண்டு பாதைக்கு வந்தாள்.

சிரிப்பு வந்தது.

'சிறுபிள்ளை போல் விளையாடுவதற்கா, பாதை மாறி நுழைந்ததற்கா... எதற்காகச் சிரித்தோம்...' என்று அவளுக்குள்ளேயே கேட்டுக் கொண்டாள்.

பேருந்து நிறுத்தத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் அவள் வேலை பார்க்கும் பள்ளிக் கூடம். வடக்கு, கிழக்கு என எந்தப் பக்கம் பள்ளியிலிருந்து நடந்தாலும், இரண்டு கிலோமீட்டர் நடக்க வேண்டும் பேருந்தைப் பிடிப்பதற்கு.

ஆரம்பத்தில் நடப்பதென்பது மிக சிரமமாயிருந்தது. சிரமம் நடக்கிற கால்களுக்குக் கொஞ்சம் தான். வழியில் எதிர்படுகிறவர்களின் கேள்விகளுக்கு பதில் சொல்வதில் தான் அதிக சிரமமிருந்தது.

"என்னங்க...டீச்சர். நடந்து வர்றீங்க. சைக்கிள் ஒண்ணெ இங்கெ கொண்டாந்து போட்டுக்கலாம்லெ...!"

"டீச்சருக்கு சைக்கிளு ஓட்டத் தெரியாதுன்னு நெனைக்கிறேன்..."

"எவ்ளோ தொலவு நடப்பீங்க டீச்சர். பேசாம டவுன்ல இருந்தே ஒரு வண்டியிலெ வந்துடுங்களே..."

"பெட்ரோல் யாருப்பா போடுறது...? டீச்சர் ரொம்ப சிக்கனம்னு நெனைக்கிறேன்..."

"உக்காருங்க... டீச்சர் சைக்கிள்ல போலாம்...!"

"டீச்சர் ஜாலியா நடந்து போறாங்க. அதை ஏம்ப்பா கெடுக்கிறெ...!"

அவர்களாகவே கேட்டு, அவர்களுக்குள்ளேயே பதில் சொல்லிக் கொண்டு போவார்கள். எல்லாவற்றிற்கும் மெலிதான சிரிப்பை மட்டுமே பதிலாக்கி விட்டு நடப்பாள்.

குழந்தைகளிடம் இவள் அன்போடும், பிரியத்தோடும் நடந்து கொள்கிற விதம் குழந்தைகளிடம் மட்டுமல்ல, ஊர் மக்களிடத்தும் இவளுக்கான நெருக்கத்தை அதிகப்படுத்தியிருந்தது.

"அஞ்சலி டீச்சர் வந்த பிறகுதாம்பா நம்ம ஊரு ஸ்கூலு சுத்தமாயிருக்கு. புள்ளெங்களும் ஒழுங்கா படிக்கிதுங்க...!"

ஏதாவது ஒரு குழந்தை வரவில்லை என்றாலும், விடமாட்டாள். உடனே, பக்கத்து வீட்டுப் பையனை அனுப்பி விசாரித்து வரச் சொல்வாள். ஊருக்கு மத்தியிலேயே பள்ளிக் கூடமும் அமைந்திருப்பதில் வசதியாயிருந்தது.

"ராசாத்திக்கு காச்சலாம் டீச்சர்..." ஓடி வந்து மூச்சிரைத்தபடி சொல்வான் விநாயகம்.

பள்ளிக்கூடம் விட்டதும், நேரே ராசாத்தியின் வீட்டிற்கே வந்துவிடுவாள்.

"அவுங்கப்பா காண்டிராக்டு வேலைக்காக வேலூரு போயிருக்காங்க. கையில செலவுக்குன்னு கொடுத்துட்டுப் போன காசு செலவாகிப் போச்சுங்க... டீச்சர். டவுனு ஆசுபத்திரிக்குக் கூட்டிட்டுப் போக பஸ்சுக்குக் கூட காசில்லீங்க...!" கண்கள் கலங்க, ராசாத்தியின் அம்மா சொல்ல....

பர்சைத் திறந்து, ஐம்பது ரூபாய் நோட்டொன்றை எடுத்தாள்.

"இந்தாங்க, மொதல்ல இவளெ ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போங்க. அவங்க அப்பா வந்த பிறகு பணம் வாங்கிக்கிறேன்..."

அஞ்சலியின் செயல்கள் அவளுக்கு இயல்பானதாய்ப் பட்டாலும், ஊர் மக்

களுக்கோ அது மிக நெருக்கமான அந்நியோன்யத்தை உருவாக்கியிருந்தது.

"டீச்சர்... வணக்கம்..." விநாயகத்தின் அப்பா சுப்பிரமணி. எதிரே சைக்கிளில் வந்தபடியே சொல்ல...

"வணக்கங்க..." என்றாள் சுதாரித்துக் கொண்டு. மணிச்சத்தம் குலுங்கக் குலுங்க மாடுகள் வந்தன. எந்த அவசரமும் இல்லாமல், மாடுகளும் – மாடோட்டிகளும் வருவது பொறாமையாயிருந்தது. கையில் ஒரு நீட்டுக் கம்புடன், மாட்டைப் பார்க்காதது போல் பார்த்துக் கொண்டே, வழியில் போவோர், வருவோரை வேடிக்கைப் பார்த்தபடி நடந்தார்கள்.

கன்றுக் குட்டிகள் வாழ்க்கை புரியாமல் முன்னும், பின்னும் துள்ளி ஓடிக் கொண்டு, மீண்டும் அம்மாவின் அருகில் வந்து மடி முட்டி, முகர்ந்துவிட்டு, மறுபடியும் துள்ளி ஓடின.

காலையில் அவசரமாய்க் கிளம்பி, வியர்க்க வியர்க்க வேகமாய் வந்து, பேருந்தைப் பிடித்து, நிறுத்தம் வந்ததும் இறங்கிய சில நொடிகளிலேயே சட்டென்று வாய்த்து விடுகிற இந்த அமைதி, அவளுக்கு மிகப் பிடித்திருந்தது. வீட்டிற்கும், பள்ளிக்கும் இடையிலான ஓட்டப் போட்டியில் தன்னைச் சமன்படுத்திக் கொள்ளும் மையமாக இதை எடுத்துக் கொள்வாள்.

இரண்டே ஆசிரியர்கள் பணியாற்றும் பள்ளி என்பதால், பெரிய பரபரப்புகள் எதுவுமில்லை தான். ஆனாலும், உள்ளே நுழைந்ததிலிருந்து, வெளியே வருவது வரை தொடர்ந்து வேலைகள் இருந்து கொண்டே இருக்கும்.

குழந்தைகளுக்கு எப்போதும் பாடம் நடத்திக் கொண்டேயிராமல், அவ்வப்போது குழந்தைகளை உற்சாகமூட்டுவது மாதிரி சின்னச் சின்ன வேலைகள் கொடுப்பாள்.

"சுமதி, கனகு, சின்னத்தம்பி, விசாலம், ராசு... நீங்க அஞ்சு பேரும் செடிகளுக்குத் தண்ணி ஊத்துங்க..." என்பாள்.

பள்ளிக் கூடத்தைச் சுற்றிலும் குழந்தைகளே அமைத்த முள்வேலி. அதை ஒட்டினாற்போல் வரிசையாய்ச் சில செடிகள். பள்ளியின் இருபுறமும் தென்னை மரம் இரண்டு. வலது புறத்தில் ஒரு வேப்ப மரம். அதையடுத்து ஒரு நெல்லி மரம்.

நெல்லி மரத்தைப் பார்க்கும் போதெல்லாம் சுந்தரின் நினைவு ஓடி வந்து அவளைச் சுற்றிக் கொள்ளும். அவன்தான் அதை இந்தப் பள்ளிக் கூடத்திற்குள் செடியாய் நட்டவன். செடி சற்றே மரமாகி, இளந்தளிர்களோடு மஞ்சள் வெயில் பட்டு எதிரொளிப்பதைப் பார்க்கும்போது, சுந்தரின் முகமாய் அது தெரியும். வேகமாய் வீசிய காற்றில் நெல்லி மரமே மெலிதாய்க் குலுங்கும். ஓரிரு இலைகளும் உதிரும்.

சுந்தரை முதன் முதலாய் இங்கு சந்தித்தது நினைவில் வந்தது. அப்போது பள்ளியில் வேலைக்குச் சேர்ந்து ஒரு வாரமிருக்கும்.

இவள் பேருந்தை விட்டு இறங்கி நடக்கும் நேரங்களில், அவனும் உடன் நடந்து வருவான். இவள் வரும் பேருந்தில்தான் அவனும் வருவான். பேருந்திலிருந்து இறங்கியவுடன் அவனுடன் ஒன்றாக நடக்க வேண்டும் போல் இருக்கும். அவனோ இறங்கியதும் வேகுவேகென்று முன்னால் நடப்பான். நேர்ப்பாதை என்பதால் எவ்வளவு தூரம் அவன் முன்னால் போனாலும், ஓரிரு முறையாவது திரும்பிப் பார்ப்பதுண்டு. அப்படிப் பார்க்கிற நேரங்களில் இவளும் பார்த்தால் சிரிப்பான். இவளும் சிரிப்பாள்.

அவ்வளவு தான், இருவரும் பேசிக் கொண்டதேயில்லை.

அப்படித்தான் ஒருமுறை இவளைத் திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டு சென்றிருப்பான் போலும். எதிரில் வந்த அன்னபூரணிக் கிழவியைப் பார்க்காமல் மோதி விட்டான்.

"அட... என்னப்பா. நானே சரியா கண்ணு தெரியாம பாத்து பாத்து ஓரமா வந்தா, தம்பி வந்து எம்மேல மோதுது..." கிழவியின் அங்கலாய்ப்பு சுந்தருக்கு என்னவோ போலாகிவிட்டது.

ஜிலு ஜிலு பொன்ஸாய்!

✉ பாபு யோகேஸ்வரனின் 'அம்மாயி' தொடர் நல்ல ஜிலு ஜிலு! புதிய எழுத்தாளர்களின் முயற்சிகள் தொடரட்டும்.
சத்தியமங்கலம், ஆர்.ரத்தினசாமி

✉ மனிதர்களில் இத்தனை குணாதியங்களா என்று ஆச்சரியப்பட வைத்தது. ஒரு மெகா தொடருக்கான கதைக் கருவைச் சுருக்கி, மினி தொடராகத் தந்தது அழகிய பொன்ஸாய்

போல இருந்தது.
சென்னை,
ஆர். நாகராஜன்

✉ 'அம்மாயி' அற்புதமான மினி தொடர். சில பேரன்களுக்கு அம்மா வழி பாட்டிகளின் பாச மழை 'புது மாப்பிள்ளை' போல சில மாதங்கள் வரை இருந்து பின் பொய்த்து விடும். அவ்விதத்தில் நம் கதாநாயகன், அம்மாயியை வாழ்நாள் முழுவதும் அடைந்ததால் பாக்கிய சாலியாகிறான்.
குட்டவாடம்பட்டி,
கொ. மூர்த்தி



''ஸாரி...பாட்டி...தெரியாம...'' என்றான். சிரித்துக் கொண்டே வந்தாள் அஞ்சலி. அவளைக் கண்டதும் சட்டென வழிவிட்டு விலகி நின்றான். அங்கிருந்து விலகிப் போகாமல் அப்படியே நின்றான். சுந்தரின் முகம் வியர்த்தது.

"என்னங்க... நின்னுட்டீங்க...?" இவளாகத் தான் முதலில் பேசினாள்.

பதில் சொல்ல வராமல் தடுமாறி, "இல்லீங்க, மேடம்... வந்து..." என்று இழுத்தான்.

''அதான் வந்துட்டீங்கள்ல, போங்க!'' என்றாள்.

''ம்...போகலாம்...''

இருவரும் நடந்தார்கள்.

நிறையத் தயக்கமிருந்தது சுந்தரிடம். இயல்பாய்ப் பேசினாள் அஞ்சலி.

சில முகங்களைப் பார்த்தவுடனே ஒரு நெருக்கமும், அன்பும் கிட்டிவிடும். அப்படியான ஒரு முகமாய் சுந்தரின் முகம் அவளுக்குள் பதிந்து போனது.

இருபது வயதில் இவளுக்கு அரசாங்க வேலை கிடைத்தது. இவளின் சொந்த ஊர், இங்கு உறவினர் வீட்டில் தங்கியிருப்பது, அப்பா – அம்மா, குடும்பம்... என எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்டாள்.

பட்டப் படிப்பு முடித்து, அடுத்து என்ன செய்வது என்பது தெரியாமல், நூலகப் புத்தகங்களை வாசித்துக் கொண்டு இருந்ததையும், மாமா காண்ட்ராக்ட் எடுத்துள்ள இந்த ஊர் குடிநீர்த் தொட்டி கட்டும் வேலைக்கு தற்காலிக மேற்பார்வையாளராக இருப்பதையும் சுருக்கமாய்ச் சொன்னான்.

அவனின் கூச்சம் அவளுக்கும், அவளின் படபடப்பான பேச்சு அவனுக்கும் ரொம்பப் பிடித்துப் போனது.

''இது கல்யாண்ஜியோட கவிதை நூல். ரொம்ப இயல்பான மொழி. படிங்க... உங்களுக்கு ரொம்ப நெருக்கமா இருக்கும்...'' என அவ்வப்போது இவளுக்கும் வாசிக்க புத்தகங்களைத் கொடுத்தான்.

இவளும் தான் எழுதிய கவிதைகளை அவனிடம் கொடுத்து படிக்கச் சொல்வாள். ஆரம்ப நாட்களில் "நல்லாயிருக்கு...!" என்று ஒற்றை வார்த்தைகளில் பதில் சொல்லி திருப்பித் தருவான். நாட்கள் ஆக ஆக, கவிதைகள் குறித்து விமர்சன பூர்வமாய் இவளோடு பேசத் துவங்கி விட்டான்.

ஒரு நாள் விடுப்பு வந்துவிட்டாலும், மனசின் சேகரங்கள் கூடிப்போயின இருவருக்கும். அடுத்த நாளின் சந்திப்புக்காகக் காத்திருந்தார்கள்.

பேசிப்பேசி விஷயங்கள் தீர்ந்து போனதாய் உணரும் நேரங்களில், மனம் புதிது புதிதாய் விஷயங்களைத் தேடித்தேடி பேசியது.

பட்டாம்பூச்சி பறப்பது, எறும்பு ஊர்வது, சூரியன் மேலெழுவது, மழை பெய்வது... எல்லாம் அதிசயங்கள் போலவும், தங்கள் வாழ்வில் புதிதாய் அறிமுகமாவது போலவும் உணர்ந்தார்கள்.

அவனைச் சந்தித்துப் பேசி இரண்டு நாட்களாயிற்று.

இன்று நிச்சயம் வருவான். புதிதாய் எழுதிய கவிதைத் தாளையும் எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

பேருந்தில் அவனில்லை.

ஒருவேளை, முன்பே போய் இறங்கி, இவளுக்காகக் காத்திருப்பானோ...?!

பேருந்தை விட வேகமாய் விரைந்தது மனசு. அவனிடம் பேசுவதற்கான விஷயங்களை வரிசைப்படுத்திக் கொண்டு, இறங்கினாள்.

பாதை, மனிதர்கள் யாருமற்று வனாந்திரமாயிருந்தது.


சுற்றுமுற்றும் பார்த்தாள்.

'என்னாயிற்று இவனுக்கு...?'

யோசிப்பைக் கலைத்தது.

தூரத்திலிருந்து கேட்ட மாடோட்டியின் 'ஹேய்...ஹேய்...' குரலும், மாட்டு மணிச் சத்தமும்.

(தொடரும்)



↑

சென்னை

அலைச்சல்கள் அளவுக்கு அதிகமாகி விட்டதாக நீங்கள் உணரும்போது பாண்டிச்சேரிக்கு வாருங்கள். வாழ்வை ஜீரணிப்பது மிகவும் சுலபம் என்பதை கவலைகள் மறையும்போது புரிந்து கொள்வீர்கள்.

பாண்டிச்சேரி

↓



PEACEFUL

Pondicherry

Give time a break.

மேலும் விவரங்களுக்கு தொடர்பு
கொள்ளவும் : பாண்டிச்சேரி சுற்றுலா :
தொலைபேசி 91-413-2334575/2339497/2330532.
ஃபேக்ஸ் : 91-413-2330532/2333590.
இ-மெயில் : e_ptdc@sify.com
இணைய தளம் : www.tourisminpondicherry.com

மகத்தான வார இறுதிச் சுற்றுலா பற்றி அறிய தொடர்பு கொள்ளவும்.
சென்னை : 8460908 பெங்களூர் : 6550108-4121704-5321433

McCANN/PT/0113/02


அடி சக்கை!

கரும்புச் சக்கை, மர சக்கை, பழச் சக்கை, வாழைப் பழத் தோல், தவிடு என எதைக் கொடுத்தாலும் சட்டுபுட்டென்று, பேக்கேஜிங் பொருட்களாக மாற்றி துட்டு பார்த்து விடுகிறார் இந்த ஆஸ்ட்ரியா அணங்கு சூஸன் மெனின்கர்.

"பிளாஸ்டிக்கா?... விடாதே... அழி" என்றெல்லாம் கூக்குரல் ஒலித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில் "மண்ணைக் காக்க வந்த ரட்சகி நானே" என்று வரிந்து கட்டிக் கொண்டு 'பயோஜெனிக் பாக்கேஜிங்' என்ற புதிய முறையில் நிறைய கண்டுபிடித்துள்ளார்.

மரக் கூழ் பெட்டிகள், நார்ப்பைகள், கத்தாழை டப்பாக்கள், முட்டை ஓடு தட்டுகள், என இவர் உருவாக்கியுள்ள 'இகோ ஃப்ரெண்ட்லி' தயாரிப்புகளுக்கு ஏக கிராக்கியாம்!









• நம்மூரு வாழை இலை



• நவீன பாசி

சூஸனின் லேட்டஸ்ட் கண்டுபிடிப்பு என்ன தெரியுமா? பன்னிரண்டு மணிக்கு ஒரு மீட்டர் உயரம் வளரக்கூடிய நவீன பாசி வகைதான். இந்த 'ஆல்கே'யைக் கொண்டு, மிக மலிவான பயோஜெனிக் பாக்கேஜிங் பொருட்களைத் தயாரிக்கலாம். இவை வெகு விரைவில் மண்ணில் மக்குவதோடு, நல்ல உரமாகவும் அமையுமாம்!

- ஆர்.எல்

'சிரி'க்கெட்!



"அந்த பிளேயர் அம்பயர்ட்ட என்ன தகராறு பண்றாரு?"

"ஓட முடியாதவங்களுக்கு 'பை-ரன்னர்' கொடுக்கற மாதிரி அடிக்க முடியாதவங்களுக்கு 'பை-பேட்ஸ்மேன்' கொடுக்கணுமாம்!"



"என்னது, 'ஹாஃப்-டே' இண்டர்நேஷனலா? புதுசா இருக்கே!"

"இண்டியன் டீமுக்காக ஸ்பெஷலா அறிமுகப்படுத்தி இருக்காங்க!"



இந்திய கிரிக்கெட் போர்டு அவசரமாக் கூடி ஒரு தீர்மானம் நிறைவேற்றி யிருக்காங்களாம்!"

"என்னன்னு?"

"ஸ்லோ சைக்கிளிங் ரேஸ் மாதிரி, லோ ஸ்கோரிங் மேட்ச் ஆரம்பிக்கணும்னு!"

எஸ்.வி.எஸ்.

"எதுக்கு ஆடியன்ஸ் திடீர் திடீர்னு பட்டாசு வெடிக்கறாங்க?"

"வெடி சத்தத்துக்கு மிரண்டு போயாவது பிளேயர்ஸ் ஒரு ரன் ஓடிட மாட்டாங்களான்ற நப்பாசைதான்!"



"இந்திய வீரர்கள் சரியா ஆடறதிலேங்கற விஷயத்தை கிரிக்கெட் போர்டு சீரியஸா எடுத்துக்கிட்டது போலிருக்கு!"

"ஏன், என்ன பண்ணினாங்க?"

"ஸ்பெஷல் கோச்சா, ஒரு நட்டுவனாரை நியமிச்சிருக்காங்க!"



"அவர் ஏன் அடிச்சிட்டு ஒரு ரன்கூட ஓட மாட்டேங்கறாரு?"

"பிட்ச் தெற்கு வடக்கா இருக்காம். இன்னிக்கு வடக்கே சூலமாம்; போகக் கூடாதாம்! அதான்!"



காதல் பிசாசே!

மூடி வைத்த
கனவு வந்து முட்டுகின்றது
கூடி நின்ற
உறவுமென்னைத் திட்டுகின்றது
ஆனபோதும்
இதயமுன்னை ஒட்டுகின்றது
அவ்வப்போது
ஆசைக் கதவைத்
தட்டுகின்றது

காதலிக்காதவர் என்கிற வரிசையில் நின்று கொள்ள சிலர் பிரியப்படுவார்கள். மனசுக்குள் தேங்கிய மழை நீரை வலுக்கட்டாயமாக மறைத்துக் கொண்டு, எனக்கெந்த அனுபவமுமில்லை என்பார்கள்.

காதலிக்காமலோ அல்லது காதலிக்கப்படாமலோ ஒருவர் இருப்பாரேயானால், அதற்காக அவர் பெருமைப்படத் தேவையில்லை. மாறாக, வருத்தப்படவேண்டும். தன் வீட்டுத் தொட்டிச் செடியில் ஒரு பூ கூட பூக்கவில்லை என்று எந்தக் குழந்தையின் இதயமும் சந்தோசப்படுவதில்லை.

குழந்தையின் இதயத்தையும் வாலிபத்தின் குறும்பையும் கொண்டியங்குவது காதல். அரசனின் கம்பீரத்தையும், அடியவரின் மனப் பக்குவத்தையும் சேர்த்துக் கொள்வது காதல். மார்கழியில் வெயிலையும் சித்திரையில் குளிரையும் அனுபவிப்பது போல, இதழும் சூடும் பரவும் இன்பமது.

அகிலத்தையே வென்றாலும் அம்மாவுக்குக் கீழேதான் ஒவ்வொருவனும். அவன் ஊட்டும் பருக்கையில் ருசியைத் தேடுகிறவனல்ல மகன். அன்பைச் சுவைப்பவனே பெருமைக்குரியவன். அம்மாவுக்கு ஆட்சி செய்யத் தெரியாது. மகனிடத்தில் தனது அதிகாரங்களைப் பிரயோகிக்கத் தயங்குவாள். தவிர்க்க முடியாமல் சிம்மாசனத்தில் அமர்ந்தாலும், தனது கிரீடத்தை மகன் தலைக்கு மாற்றும் வரை அவள் பாடு பெரும்பாடு.

அம்மாவைப் பற்றிச் சொல்கிற ஒவ்வொரு வாசகமும் காதலுக்குப் பொருந்தும். எனில், காதலிப்பவர் எல்லோரும் அவள் பிள்ளைகள். அழத் தொடங்கும் முன்னமே அவிழத் தொடங்கும் அவள் மார்பு. போதும் என்பதை குழந்தையின் இரைப்பையாய் இருந்து அறிந்து கொள்வாள். நந்திக் கலம்பத்தில் ஒரு காட்சி.

மாட்டாதே இத்தனை நாள்
மானந்தி வான்வரைத் தோள்
பூட்டாதே மல்லையர் கோன்
போந்த பரிச்சுவடு
காட்டாதே கைதைப்
பொழிலுலவும் காவிரிநீர்



யுகபாரதி


ஆட்டாதே வைத்தென்னை
ஆயிரமும் செய்தீரே

எதைச் செய்ய வேண்டுமோ அதை மட்டும் செய்யாமல், எதை எதையோ செய்து கொண்டிருப்பது சிலரது சுபாவம். நினைவு மரத்தடியில் அமர்ந்திருக்கிற ஒருத்தி மீது கொத்துக் கொத்தாய்ப் பூக்கள் விழ, தட்டுத்தடுமாறி இணைறிப் போகிறாள். இந்தத் தடுமாற்றத்திற்கு முக்கியமான காரணம் நந்திவர்மன். அரசனான நந்திவர்மனை நினைத்து நினைத்து, இளைத்துக் கொண்டிருக்கிறாள். தானாகப் பூப்பறித்து தலை சூடிக் கொள்ளும் திராணியற்றுப் போகிறது அவள் தேகம். தாகமென்று அள்ளிப் பருகினால் தண்ணீரால் தாகம் கூடுகிறது. ஒவ்வொரு செயலும் இன்னொரு உபசெயலுக்குத் தள்ளிவிட, பசலை கோர்த்து படுத்து விடுகிறாள் காய்ச்சலில்.

15

அரசன் மீது காதல் கொண்ட அரசகுமாரியல்ல அவள். நம் பக்கத்துத் தெருவில் வசிக்கிற ஒருத்தியைப் போல பாசாங்கற்ற சிரிப்புடையவள். இதற்கு முன் அவள் கண்கள் இப்படி கொதிக்கவில்லை. இதற்கு முன் அவள் விரல்கள் இப்படி நடுங்கவில்லை. கொதிப்பும் நடுக்கமும், காதல் கொண்டு வந்ததால் சற்றே அதிகமாயிருந்தன.

என்னானதென்று கேட்பவர்கெல்லாம் ஏதாவதொரு மருந்து தெரியவே செய்யும். என்றாலும், எந்த மருந்து நோயைத் தீர்க்குமென்பதை



வைத்தியரே அறிவார். காய்ச்சல் கண்ட வளின் நெற்றியில் பச்சிலையைத் தடவு கிறார்கள். வெவ்வேறு கைகள் உடலின் வெப்பத்தைத் தொட்டுத் தொட்டு பதறு கின்றன. எந்த விரல் தொட்டால் குளிரத் தொடங்குமோ, அந்த விரல் தொடவே இல்லை. பத்தியத்துக்கும் பச்சிலைக்கும் வெளியேறாத காய்ச்சல் அவன் நினைவு உள்வர ஒதுங்கிச் செல்கிறது. முழுவதுமாக நழுவாமல் கொஞ்சம் போல் விலகிக் கொள் கிறது. காய்ச்சல் கண்டவளே மருந்தையும் சொல்கிறாள்.

பச்சிலைச் சாற்றைவிட காவிரி நீரைக் கொண்டு தாருங்கள். எனில், அது அவனு டைய நதி.

ஒத்தடம் கொடுப்பதைவிட குதிரைகளின் காலடியைக் காட்டுங்கள். எனில், அது அவனுடைய சுவடு. சுற்றி நிற்பதை விட சற்றுத் தள்ளியிருங்கள், என்பது போல நோயின் கசப்பை உணராத தோழிகளை வைகிறாள். படுக்கையிலிருப்பவரை விட பக்கத்திலிருப்பவர்க்கே இம்சை அதிக மென்பது உண்மைதான் போல.

இப்படியானதொரு காய்ச்சலில் விழுந் தவள் வேறொரு இடத்தில் அருகில் இருப் பவரை மட்டுமல்ல, தன் காய்ச்சலுக்குக் காரணமான நந்திவர்மனையே திட்டுகிறாள். கள்ளர் பயமில்லாத இத்தேசத்தில் எனது கைவளையலைக் காணவில்லை. பசலையால் கழன்றது என்ற போதும் அதைப் பாதுகாக் கும் கடமை அவனுடையதல்லவா?

ஊர் வாழ உழைப்பவன் என் உடல் நோகச் செய்வதா? பேர் வாழ நிலைப்பவன் என் உயிர் வேகக் கொல்வதா? வீரத்திர பிரதாபன் என அழைக்கப்பட்ட நந்திவர் மனை ஒருத்தி எத்தனை கேலியோடு அணுகு கிறாள்? காதல் அணுகுமுறைகளைக் கற்றுத் தரும். அடக்குமுறைகளில் முத்தம் பெறும்.

நங்கள் கோன் தொண்டை வேந்தன்
நாமவேல் மன்னர்க்கெல்லாம்
தங்கள்கோன் அங்க நாடன்
சந்திர குலப்ராசன்
திங்கள் போல் குடையின்நீழல்
செய்யகோல் செலுத்தும்என்ப
எங்கள் கோல் வளைகள்நில்லா
விபரீதம் இருந்த ஆறே

சந்திர குலத்துக்கே ஒளியைத் தருகிறவன். என் விழிகளில் இருட்டைத் தடவுதா?

சந்திரனைப் போன்ற குடையின் கீழே ஆட்சி புரிபவன், என் கைவளை நழுவிட உதவுதா?

ஊரைப் பழித்து; உறவைப் பழித்து; ஒன்றிக்கிடக்கும் இயற்கையின் அழகைப் பழித்து, காதலிப்பதை விட காதலிக்காம லேயே இருக்கலாம், என காதலிக்காதவர் சொல்லக் கூடாது.

காதலிக்காதவர் வரிசையில் இப்போது ஒரே ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவரை நாம் கடவுளென்று கூப்பிடுகிறோம். கடவுளைக் கண்டதும் ஆர். புருஷோத்த மனின் 'மரங்களுக்காகவும் சில வீடுகள்' தொகுப்பிலுள்ள தேரோட்டம் கவிதை நினைவுக்கு வருகிறது.

உற்சவ மூர்த்தியில்லை
உடனமர்ந்த விற்பன்னரில்லை
வடமிழுத்த பெருங்கூட்டமில்லை
சுற்றியிருந்த மாலைகளுமில்லை
நிஜங்களின் வெயில் சுட
நிலையிட்டு நின்றது தேர்
ஓடுகிறது பல தேர்
மனிதர்களின் மனங்களினூடும்.

நிஜங்களின் வெயில் சுட நிலையிட்டு நின்ற தேரில் காக்கைகள் அமராது. சிலந்தி கள் அண்டாது. கடவுளைப் பார்த்து தேர் கேட்டது; நீங்களாவது காதலிக்காமல் இருக் கக் கூடாதா?'

(தொடரும்)

''டைரக்டர் சார், உயிரைக் கொடுத்து நடிக்க நான் தயாராய் இருக்கேன். உங்க படத்துல ஒரு வாய்ப்பு தாங்க சார்!''

''சரி, என்னோட அடுத்த பேய்ப் படத் துல நீயே ஆவியா நடிச்சுடு!''

— யமுனா ரங்கநாதன்








அன்பே சிவம்

பத்தாயிரம் ரூபாய்க்கான அந்த காசோலையைப் பெற்றுக் கொண்ட ஜோதிலிங்கம் தொகையைக் கண்டு சற்று வியப்புடன் பார்த்தார். பார்ப்பதற்கு எளிய



தோற்றத்துடன் இருந்த அந்தத் தம்பதியிடமிருந்து அவ்வளவு பெரிய தொகையை அவர் எதிர் பார்க்கவில்லை.

''வருடம் ஒருமுறை எங்களால் இயன்ற நன்கொடையை இது போன்ற சேவை நிறுவனங்களுக்கு அளிப்பதற்கென்றே மாதா மாதம் ஒரு தொகையை சேமிக்கிறோம்'' என்றான் சிவம்.

செக் பெற்றுக் கொண்டதற்கான ரசீதைக் கொடுத்தார் ஜோதிலிங்கம்.

''எங்கப் பசங்க பள்ளி முடிந்து ஹாஸ்டலுக்கு வந்திருப்பாங்க... வாங்களேன்... பார்த்துட்டு வரலாம்'' என்றார்.

''அது வந்து...'' என்று தயாளனின் முகத்தைத் தயக்கத்துடன் பார்த்தாள் கருணா.

"சார், ஒரு சிறிய வேண்டுகோள். இப்போது நாங்கள் உங்கள் மாணவர்களை பார்க்க விரும்பவில்லை'' சிவம்.

புரியாமல் பார்த்தார் ஜோதிலிங்கம்.

''உங்கள் பள்ளியில் விழாக்கள் கொண்டாடும் போது எங்களை அழையுங்கள். பார்வையாளர் வரிசையில் அமர்ந்து ரசிக்கிறோம். அப்போது உங்கள் நண்பர்களாக எங்களை அறிமுகப்படுத்துங்கள்'' கருணா கூறினாள்.

''முன்பின் தெரியாதவர்களாகிய நாங்கள் இப்போது அவர்களைப் பார்க்கச் சென்றால், தங்கள் ஊனம் ஒரு காட்சிப் பொருளாக உள்ளதோ என்ற தாழ்வு மனப்பான்மை எழ வாய்ப்புள்ளது. இப்படி உதவி செய்ததின் மூலம் அவர்களது ஊனத்தை உறுதி செய்வது போலவும் இருக்கும். அது மட்டுமில்லை, எங்க முதல் சந்திப்பை ஒரு நன்கொடையாளராகத் துவங்குவதை விட, நண்பர்களாகத் தொடங்குவதையே நாங்கள் விரும்புகிறோம்'' என்றான் சிவம்.

இப்படியும் சிந்திக்கக்கூடிய நல்ல மனசுக்காரர்களைச் சந்தித்த திருப்தியில் திளைத்தார் ஜோதிலிங்கம். ○

வி. ஜெயலட்சுமி

சொக்கத் தங்கம்!

தலைமுடி தோளில் புரள, உடலைக் கவ்விய நீலச் சட்டையில் அப்போதுதான் பூத்த பூ மாதிரி பளிச்சென்று வந்து நின்றாள் அகிலா.

கால் நகங்கள் வட்டமாக வெட்டப்பட்டு, பாதாம் நிறத்தில் மின்ன, குதிகால் புறா மென்மை காட்ட, சின்ன கிரிஸ்டல் கொலுசு. அவள் அணிந்திருந்த செருப்பில் கூட மண் ஒட்டியிருக்கவில்லை.

"மேனாமினுக்கி வந்துட்டா.." எரிச்சலாக முணுமுணுத்தாள் வேலைக்காரி முனியம்மா.

அகிலாவுக்கு தூசு என்றாலே அலர்ஜி. குப்பை இருந்தால் காலை கீழேயே வைக்க மாட்டாள். கரப்பான் பூச்சி, சாக்கடை நாற்றம், அழுக்குத் துணி என்றால் அருவருப்பில் டென்ஷனாகி விடுவாள். அவளிடம் மாட்டிக் கொண்ட முனியம்மாவுக்கு ஒரே அவஸ்தை.

'ஹூம். இப்ப ஒண்டிக் கட்டை. எல்லாம் உன் ராஜ்ஜியம். நாளைக்கே கல்யாணமாகி, குழந்தை குட்டின்னு பொறந்தா இப்படி சுத்தம் பார்க்க முடியுமா? அதையும்தான் பார்க்கறேன்' என்று மனசுக்குள் கருவிக் கொண்டே துணி துவைக்க ஆரம்பித்தாள்.



திடீரென்று என்னவோ இடிந்து விழும் சப்தம்! முனியம்மா எட்டிப் பார்ப்பதற்குள், பக்கத்து வீட்டுப் பார்வதி கத்தினாள்.

"யக்கா. உம் புள்ளை செப்டிக் டாங்க்குக்குள்ளே விழுந்துடுச்சு. ஓடியா"

"அய்யோ முருகேசு" என்று கூவிக் கொண்டே பக்கத்து வீட்டுக்கு வருவதற்குள், காம்பவுண்டு ஏறி அந்தப் பக்கம் குதித்து, சாக்கடையில் தத்தளித்துக் கொண்டிருந்த ஐந்து வயதுக் குழந்தையைத் துழாவி, தூக்கி வெளியே எடுத்து விட்டாள் அகிலா.

முகம், சட்டை எல்லாவற்றிலும் நரகல் கலந்த சாக்கடை அப்பியிருக்க, குழந்தையின் வாயில் விரலை விட்டு வாந்தியெடுக்க வைக்க முயற்சி செய்து கொண்டிருந்த அகிலாவை ஆச்சரியமாகப் பார்த்தாள் முனியம்மா.

மறுநாள், தலைமுடி பொன் நிறத்தில், புரள, வெள்ளை நிறப் புடவையில் ஒயிலாக நடந்து போனாள் அகிலா!

அந்த சுத்தத்தையும், ஸ்டைலையும் பார்த்து தினமும் வருமே அந்த எரிச்சல், இப்போது முனியம்மாவுக்கு வரவில்லை.

ஆதர்ஷ்


அரசியல் நிர்ணயச் சட்ட வழக்கில் இன்றைக்கு பேசப்படும் 'கேசவானந்த பாரதி கேஸில், யதுகிரி மடத்தைச் சேர்ந்த கேசவானந்த பாரதி சுவாமிகளுக்காக உச்சநீதிமன்றத்தின் கான்ஸ் டிட்யூஷன் பெஞ்சில் வாதாடி வென்றவர் நானி பால்கிவாலா.

இவர் பொருளாதார வல்லுனர், சிறந்த பேச்சாளர். ஆனால் சிறு வயதில் அவருக்குத் திக்குவாய் ஒரு பிரச்னையாக இருந்தது. பயிற்சியும், விடாமுயற்சியுமே அவரை ஒரு மிகச் சிறந்த மேடைப் பேச்சாளர் ஆக்கியது.

ஒரு வழக்கில் ஆஜராகி அவர் வாதம் செய்தபோது, நீதிபதி ஏ.எஸ்.பி. அய்யர் அவரது திறமையைக் கண்டு வியந்து போய், 'இந்த இளம் ஜீனியஸ் பெரிய மேதையாக வருவார்' என்று சொன்னார். அப்போது பால்கிவாலாவுக்கு வயது 27 தான்!

இந்திரா காந்தியின் வழக்கிலும் அவருக்காக வாதாடினார் பால்கிவாலா. ஆனால் இந்திரா காந்தி ஒரு சட்டம் இயற்றித் தம் பதவியைக் காப்பாற்றிக் கொள்ளச் செயல்பட்டபோது, 'வேறு வழக்கறிஞரைப் பார்த்துக் கொள்ளுங்கள்!' என்று விலகிக் கொண்டு விட்டார்.

காஞ்சிப் பெரியவரின் நட்புக்கும் மதிப்புக்கும் உரியவராக பால்கிவாலா இருந்தார். வேத பாட நிதி அறக்கட்டளையை அவர் துவக்கியபோது, பால்கிவாலாவைத்தான் அதற்கு நிர்வாக அறங்காவலராக இருக்குமாறு கேட்டுக் கொண்டார். பால்கிவாலா கடைசி மூச்சு வரை அந்தப் பதவியை வகித்தார். அறக் கட்டளையின் கூட்டம், அவர் உடல்நிலை மோசமாகும் வரை, அவரது மும்பை அலுவலகக் கட்டடத்தில்தான் நடந்தது. ஒருதடவை கூட்டம் தொடங்கும்முன், 'நான் சற்று நேரம் கழித்து வருகிறேன்' என்று ஓர் உறுப்பினர் தொலைபேசியில் தெரிவித்தார். "Charity cannot wait" நாம் கூட்டத்தை ஆரம்பித்து நடத்துவோம்" என்று கூறினார் பால்கிவாலா. இது நடந்தது 1994ல்.



1999ல் அவர் வீட்டில்தான் கூட்டம் நடந்தது. காரணம் அவர் உடல்நிலை மோசமாக இருந்தது. தேசத்தின் நிலைமையும் அப்போது மோசமாக இருந்ததைச் சொல்லிவிட்டுத் தேம்பி அழுதார்




கடவுள் தந்த பரிசு!

பால்கிவாலா.

தம்முடைய சொந்தப் பணத்திலிருந்து ஒரு செக்கும், அவர் சார்ந்திருந்த லோட்டஸ் ஃபவுண்டேஷனிலிருந்து ஒரு செக்கும் ஒருமுறை நன்கொடை வழங்கினார்.

வேதங்களிலும், உபநிஷத்துகளிலும் அவருக்கு நல்ல பயிற்சி இருந்தது. ஆகம சாத்திரங்களில் தமக்குத் தெரியாததை எல்லாம் வழக்கறிஞர் பராசரனிடமிருந்தும், காஞ்சிப் பெரியவரிடத்திலிருந்தும் மிக உன்னிப்பாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளுவார். இத்தனைக்கும் பால்கிவாலா ஒரு பார்ஸி. தமது மத ஆசாரங்களை ஒழுங்காகப் பின்பற்றியவர்.



ஒருமுறை சங்கர நேத்ராலயாவுக்கு வந்து பார்த்துவிட்டு, 'உங்கள் மருத்துவர்கள் எல்லாம் மாதச் சம்பளத்துக்கு வேலை பார்க்கிறார்களா?' என்று கேட்டார். 'ஆமாம்' என்றார் நேத்ராலயா தலைவர் டாக்டர் பத்ரிநாத். 'நீங்களும் அப்படித்தானா?' என்று கேட்டார். 'ஆமாம்' என்றார் டாக்டர் பத்ரிநாத்!

சில நாட்களில், தமது மொத்த சொத்துக்களையும் சங்கர நேத்ராலயாவுக்கு எழுதிக் கொடுத்துவிட்டார்!

மும்பைக்கு ஒரு தடவை டாக்டர் பத்ரிநாத்தும், செயலர் வைத்தியநாதனும் போயிருந்தபோது, மரியாதை நிமித்தமாக பால்கிவாலாவைச் சந்தித்தார்கள். அப்போது பால்கிவாலா ஒரு கேள்வி கேட்டார்: "உங்களுடைய நிறுவனத்துக்கு ஒரு செக் தயாராக வைத்திருக்கிறேன். எந்தப் பெயரில் எழுத வேண்டும் - சங்கர நேத்ராலயா என்றா, மெடிகல் ரீசர்ச் ஃபவுண்டேஷன் என்றா?"



• பல்கிவாலா

ஆச்சர்யத்தை மறைத்துக் கொண்டு "மெடிகல் ரீசர்ச் ஃபவுண்டேஷன்" என்றார் டாக்டர் பத்ரிநாத்.

ஏற்கெனவே தொகை எழுதி, கையொப்பம் இட்டு வைத்திருந்த செக்கை எடுத்துப் பூர்த்தி செய்து கொடுத்தார்.

செக் தொகை: இரண்டு கோடி ரூபாய்!

அதற்கு முன்னால்தான் தமது ஷேர்கள் அத்தனையும் சங்கர நேத்ராலயாவுக்கு நன்கொடையாக மாற்றிக் கொடுத்திருந்தார். அவற்றின் மொத்த மதிப்பு: 66 லட்சம் ரூபாய்!

தர்மம் செய்தால்கூட யாரிடமும் அதைப்பற்றிச் சொல்லக் கூட மாட்டார் பால்கிவாலா. தமது வருவாயில் பத்து சதவிகிதத்தை, தான தர்மங்களுக்கு என்றே ஒதுக்கி வைத்திருந்தார்.

பால்கிவாலாவின் வருடாந்தர பட்ஜெட் ஆய்வு உரை மிகப் பிரசித்தமானது. சிறிய இடத்தில் பேசத் துவங்கி, கடைசியில் பிரம்மாண்ட அரங்குகளில் கூட்டம் நிரம்பி வழியும் அளவுக்கு அவரது பட்ஜெட் விளக்கச் சொற்பொழிவுக் கூட்டங்கள் நடைபெற்றன.

அவர் உடல்நிலை குன்றி, படுத்த படுக்கையான பிறகுதான் இந்தச் சொற்பொழிவுகள் நின்றன.

காஞ்சி மடத்தின் சார்பில் அவருக்கு ஒரு விருது கொடுக்கப்பட்டபோது பிடிவாதமாக வீல்சேரில் அமர்ந்து, சென்னைக்கு வந்து, விருதைப் பெற்றுக் கொண்டார். திரும்ப ஏர்போர்ட்டில் அவர் வீல் சேரில் விமானம் ஏற வந்தபோது, தூரத்தில் நின்று கொண்டிருந்த முன்னாள் மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் பதறிப் போய் அவரிடம் வந்த போது, "இனி யார் பட்ஜெட் ஆய்வு உரை நிகழ்த்துவார் என்று என்னிடம் கேட்டீர்களே? சிதம்பரத்தைவிட வேறு ஒரு நிபுணர் இருக்க முடியுமா? அவர் தொடருவார் என் பணியை!" என்றார் பால்கிவாலா. சிதம்பரம் நெகிழ்ந்து போனார். பட்ஜெட் அலசல் உரையைத் தொடர்ந்து செய்து வருகிறார் ப. சிதம்பரம்.

"நான் மாணவனாக இருந்தபோது பால்கிவாலாவின் பட்ஜெட் ஆய்வு உரைகளைக் கேட்கத் தொடங்கியவன். இப்போது அமைச்சராக இருக்கும் போதும் தொடர்ந்து கேட்டு வருகிறேன்" என்றாராம் கர்நாடக முன்னாள் முதல்வர் வீரப்ப மொய்லி.

தமக்கு வந்த அட்டர்னி ஜெனரல் பதவியையும், நீதிபதி பதவியையும் வருத்தமின்றி மறுத்தவர் நானி பால்கிவாலா.

ராஜாஜி நறுக்கென்று சொன்னார்: "பால்கிவாலா நாட்டுக்குக் கடவுள் தந்த பரிசு!"

(நானி பால்கிவாலாவின் நினைவுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக சங்கர நேத்ராலயாவில் நடந்த நிகழ்ச்சிகளிலிருந்து)

- சாருகேசி

"சம்மதம்" என்றாள் சாவித்ரி.

அதற்கடுத்த இரு மாதங்களில் திருமணம் என்று நிச்சயமானது.

இப்படி சூட்டோடு சூடாக நாள் குறிக்கையில் சுஜிதா அங்கு இல்லை. "எனக்குக் கல்யாணம்னாலே எங்க பாடாவதி காலேஜிலே லீவு கொடுப்பது சந்தேகம். எங்கக்காவைப் பெண் பார்க்க வராங்கன்னா லீவு கொடுத்துடுவாங் களா?" என்று சலித்துக் கொண்டபடி தனது சுயநிதிப் பொறியியல் கல்லூரிக்குப் போயிருந்

நிழல்



தாள்.

மாலை வந் தவுடன் "எப்படியிருந்தாரு?" என்றாள் அக் காவிடம்.

"அவரு நல்லாத்தான் இருக்காரு" என்று சாவித்ரி சொன்னதிலேயே வேறேதோ நன் றாக இல்லை என்பதை உணர்ந்தாள். துருவித் துருவிக் கேட்டாள்.

அதே சமயம் ராஜனின் அம்மா அவனிடம் கடுப்பாக இருந்தாள். துளசி மாடத்தைச் சுற்றியபடியே "உனக்கென்ன கான்ஸரா, எய்ட்ஸா? நீ என்ன மொடாக் குடியனா அல்லது ஸ்த்ரீலோலனா? இந்தக் கடுகு விஷயத்தைப் போய் அந்தப் பொண்ணுகிட்ட சொல்லியிருக்கியே! என்ன அவசரம்? கல்யா

"பேய்னா எக்ஸாக்ட்டா கோஸ்ட் இல்லக்கா. இது வாம்பயர்."

2

அருண் சரண்யா

ணத்துக்கப்புறம் தானாத் தெரிஞ்சுக்கிறா" என்று மகனிடம் கோபமுற்றாள்.

குளியலறையில் குளித்தபடியே "இது கடுகு விஷயம்னா நியூஸ்பேப்பரிலே இதைப் பத்தி வருமா? வடக்கேயிருந்து சமீபத்திலே வந்ததினாலே சாவித்ரி வீட்டுக்கு இந்த விஷயம் தெரியல்லே, அவ்வளவுதானே. நாமளே சொல்லிடறது நல்லதுதானே. இப்ப என்ன ஆச்சு? அவங்க வீட்லதான் சம்மதிச் சுட்டாங்களே" என்று உரத்துக் கூறியபடி சமாதானப்படுத்தினான் ராஜன்.

"பிள்ளை வீட்டுக்காரங்களா லட்சணமா நமக்கு ஒரு கெத்து இருக்க வேணாமா? ஸ்ரீமத் துளசியம்மா திருவே கல்யாணியம்மா – இப்ப உன் அவசரக் குடுக்கைத்தனத்தாலே பொண்ணுவீட்டுக்காரங்க ஏதோ பெரிய மனசு பண்ணி உன்னைக் கல்யாணம் பண்ணிக்க ஒத்துக்கிட்ட மாதிரி ஒரு இமேஜ் வந்துடுச்சே– வெள்ளிக்கிழமை தன்னில் விளங்குகின்ற மாதாவே" என்றபடி நமஸ்காரம் செய்தாள்.

முதலில் சாவித்ரி அந்த ரகசியத்தை யாரிடமும் பகிர்ந்து



கொள்வதாக இல்லை. என்றாலும், நிழல் விழாத ஒருவனைத் திருமணம் செய்து கொள்வதன் சாதகபாதகங்கள் அவளுக்கு விளங்கவில்லை. ஒரு 'இரண்டாம் நபரின் யோசனை' கிடைத்தால் மனம் சமாதானமாகிவிடும் என்று பட்டது.

கிடைத்த தனிமையில் அப்பாவிடம் கூறினாள். அவர் அதை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. "அடிப்போடி பைத்தியம். நிழல் விழலேன்னா என்ன குடியா முழுகிப் போச்சு. நிழல் நிழலா விழுந்து நாம என்ன சாதிச்சோம்?" என்றபடி நகர்ந்துவிட்டார்.

போகிறபோக்கில் "உன் அம்மாவிடம் இதைச் சொன்னியானா பயந்துப்பா. கல்யாணத்தை நிறுத்திட்டுத்துதான் மறுவேலை பார்ப்பா" என்றார்.

சாவித்ரிக்கும் அந்த பயம் இருந்தது. அப்பா போலவே எல்லோரும் கருதினால் நல்லது என நினைக்கத் தொடங்கியிருந்தாள். காரணம், இதற்குள் ராஜனிடம் ஓர் ஈர்ப்பு உண்டாகி விட்டிருந்தது. "நிழல் விழலேன்னா என்னடா கண்ணா, கவலையை விடு" என்றபடி அவனது சுருள் முடியை விலக்கியபடி தான் கொஞ்சுவதாகக் கூடக் கற்பனை செய்யத் தொடங்கியிருந்தாள். அவன் காதுகளுக்குக் கீழே அவன் சின்னதாக ஒரு முத்தம் கூடக் கொடுத்து சிலிர்க்க வைத்திருந்தான். 'வேறொரு மானிடர்க்கு வாழ்க்கைப்படின் வாழ்ந்திலேன்' என்ற முடிவுக்குக் கூடக் கிட்டத்தட்ட வந்திருந்தாள்.

என்றாலும், இப்போது சுஜிதா துருவித் துருவிக் கேட்கவும் 'மூன்றாவது நபர் ஒருவரிடமும்' விஷயத்தைச் சொல்லி ஆலோசனை கேட்கலாம் என்று தோன்றியது. தங்கையிடம் விவரத்தைப் பகிர்ந்து கொண்டாள்.

"என்னது நிழல் விழலையா?" என்று மூன்றுமுறை கேட்டாள் சுஜிதா. முதல் முறை 'என்னது' விலும், இரண்டாவது முறை 'விழலையா'விலும், மூன்றாவது முறை 'நிழலி'லும் அழுத்தம் கொடுத்தாள்.

தனக்கு ஏதோ விபரீதம் நடந்தது போல் தங்கை பதறுவதைக் கண்டு, சாவித்ரிக்கும் கலக்கம் உண்டானது.

"அதனாலென்னடி?" என்றாள்.

"அதனால் என்னவா?" 'என்னவா'வில் அவள் கொடுத்த பேரழுத்தம் 'இது கூட அறியாத பேதைப் பெதும்பையா நீ?' என்று ஏகத் தாளமிட்டது.

'சனியன். வார்த்தைகளில் அழுத்தத்தைக் கொடுத்துவிட்டு விஷயத்தைச் சொல்லாமல் கழுத்தறுக்கிறதே!' சாவித்ரிக்குக் கோபமாக வந்தது.

முகத்தைத் திருப்பிக் கொண்டு மொட்டைமாடிக்குப் போனாள். சற்று நேரத்தில் பின்னாலேயே மூச்சிரைக்க வந்து சேர்ந்தாள் சுஜிதா.

"**எ**ன்ன சாவித்ரி, முழுசும் சொல்றதுக்குள்ளே வந்துட்டே!"

"நீ எப்ப முழுசையும் சொல்லப் போறே? எனக்கு நாலு குழந்தைகள் பிறந்தப்புறமா?"

சுடச்சுட சுவரொட்டி!

விளம்பரங்கள், சினிமா போஸ்டர்கள் அடிக்க இனிமேல் அச்சகத்துக்குப் போக வேண்டியதில்லை. இத்தாலியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள, இந்த அச்சு இயந்திரத்துடன் கம்ப்யூட்டரை இணைத்து விட்டால், விரல் நகம் அளவிலுள்ள படங்களைக் கூட ஐந்தே நிமிடத்தில் உங்களுக்கு வேண்டிய எந்த ராட்சஸ அளவிலும் துணியிலோ, அட்டையிலோ, காகிதத்திலோ பிளாஸ்டிக்கிலோ பிரிண்ட் செய்து சுடச்சுடத் தந்து அசத்திவிடும்.

— பாரீஸ் பார்த்தசாரதி

என்று கடுகடுத்தாள் சாவித்ரி. ராஜனிடம் சம்மதம் சொல்ல சிறிது நேரம் எடுத்துக் கொண்டாளே தவிர, மற்றபடி உடனடியாக முடிவுகளை எடுப்பவள் அவள்.

"எட்டுக் குழந்தைகள் வேணுமானாலும் பெத்தெடு. ஆனா அந்த நிழல் விழாதவன் உனக்கு வேணாம்" என்றாள் சுஜிதா.

விமானம் துளைத்த இரட்டை வணிகக் கோபுரமானாள் சாவித்ரி. ஈனஸ்வரத்தில் "ஏன்?" என்று கேட்டாள்.

"அவனுக்கு நிழல் விழல்லியே" என்று சொன்ன சுஜிதா, சில நிமிடங்களுக்குப் பிறகு குரலைத் தழைத்துக் கொண்டு "நான் படிச்சுத் தொலைச்சுட்டேன் சாவித்ரி" என்றாள்.

"இதென்ன அதிசயம்? நானும் உன்னைப் போல ஒரு கிராஜுவேட்தானே!"

"ஐயோ, அதைச் சொல்லலே. பேய்களுக்குத்தான் நிழல் விழாதுன்னு ஒரு புஸ்தகத்திலே படிச்சுத் தொலைச்சுட்டேன்"

என்றாள் சுஜிதா.

'என்ன!' சாவித்ரி திகைத்துப் போனாள். பேயா? ராஜன் லட்சணமான மானிடனாகத் தானே தோற்றமளித்தான். தனியறைக்கு அவனுடன் வந்த முதல் நிமிடம் முழுவதும், அவள் நாணத்தில் தலையைக் குனிந்து கொண்டிருந்தபோது, அவன் பாதங்கள் நன்கு தரையில் பதிந்திருந்ததைச் சந்தேகத் துக்கிடமின்றிப் பார்த்தாளே. தவிர அவன் கண்கள் இமைத்ததால் தேவலோகத்தைச் சேர்ந்தவன் அல்ல என்பதும் உறுதியாகி விட்டதே!

சாவித்ரியின் முகம் விகாரமானது. இப் போது கற்பனையில் ராஜன் அவளது கன்னத்தின் ஓரமாக முத்தமிட்ட இடத்தில் இரு கோரைப் பற்கள் பதிந்த தடயம் தெரிந் தது. பருவ மழையும் கொட்டித் தீர்க்க, கபினி யும் திறக்கப்பட்ட காவிரி போல் அவள் கண்களில் சரங்கள் இறங்கின.

''அவரு எப்படியாவது இருந்துட்டுப் போகட்டும். இதோட இந்தப் பேச்சை நிறுத்திப்போம் சுஜி. அவருக்குத்தான் நான். எனக்குத்தான் அவர்''. சாவித்ரி கீழே இறங்கி னாள்.



தங்கையின் கூற்றை மறுப்பதுபோல் தலையசைத்தாள் சாவித்ரி.

''பேய்னா எக்ஸாக்ட்டா கோஸ்ட் இல்லக்கா. இது வாம்பயர்''.

முதலில் இந்துத்வாவின் விளக்கங்களைக் கேட்டதுபோல் குழம்பிய சாவித்ரி, பிறகு தன் தங்கை கூறியதைப் புரிந்து கொண்டாள். அதாவது ராஜனை ரத்தக்காட்டேரி என்கிறாள்!

"ச்சீ! அப்பாவியாத் தெரிஞ்சாரு சுஜி!" சாவித்ரியின் குரலில் நடுக்கம் தெரிந்தது.

"நிஜமாவே கூட அப்பாவியா இருக்க லாம்க்கா" என்று சந்தனம் வார்த்த கையோடு, கூடவே லாவாவையும் ஊற்றினாள். 'ஜெக்கில் அண்ட் ஹைட் மாதிரி இருக்க லாமே. ஒரு டி.வி. சீரியலிலே பகலிலே நல்ல வனா இருப்பான் ஒருவன். ஆனா ராத்திரி யானா ரத்தக் காட்டேரியா மாறிடுவான்'.

தன் அக்கா மிஸஸ் ரத்தக் காட்டேரி யாவதா! சிலையானாள் சுஜிதா. எத் தனையோ பேர் இருக்க, காக்கை ஒன்று அவளைத் தேர்ந்தெடுத்த பிறகுதான் அப் போதும் சும்மாயிருக்கத் தான் சிலையல்ல என்பதை உணர்ந்தாள். "ச்சீ" என்றபடி அசுத்தத்தை நீக்கிக் கொள்ள தண்ணீரைத் தேடி நகர்ந்தாள். அப்போதுதான் அவளுக்கு அந்த யோசனை தோன்றியது.

"சாவித்ரி, டி.வி.யிலே ஒரு சோப்பு விளம் பரத்தைப் பார்த்திருப்பியே. குறைஞ்சது அதையாவது செஞ்சு பாரு. அந்த ஆசாமி யைத் தண்ணிகிட்ட அழைச்சிக்கிட்டுப் போய்ப் பாரு. அவர் ரத்தக்காட்டேரியா இருந்தா, பிசாசு உருவம்தான் தண்ணியிலே தெரியும்" என்று தமக்கை சென்ற திசையை நோக்கிக் கத்தினாள்.

(தொடரும்)



'குண்டு குண்டு' குயிலு!

எம்.டி.வி. தொகுப்பாளினி மாதிரி படு மாடர்னாக இருக்கிறார் சுனிதி சௌகான்!

"கரண்ட் ட்ரெண்ட்டுக்கு ஏற்ற மாதிரி நம்மளை மாத்திக்கிட்டாத்தான் மனசுக்கு உற்சாகமாகவும் சந்தோஷமாகவும் இருக்கும்" என்று கூந்தலைக் கோதி விட்டபடியே பேசும் சுனிதி, இந்தி சினிமா உலகில் பிரபலமான பின்னணிப் பாடகி.

"அஞ்சு வயசிலேயே பாட வந்துட்டேன். முறைப்படி சங்கீதமெல்லாம் கத்துக்கலைன்னாலும் இசை மீது தீராத காதல். சினிமால பாடறதுக்காகவே டெல்லிக்கு 'குட்பை' சொல்லிவிட்டு மும்பை வந்தோம். அப்போ தூர்தர்ஷன்ல நடந்த இசைப் போட்டியில முதல் பரிசு கிடைச்சது. நடுவரா இருந்த லதா மங்கேஷ்கர், 'உன்னோட குரல்ல காந்தம் இருக்குமா, நல்லா டெவலப் பண்ணு, சினிமால ஜெயிக்கலாம்'னு அட்வைஸ் பண்ண, மனசுக்குள்ள மழை மழையா பெய்த மகிழ்ச்சி!

அப்புறம் இந்தி படங்கள்லயும் பாப் பாடல்கள் பாடவும் வாய்ப்புக் கிடைச்சது" என்கிற சுனிதி தெலுங்கு, மலையாள திரைப்பாடல்களையும் பாடியிருக்கிறார்.

"மேடை நிகழ்ச்சிகள்ல பங்கு கொள்றதுதான் எனக்கு ரொம்பப் பிடிச்ச விஷயம். ரெக்கார்டிங் தியேட்டர்ல பாடி, அப்புறம் கேசட், விசிடி, வழியா ரசிகர்களைச் சென்றடையறதுக்குப் பதிலா, நேரடியாவே அவங்களோட வரவேற்பை ரசிக்கலாமில்லையா? அந்த நிமிஷம் ஏற்படற பரவசம் வார்த்தைகள்ல சொல்ல முடியாதது" என்று கண்களைச் சிமிட்டும் இந்தக் குயில், தமிழிலும் ஒரு பாடல் பாடியிருக்கிறது. 'தூள்' படத்தில் வரும் 'குண்டு குண்டு' பாடல்தான் அது!

"புதுசா ஒருத்தரைப் பாட வைக்கலாமேன்னு இசையமைப்பாளர் வித்யாசாகர் சார் நினைச்சாராம். என்னோட இந்திப் பாடல்களை ஏற்கெனவே கேட்டிருக்கார் அவர். என்னோட வாய்ஸ் பிடிச்சுப் போய் கூப்பிட்டார். அந்த நிமிஷம் எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாயிருந்தது" என்று சொல்லும் இவருக்கு....... கரெக்ட்! தமிழ்ல நிறைய பாடல்கள் பாட ஆசையாம். சென்னைக்கேத்த பல்லவிதான் சுனிதி!

— மௌலி

படம்: யோகா

நடக்குமென்பார்; நடக்கும்!

அக்னி சர்மா பக்கம்



பிப்ரவரி 5 முதல் 11 வரை

மேஷம் : முக்கியமானவங்களோட தொடர்பு இந்த வாரம் உங்களுக்குக் கிடைக்கும். இதனால் பல நன்மைகள் உண்டு. மேலதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். சிலர் வெளியூர் / வெளிநாடு போக வாய்ப்பிருக்கு. வரவேண்டிய பணம் இப்ப வந்து சேரும். ஏற்றுமதி இறக்குமதி துறைகள்ல ஆதாயம் உண்டு. கான்ட்ராக்டர்ஸ், எலக்ட்ரானிக்ஸ், ஆபரணங்கள், தோல் சம்பந்தமான துறைகள்ல தொழில் பண்றவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. குடும்பத்தில் சின்ன சின்னப் பிரச்னைகள் வந்து தொந்தரவு செய்யும். அமைதி காப்பது நல்லது.

ரிஷபம் : பணவசதி தேவைக்கேற்ப கிடைக்கும். எடுத்த காரியங்களை திறமையோடு நிறைவேற்றி வெற்றி காண்பீங்க. இதுவரை இருந்து வந்த தாமதம், குறுக்கீடு எல்லாம் இப்ப மாயமாகும். எந்தவிதமான கஷ்ட சூழ்நிலை வந்தாலும் சாதுர்யமா செயல்பட்டு வெற்றி காண்பீங்க. அலுவலகத்தில் கூடுதல் பொறுப்பு கிடைக்க வாய்ப்பிருக்கு. கணவன் மனைவிக்குள்ள ட்ஷ்யூம் ட்ஷ்யூம் ஏற்பட்டு விலகும். கோர்ட் வழக்கு விவகாரங்கள்ல நல்ல திருப்பம் வரப் போகுது. பெண்களுக்குப் புதிய பொருள் சேர்க்கை, தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும்.

மிதுனம் : இந்த வாரம் எடுத்த காரியங்களில் வெற்றி உண்டு. மனசுல தெளிவும் நிம்மதியும் பிறக்கும். சிக்கலான பிரச்னைகளைக் கூட சமாளிச்சு பாராட்டு பெறுவீங்க. வேலையில்லாம இருப்பவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு வரும். புதிய வேலை தேடறவங்களுக்கு இது நல்ல சந்தர்ப்பம். சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்கலாம். பழைய கடன் தொல்லைகள் நீங்கும். கொடுக்கல் வாங்கல் சுமுகமா இருக்கும். கலைத்துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு புகழ், பாராட்டு உண்டு. எதிர்ப்புகள் மறையும். நண்பர்கள் உறவினர்களால் நன்மை உண்டு.

கடகம் : குடும்பத்துல சுபகாரிய முயற்சிகள் நடக்கும். சொத்து விவகாரங்கள்ல அனுகூலமானத் திருப்பம் ஏற்படும். எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி வந்து சேரும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு புதிய வாய்ப்புகள் வந்துசேரும். அலுவலகப் பணியாளர்களுக்கு எதிர்பாராத உதவி, பாராட்டுக் கிடைக்கும். வேலை விஷயமாக வெளியூர் செல்ல வாய்ப்பிருக்கு. சுய தொழில் பண்றவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. கான்ட்ராக்டர்கள், எலக்ட்ரானிக்ஸ், இன்டஸ்ட்ரீஸ் ஆகிய துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும்.

சிம்மம் : ராசிநாதன் சூரியன், ஆறாம் இடத்தில் அமர்ந்து குரு மற்றும் புதனுடன் சேர்ந்து சஞ்சாரம் என்பதால், எதிர்ப்புகள் பற்றி கவலைப்பட வேண்டாம். உடல் ஆரோக்கியம் சீரா இருக்கும். தாராளமா நீங்க நாலு பேருக்குக் கடன் கொடுக்கற மாதிரி பண வசதி வந்து சேரும். புதிய வேலை முயற்சிகள் கைகூடும். சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்கலாம். தொழில் வகையில் நல்ல வளர்ச்சி உண்டு. வியாபாரம், வேலை சம்பந்தமாக வெளியூர் / வெளிநாடு போக வாய்ப்பிருக்கு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

கன்னி : மனசுல துணிச்சல், தன்னம்பிக்கை பிறக்கும். பெரியவங்க தொடர்பால நல்ல விஷயங்கள் நடக்கப் போகுது. உங்களோட திறமையான செயல்பாட்டை, எல்லோரும் பாராட்டப் போறாங்க. பொருளாதார

நிலையில் முன்னேற்றம் உண்டு. கொடுக்கல் வாங்கல் சுமுகமா இருக்கும். இதுவரை இருந்து வந்த பிரச்னைகள், சிக்கல்கள் தீர்ந்து சுமுகமான நிலை ஏற்படும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வீண் வாக்குவாதங்களில் இறங்க வேண்டாம்.

துலாம் : இந்த வாரம், உற்சாகமான மனநிலை ஏற்படும். பண வசதி தாராளமா இருக்கும். கொடுக்கல் வாங்கல் கை கொடுக்கும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. அரசியல்வாதிகள் மதிப்பு, செல்வாக்கு உயரும். குடும்பத்துல கணவன் மனைவி உறவு சீரா இருக்கும். கல்யாணம் ஆகாதவங்களுக்கு, அதுக்கான வாய்ப்பு வந்து சேரும். அலுவலகத்தில் சிலருக்கு இடமாற்றம், உயர்பதவி கிடைக்கும். மருத்துவம், கெமிக்கல்ஸ், உணவுப் பொருட்கள், எலக்ட்ரிக்கல்ஸ், தொழில்களில் முன்னேற்றம் உண்டு. பேச்சில் கடுமை வேண்டாம். கோபத்தைத் தவிர்த்துடுங்க.



ஓவியர் மாருதியின் துணைவி விமலாவுக்கு (மிதுனம்) எடுத்த காரியங்களில் வெற்றி!

விருச்சிகம் : குடும்பத்துல குதூகலம் நிறைந்திருக்கும். குருபலம் ஸ்ட்ராங்கா இருப்பதால் பொன், பொருள், ஆடை ஆபரணம் சேர்க்கை உண்டு. கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு வரும். வழக்கு விவகாரங்கள்ல சாதகமான திருப்பம் வரும். தெய்வ பலம், தெளிவான மனநிலை இருக்கறதால், எந்தவொரு காரியத்தையும் எப்பாடுபட்டாவது முடிச்சிடுவீங்க. புதிய வேலை முயற்சிகள் கைகூடும். சிலருக்குப் புதிய பொறுப்புகள், பதவி உயர்வு வந்து சேரலாம். தொழிலில் இருந்து வந்த பிரச்னைகள் ஓயும். யாரிடமும் வாயைக் கொடுத்து மாட்டிக் கொள்ள வேண்டாம்.

தனுசு : இந்த வாரம் வீடு முழுக்க மகிழ்ச்சி நிறைந்திருக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இவ்வளவு நாளா பிரிஞ்சிருந்தவங்க இப்போ வீட்டுக்கு வரப் போறாங்க. இதனால சந்தோஷம் தாண்டவமாடும். புதிய நண்பர்கள் அறிமுகமாவார்கள். இவங்களால நன்மை ஏற்படும். அலுவலகத்தில் சுமுகமான சூழ்நிலை நிலவும். எதிரிகளாக இருந்தவர்கள் மனம் மாறி சினேக பாவத்துடன் பழகுவார்கள். சுய தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டு. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் பெயர், புகழ் கிடைக்கும்.

மகரம் : தெய்வீக ஈடுபாடு, கோர்ட், வழக்கு விவகாரங்கள்ல வெற்றி, தெளிவான சிந்தனை ஏற்படும். அலுவலகப் பணியாளர்களுக்கு இது அதிர்ஷ்ட வாரம். உயரதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். எவ்வளவு கடினமான காரியங்களையும் திறமையோடு சமாளிப்பீங்க. பார்ட்னர்ஷிப்ல தொழில் பண்றவங்களுக்கு ஆதாயம் உண்டு. குரு பலம் நிறைந்திருப்பதால் குடும்பத்தில் பொருள் சேர்க்கை நிகழும். விருந்து உபசாரம், ஜாலி டூர் பார்ட்டி என்று செம குஷியாய் இந்த வாரம் அமையும். நண்பர்கள், உறவினர்கள் உதவுவார்கள்.

கும்பம் : இதுவரை இருந்து வந்த இடையூறுகள், தடைகள், பிரச்னைகள் மாயமாகும். தெய்வ பலம், தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். அலுவலகத்தில் எல்லோருடைய ஒத்துழைப்பும் கிடைக்கும். புதிய வேலை விஷயங்களில் வெற்றி கிடைக்கும். சிலருக்குக் கூடுதல் பொறுப்பு, இடமாற்றம், ஊதிய உயர்வு கிடைக்க வாய்ப்பிருக்கு. பூர்வீக சொத்து விவகாரம் அனுகூலம் தரும். சிலர் புதிய வீடு, மனை வாங்க வாய்ப்பிருக்கு. சுப காரிய முயற்சிகள் வெற்றி தரும்.

மீனம் : இந்த வாரம் உற்சாகமான மன நிலையில் இருப்பீங்க. எடுத்த காரியத்தை எப்பாடுபட்டாவது செய்து முடிச்சிடுவீங்க. அலுவலகத்தில் மேலதிகாரிகள் ஆதரவு, பாராட்டு கிடைக்கும். வேலை விஷயமா சிலர் வெளியூர் போக வாய்ப்பிருக்கு. சுயமா தொழில் பண்றவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. பண நடமாட்டம் தாராளமா இருக்கும். பழைய கடன் தொல்லைகள் மறையும். தொழிலில் இதுவரை இருந்து வந்த போட்டி, பொறாமை விலகும். கலைத்துறை, சங்கீதம், சினிமா, நாட்டியம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு புகழ் பாராட்டு உண்டு.





பெயர் : எம்.வி. செல்வம்

வயது : இருபத்தொன்றுன்னு சொன்னா நம்பவாப் போறீங்!

எளைய நட்சத்திரம்!

படிப்பு : பெரிசா இல்லீங்க. எஸ்.எஸ்.எல்.சி. தான். ஆனால் இங்கீலீஷ் பிச்சு உதறுவேன்.

கூடுதல் தகுதி : அழகு நிபுணர்! என்னை மட்டுமில்லே எல்லாரையும் அழகா மாத்திக் காட்டுவேன்.

ஒரே இலட்சியம் : நிஜ வாழ்க்கையிலே கதாநாயகனாகவும், சினிமாவில் நம்பர் ஒன் வில்லனாகவும் பிரகாசிக்கணும்.

தகவல் : **ஸ்ரீசக்கரம்**



ஙொய்ங்! ஙொய்ங்ங்!



"சின்ன வயசுலே நான் என்ன ஆகணும்னு ஆசைப்பட்டேனோ, அது நிறைவேறிடுச்சு!"

"என்ன ஆசைப்பட்டே?"

"பெரியவனாகணும்னுதான்!"

"அந்தப் பாடகர் காப்பிராகத்தைப் பாடச் சொன்னா, ஏன் நிறுத்தி நிறுத்திப் பாடறார்?"

"அது ஃபில்டர் காப்பி ராகமாம்!"

"ஒரு ஈ இன்னொரு ஈ கிட்டே கடன் பட்டிருந்தா என்னன்னு சொல்லும்?

"ஏ ஈ ஐ ஓ யூ"

"சொசு வலை கேட்டீங்களே... என்ன சைஸ் வேணும்?"

"எங்க வீட்டிலே எல்லா சைஸ்லேயும் கொசு இருக்கே.. என்ன பண்றது?"

படம்: ஸ்ரீஹரி



• க்ளிக் ஆகுமா?

அழகான ஐஸ்! அஞ்சாத அம்மா!

உறவு என்றொரு சொல் இருந்தால் பிரிவு என்றொரு பொருள் இருக்கும் என்பது உண்மைதானோ? கரிஷ்மா கபூரும் அபிஷேக் பச்சனும் திருமணம் செய்து கொள்ளப் போவதாகச் செய்திகளெல்லாம் வந்து பத்திரிகைகளில் அமர்க்களப்பட்டது. மைத்துனி கரீனா கபூரின் வருகைக்காகவே அபிஷேக் காத்திருப்பதாக வேறு (அவர் வெளிநாடுகளில் 'ஷூட்' செய்து கொண்டிருந்தார்) சொல்லப்பட்டது. கரிஷ்மாவும் அபிஷேக்கும் ஜெயாவும் அமிதாப்புமாக விதவிதமாக போஸ் எல்லாம் கொடுத்து, செய்தித் தாள்களில் 'படக் கதை' சொல்லப்பட்டது. இப்போது திடீரென்று அபிஷேக்கும் கரிஷ்மாவும் பிரிந்து விட்டதாக, ரிஷி கபூரின் மனைவியும் கரிஷ்மாவின் சித்தியுமான நீது சிங் அறிக்கை விட்டிருக்கிறார். 'ரொம்ப மனசுக்குக் கஷ்டமாகத்தானிருக்கிறது. என்ன செய்ய? என்ன காரணம் என்பதை அவர்களாகவே சொல்லும் வரை காத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை'' என்றிருக்கிறார். 'என்ன உறவோ என்ன பிரிவோ காதல் நாடக மேடையில்' பாட்டை பத்திரிகைகளெல்லாம் பாடி முடிக்குமுன்னரே, அமிதாப்பின் தந்தை ஹர்வன்ஷ்ராய் பச்சன் மரணமடைந்த செய்தி வந்து விட்டது. சீச்சீ.. இரண்டுக்கும் சம்பந்தமேயில்லை. பெரியவரின் இறுதி யாத்திரைக்கு மற்ற ஃபிலிம் ஸ்டார்களுடன் கரிஷ்மாவும் வந்து கலந்து கொண்டார் என்பதுதான் உண்மை!



• பின்னணிப் பண்பு

"உண்மையில் எனக்கு வெள்ளித் திரையின் வெளிச்ச வாழ்வு பிடிக்காது. அந்தப் பிரகாசம் என்னைக் கூச வைக்கும்'' என்கிறார் 'தில்கா ரிஷ்டா'வின் கதை வசன கர்த்தாவான விருந்தா ராய். ஐஸ்வர்யா ராயின் அம்மா என்றால் புரிந்து விடும்! பிள்ளை ஆதித்யாதான் கோ-ப்ரொட்யூசர். டிப்ஸ்–ன் ரமேஷ் தாவுரானிதான் மெயின் தயாரிப்பாளர். 'நான் குடும்பப் பெண், பின்னணியிலிருந்து கொண்டு குடும்பத்தாரை முன்னுக்குக் கொண்டு வருவது தான் என் பண்பு' என்கிறார். ஹீரோயின் ஐஸ்வர்யா என்பதைச் சொல்லத் தேவையில்லை. மாடலிங் தோஸ்த்தான அர்ஜுன் ராம்பால் தான் பார்ட்னர் - படத்திலேங்க! படம் க்ளிக்காகிவிட்டால்?... ''கைவசம் ஐந்து படங்களுக் கான ஸ்க்ரிப்ட் வைத்திருக்கிறேன்'', என்று பய முறுத்துகிறாரே மிஸஸ் ராய்!

– ஜெய்ஸ்ரீ ராஜ்



• என்ன பிரிவோ...

உடல் முழுக்கப் பொய்!

இன்டர்நெட்டில் தான் ரசித்த சில தகவல்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார் ஹேமா ஸ்ரீபால்.

முன்பு சோவியத் யூனியனின் அதிகாரபூர்வ நாளிதழாக விளங்கியது பிராவ்தா. இடையில் நின்று பின் மீண்டும் வெளியாகிறது. வலைத்தளத்தில் அதன் ஆங்கிலப் பிரதியும். அதில் "காலம் மாறலாம். ஆனால் பழக்கங்கள் மாறுவதில்லை" என்று காரசாரமாகத் தொடங்குகிறது ஒரு கட்டுரை. அதன் இலக்கு அமெரிக்கர்கள் (அமெரிக்காவுடன் ரஷ்யாவுக்குள்ள ஜென்மப் பகைமை மாறிவிட்டதாக நினைத்தவர்களுக்கு ஒரு குட்டு). "சதாம் உசேனை இரகசியமாகத் தீர்த்துக்கட்ட திட்டமிட்டிருக்கிறார் புஷ். போதாக்குறைக்கு "சதாம் ஈராக்கை விட்டு வெளியேறிவிட்டால், அந்த நாட்டின் மீது தாக்குதல் கிடையாது" என்று வேறு ஐஸ்க்ரீம் வார்த்தைகளை ஒழுக விட்டிருக்கிறார். கியூபா அதிபர் ஃபிடில்காஸ்ட்ரோவின் மீது கொலை முயற்சி செய்தவர்கள்தானே!

இதுவும் விபத்துச் செய்திதான். ஆனால் ஜோக்கான விபத்து! வேகமாக வந்து கொண்டிருந்த ஒரு பேருந்து, கிராமம் ஒன்றை நெருங்கிய போது மரத்தில் முட்டிக் குடைசாய்ந்து விட்டது. அந்தப் பேருந்தில் பயணம் செய்தவர்கள் அத்தனை பேரும் அரசியல்வாதிகள். அந்தக் கடும் விபத்தைத் தொடர்ந்து, பயணிகள் அத்தனை பேரையும் புதைத்து விட்டார்கள் கிராமவாசிகள். செய்தியைக் கேள்விப்பட்டு அங்கு வேகமாக வந்து சேர்ந்த அரசு அதிகாரி ஒருவர், "பயணிகள் எல்லோருமே இறந்து விட்டார்கள் என்பதை எப்படி நிச்சயம் செய்து கொண்டீர்கள்?" என்று கேட்டார். அதற்கு கிராமத் தலைவர், "பயணிகளைச் சோதித்துப் பார்த்தோம். சிலர் மட்டும் தாங்கள் சாகவில்லை என்று சொன்னார்கள். அரசியல்வாதிகளைப் பற்றித்தான் நமக்குத் தெரியுமே! உடல் முழுக்கப் பொய்" என்றாராம். ஜோக் போஸ்ட் வலைத்தளத்தில் இப்படி ஒரு ஜோக்!

மைக்கேல் ஜாக்சன் குறித்து இன்ன விதமான செய்திதான் வரும் என்று யூகிக்க முடியாது. ஜெர்மனிக்கு அவர் சமீபத்தில் சென்றிருந்த போது, தமது ஹோட்டல் அறையின் ஜன்னல் வழியாக சாலையில் சென்று கொண்டிருந்த மக்களை நோக்கிக் கை காட்டியதும், பறக்கும் முத்தங்களை அளித்ததும், மார்பில் வேகமாகக் குத்தியபடி தன் அன்பை வெளிப்படுத்தியதும் பரபரப்புச் செய்தி ஆனது. அதாவது அப்படிச் செய்தது நிஜ மைக்கேல் ஜாக்சன் இல்லையாம். தன்னைப் போன்றே தோற்றம் தரும் (முகத்தில் சர்ஜிகல் மாஸ்க் அணிந்த) ஒருவரையும் கூடவே பெர்லினுக்கு அழைத்துச் சென்றிருந்தாராம் அவர். ஜெர்மனியின் வலைத்தளத்தில் உள்ள இந்தச் செய்தியை, ஜாக்சன் ஒப்புக் கொண்டதாகவோ, மறுத்ததாகவோ தெரியவில்லை.

தொகுப்பு : **குல்லூ**



வலைபாயுதே...

"இசை வயிற்றுப் பிழைப்புக்கல்ல" என்கிறாரே இளையராஜா?

● கே.துரைசாமி, மங்களப் பட்டி அஞ்சல்

? *சினிமா உலக வாரிசுகளுக்கும் அரசியல் உலக வாரிசுகளுக்கும் வேறுபாடு என்ன..?*

! அங்கே மேக்கப்புடன் கூடிய நடிப்பு; இங்கே மேக்அப் இல்லாத நடிப்பு! அங்கே பேக்-அப் உண்டு; இங்கே பேக்-அப் கிடையாது!

● எம். அருள்மூர்த்தி, அன்னூர்

? *முதலில் சேமியுங்கள்; பின்னர் சாதிக்கலாம் என்கிறாரே பிரதமர்...?*

! சேமிப்புக்கு உரிய எல்லா சலுகைகளையும் பட்ஜெட்டில் ஒழித்துக் கட்டிவிட்டுச் 'சேமியுங்கள்' என்றால் யாரால் முடியும்? வாஜ்பாய் கூறியிருப்பது மந்திரிகளுக்கு மட்டுமே பொருந்தும்!

● ஆர்.கர்ணன், வடக்கன்குளம்

? *நியூசிலாந்தில் இந்தியா பெற்றது தோல்வி அல்ல; வெற்றிக்கான படிக்கட்டுகள் என்கிறாரே கங்குலி?*

! சான் ஏறி முழம் சறுக்கினால் படிகளை ஏறி முடிக்கவே முடியாது!

● கே. சம்பத், திருக்கழுக்குன்றம்

? *தென் இந்தியாவில் காங்கிரஸை எதிர்க்க ஜெயலலிதாதான் சரியானவர் என நரேந்திர மோடி சான்றிதழ் அளித்துள்ளாரே?*

! பி.ஜே.பி.யை எதிர்க்கவும் அவர்தான் சரியான ஆள் என்பதை நரேந்திர மோடி தற்போதைய வசதி கருதி மறந்து விடுவார்!

● வ.பத்திரகாளி, காவல்கிணறு புதூர் ★

? *உயிரியல் மற்றும் ரசாயன அணு ஆயுத சோதனை செய்ய, வட கொரியா தயாராகி வருவதாகக் கூறப்படுவது பற்றி...?*

! உலகத்தின் சட்டாம்பிள்ளையாகத் தன்னைக் கருதிக் கொள்கிற அமெரிக்காவின் போக்குக்குத் தோன்றும் எதிர்ப்புதான் ஈராக், வட கொரியா பிரச்னைகள். தனக்கு ஒரு நீதி, பிறருக்கு ஒரு நீதி என்ற போக்கை வல்லரசுகள் கைவிட்டால் அணுகுண்டு அபாயம் நீங்கி உலகம் நிம்மதிப் பெருமூச்சு விடும்.

● முகவை முத்துசாமி, தொண்டி

? *இந்திக்கு ஆட்சிமொழி என்கிற சிறப்பு இருக்கிறது. வடமொழிக்குச் செம்மொழி என்ற சிறப்பு உள்ளது; ஆனால் தமிழுக்கு என்ன சிறப்பு...?*

! தமிழ் என்ற தனிச் சிறப்பு உள்ளதே. அதுவே போதுமானது. அதற்கு ஈடானது ஏதுமில்லை.

● ஜி. ஜெயராமன், கூந்தலூர்

? *டெலிபோன் கட்டண உயர்வு பற்றித் தராசின் கருத்து என்ன...?*

! செய்தித் தொடர்பு போன்ற அடிப்படை வசதிகள் பெருகி, சுலபமாகவும் மலிவாகவும் மக்களுக்குக் கிடைக்கச் செய்கின்ற நாடுகள்தான், விரைவில் பொருளாதார முன்னேற்றம் காண்கின்றன, என்று தராசு மட்டுமல்ல, பிரதமரும் நினைக்கிறார் என்பதையே பிரமோதுக்குத் தரப்பட்ட 'பிரமோஷன் (!)' உணர்த்துகிறது!

● டி. சுப்ரமணியன், மேலையூர்

? *சட்டசபையில் கவர்னரின் ஆங்கில உரையை சபாநாயகர் தமிழில் மொழிபெயர்த்துப் படிப்பது மரபு. ஆனால் அவ்வாறு செய்யவில்லையே, ஏன்...?*

! நேரமில்லை என்று காரணம் சொன்னது அபத்தமென்றால், அதை அடுத்து தமிழ் வடிவத்தைப் படிப்பதற்கு விதிக்கப்பட்ட நிபந்தனை, அதைவிட அபத்தமாக இருக்கிறது!

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

? *"இறைவனை அடைய பயன்படுத்த வேண்டிய இசையை, வயிற்றுப் பிழைப்புக்காகப் பயன்படுத்துகிறோம்!'' என்று இளையராஜா வருத்தப்பட்டுள்ளாரே..? இது சரியா சார்...?*

"இசை என்பது இறைவனுக்கே அர்ப்பணமாக வேண்டியது; இறையுணர்வுடன் இசையை வழங்க வேண்டும்" - இது திரைப்படத் துறையில் சாத்தியமில்லாமல் போகிறது என்கிற அர்த்தத்தில் பேசியிருக்கிறார். இளையராஜா முதியராஜாவாக உருவாகி வருவதையே இது காட்டுகிறது.

ரூ. 100 பரிசு பெறுபவர் : வேலவன், 48, டெலிபோன் காலனி, திருவிழந்தூர், மயிலாடுதுறை - 609 001.

• முதியராஜா!



• வசதி வாக்கியம்!





• பிரமோ(ஜன்)த் மகாஜன்!



• 'மந்திரி' ஆலோசனை!



• 'வரலாற்று' நாயகர்!

● அ. சகுமார், காட்டுக்காஹூர்

? கனவு மெய்ப்பட என்ன செய்ய வேண்டும்...?

! கண்ணைத் திறந்து திட்டமிட்டு உழைக்கணும்.

● ஆர்.காஞ்சனா, நெய்வேலி - 3

? 'முஸ்லிம் பெண்கள் அரசு வேலைகளுக்குச் செல்லக்கூடாது. ராஜினாமா செய்ய வேண்டும்' என்று காஷ்மீர் தீவிரவாதிகள் மிரட்டியுள்ளார்களே..?

! பெண்களை இப்படி மிரட்டுவது வீரமல்ல; இந்த மிரட்டலுக்குப் பணிய மாட்டோம் என்று சில பெண்களேனும் பகிரங்கமாகக் கூறியிருக்கிறார்களே, அது வீரம்!

● கருப்பம்புலம் சித்திரவேலு, நெய்விளக்கு

? மாஜி அதிபர் கிளிண்டனின் வாழ்க்கை வரலாற்றை - மோனிகா விவகாரம் உட்பட - பாடமாகப் படிக்கிறார்களாமே அமெரிக்க மாணவர்கள்...?

! மெய்யான எந்த ஒரு வாழ்க்கை வரலாற்றிலிருந்தும் பாடம் கற்க முடியும்; ஆனால் காந்திஜியின் சத்திய சோதனை போன்று வாய்மையுடன் எழுதப்படும் வாழ்க்கை வரலாறுகள் ஏது...?

● அசோக் ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி

? நெல்லைப் பேராயருடன் அ.தி.மு.க. அமைச்சர்கள் சந்தித்தது எதைக் காட்டுகிறது?

! சாத்தான்குளம், கிறிஸ்துவ நாடார்கள் அதிகம் வாழும் பகுதி. சமீபத்திய மத மாற்றத் தடைச் சட்டம் அப்பகுதி மக்கள் மனத்தைப் புண்படுத்தியிருக்கக் கூடும். கொஞ்சம் புண்ணை ஆற்றத்தான் பேராயரை அமைச்சர்கள் சந்தித்தனர் - என்று நான் சொல்லவில்லை... அ.தி.மு.க.வினரே சொல்லியிருக்கிறார்கள்!

★ரூ. 50 பரிசு பெறுபவர் : வ. பத்திரகாளி, அம்மன் கோயில் தெரு, காவல் கிணறுபுதூர், நெல்லை மாவட்டம்.

● த. சத்தியநாராயணன், அயன்புரம்

? காந்தப் படுக்கை மோசடி பற்றி...?

! சிக்கிக் கொண்டவர்கள் பழைய பாயைப் பிறாண்டுகிறார்களாம்!

● என். பாலகிருஷ்ணன், மதுரை - 1

? பாரத் ரத்னா விருது கொடுக்கும் அளவுக்குச் சிறந்த குடிமகன் நம் இந்தியாவில் இல்லாதது குறித்து...?

! நல்ல வேளை; அப்பட்டமும் பத்மஸ்ரீ, பத்மபூஷன் போல் கண்டபடியாக விநியோகிக்கப்படுமேயானால் இதுவரை பெற்றவர்களுக்கும் இழுக்கு; நாட்டுக்கும் இழுக்கு!

● வேலவன், திருவிழந்தூர்

? தமிழக பா.ஜ.க. தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சி பற்றியும், விவசாயிகளின் அவல நிலை பற்றியும், ஆளுனர் உரையின்போது ஏதும் மறுப்பு தெரிவிக்கவில்லையே...?

! ஹிந்துத்வா ஏற்படுத்தும் நெருக்கம் பஞ்சத்துவா பற்றிச் சிந்திக்க அனுமதிக்கவில்லை.

● கே. கணபதி, சென்னை - 11

? 'இந்தியாவிலேயே கஷ்டமான வேலை அரசியல்வாதியாக இருப்பதுதான்' என்று ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு கூறியிருக்கிறாரே..?

! நல்ல (அரசியல்வாதி) என்பதையும் சேர்த்துச் சொல்லியிருக்கலாம்.

27

'விஜிதாத்மா விதேயாத்மா'வுக்கு இரண்டு விதமான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன என்றேன். விஜிதாத்மா - எல்லோரையும் ஜெயிப்பவன்.

அவிதேயாத்மா - யாருக்கும் வணங்காதவன்.

- இது ஆதி சங்கரரின் விளக்கம்.

எல்லோரையும் ஜெயிப்பவன் - விஜிதாத்மா

ஒரு சிலரை வணங்கக் கூடியவன் - விதேயாத்மா

- இது பராசர பட்டரின் வியாக்யானம்.

இரண்டு வியாக்யானத்தையும் பக்கத்தில் பக்கத்தில் வைத்துக் கொண்டு பார்த்தால், அவிதே யாத்மா என்று ஆதி சங்கரர் சொல்லக் கூடியதற்கு என்ன பொருள்...?

அவனிடத்திலே பக்தி இல்லாதவர்களுக்கு அவன் கிடைக்க மாட்டான்; கட்டுப்படமாட்டான்.

பக்தி இருக்கக் கூடியவர்களுக்கு எளியவன் அவன் என்பதைத்தான் ஆசார்யர்கள் வலியுறுத்துகிறார்கள்.

சஹாதேவன் இருக்கிறானே... அவன் பக்தியினால் கட்டிவிட்டான் பரமாத்மாவை. அந்த சஹாதேவனைப் பார்த்து, "வெளியிலே எங்கும் சொல்லிவிடாதே! உனக்கு நான் கட்டுண்டது ரகசியமாகவே இருக்கட்டும்" என்றான் பரமாத்மா!

பக்தி என்பது ரகசியமானது. வெளியிலே சொல்லாமல் மனத்திலேயே வளர்த்துக் கொண்டு, மனத்திலேயே வைத்துக் கொள்வது.

குறையொன்றுமில்லை!

பகவான் தூது வந்தபோது அவனைக் கட்ட வேண்டும் என்று கௌரவர்கள் பார்த்தார்களே முடிந்ததா...? கட்ட முடியவில்லையே! விச்வரூபம் எடுத்து நின்றான். எல்லோரும் பிரமித்து விழுந்துவிட்டார்கள். இது என்ன காட்டுகிறது...? பிரேமை, பக்தி இல்லாதோருக்கு அவன் கட்டுப்படவில்லை.

ஆனால் யசோதை பிரேமையாகிற கயிறினாலே கட்டிப் போட்டு விட்டாள் அவனை! உரலில் அவள் கட்டியபோது கட்டுண்டான் பரமாத்மா!

கூரத்தாழ்வார் கேட்கிறார்... "உன் அம்மா பிடித்து உன்னைக் கட்டினாளே... உனக்கு பக்தி இருந்தால் உன் அம்மாவை நீ பிடித்துக் கட்ட வேண்டியதுதானே! நீ கட்டுண்டாய் என்று கேள்விப்பட்டு உன்னிடம் ஈடுபாடு கொள்கிற மகான்களையெல்லாம் அல்லவா நீ கட்டுப்படுத்துகிறாய்! அவர்கள் அத்தனை பேரின் மனசும் உன்னிடம் கட்டுப்பட்டுவிட்டதே!" என்கிறார்.

நம்மாழ்வார் இப்படித்தான் கட்டுண்டு மூவாறு மாதம் மோகித்துக் கிடந்தார்.

இப்படியே மகான்களின் மனத்தை அவன் கவர்கிற சரித்திரம் நிறைய இருக்கிறது.

பகவானை அவ்வளவு சுலபமாகக் கட்டுப்படுத்த முடியுமா...? ஆகவேதான் அவன் அறிவரிய எம்பெருமான்.

விஜிதாத்மா - விதேயாத்மா. - சில பேரை அவன் வணங்குகிறான்.

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்



தன்னை அடிபணிபவர்களுக்கு என்ன வேண்டுமானாலும் பண்ணுவான் அவன். தன் திருவடியைப் பணியக் கூடியவர்களுக் காக அக்ருத்யங்களைக்கூட பண்ணுகிறான் அவன்!

பீஷ்ம ஸ்துதியிலே ரொம்ப அழகான வாக்கு. பீஷ்மர் கண்ணீர் விட்டுக் கொண்டு எம்பெருமானின் குணத்தை அனுபவிக் கிறார். எதிரே வந்து நிற்கிறான் பரமாத்மா. அவனுடைய திவ்ய வடிவைப் பார்த்து அவன் குணத்தைக் கொண்டாடுகிறார்.

விஜய ரதம் என்கிற குடும்பத்தை ரக்ஷிக்க பகவான் பட்ட பாடு இருக்கிறது பாருங் கள்... அது சொல்ல முடியாதது!

மனு ஸ்ம்ருதியிலே மனு சொல்லு வார்: 'குடும்பத்தை ரக்ஷிக்க வேண்டிய பொறுப்பை உடையவன் - வீட்டுக்கு அதிகாரி - அவன் ரொம்ப சிரமப்பட்டு செய்யத் தகாத காரியங்கள் நூற்றுக் கணக்கிலே செய்தாவது குடும்பத்தை ரக்ஷிக்க வேண்டும்' என்பார். அதற்காக, மனுவே சொல்லிவிட்டான் என்று நாம் தப்புக் காரியங்கள் பண்ணிக் கொண்டு போகக் கூடாது! குடும்பத்தை ரக்ஷிக்க வேண்டிய பொறுப்பு எவ்வளவு தூரம் முக்கியம் என்பதை வலியுறுத்தத்தான் இந்த மாதிரி சொல்லியிருக்கிறது.


சஹஸ்ரநாமத்தையே எடுத்துக் கொள் வோம்... 'ஸ்ரீராம ராம ராமேதி ரமே ராமே மனோரமே...' என்று சொல்லும்படி ஈச்வரனே பார்வதிக்குச் சொன்னார். மூன்று தடவை ஸ்ரீராம நாமம் சொன்னால் அது சஹஸ்ரநாமத்துக்குத் துல்யம் என்றார்.

ஈச்வரனே சொல்லிவிட்டார் என்பதற் காக சஹஸ்ரநாமத்தை நாம் மூடி வைத்து விட முடியுமா?

ராம நாமத்தின் பெருமையைப் பேசவந்த இடம் இது. என்றேனும் ஒரு நாள் நம்மால் சஹஸ்ரநாமம் முழுதும் சொல்ல முடியாது போனால் சஹஸ்ரநாமத்துக்குத் துல்யமான ராம நாமத்தைச் சொல்லலாம் - பலன் ஏற்பட்டுப் போய்விடும். ஆனால் முடியாது போகிறபோதுதான் இந்தப் பலன் கிடைக்கும்.

ஆகவே, எம்பெருமான் பெருமையை விளக்க வந்த விஷயங்களுள் பல அந்த மாதிரிதான். சின்ன விஷயத்தைச் சொல்லி, பெரிய விஷயம் அதற்குத் துல்யம் என்று சொல்வது வழக்கம்.

இப்படித்தான் நூறு கெட்ட காரியங்கள் பண்ணியேனும் குடும்பத்தை ரக்ஷிக்கும்படி மனு ஸ்ம்ருதி சொல் கிறது.



யாரை ரக்ஷிக்க வேண்டும்...?

வயதான தாய் தந்தையரை,

மனைவியை

குழந்தையை....

இதனால் அகாரி யம் பண்ணவேண் டும் என்று வலியுறுத் தியதாகாது - அதை நன்றாக நினைவில் கொள்ள வேண்டும்.

பகவானும் விஜயரதம் என்கிற குடும் பத்தை ரக்ஷிக்க வேண்டிய பொறுப்பிருந்த தாலே ஏகப்பட்ட காரியங்கள் பண்ணி னான். பகல் நடுவிலே இரவை வரவழைத் தான். ரதத்தை ஓர் அமுக்கு அமுக்கிக் கீழே தள்ளினான். நாகாஸ்திரம் போய்விட்டது. இந்த மாதிரி பல அபக்ருத்யங்கள் பர மாத்மா பண்ணினான். கர்ணனிடத்திலே யிருந்து புண்ணியம் முதற்கொண்டு சகலத்தை யும் அபகரித்தான். இப்படி அவன் ஏகப் பட்ட வஞ்சனை பண்ணியது எதற்காக...?

தன் திருவடியைப் பற்றியவனைக் காப் பாற்றுவதற்காக. அப்படிக் காப்பாற்றுவதற் காக எதை வேண்டுமானாலும் பண்ண அஞ்சமாட்டான் பரமாத்மா.

ஆகையினாலேதான் விஜிதாத்மா, விதே யாத்மா! அடியவர்களுக்குக் கை கட்டிக் கொண்டு வேலை செய்யக் கூடியவன்.

மூன்றுவிதமாய் இருந்து முத்தொழிலை யும் செய்து லோக சம்ரக்ஷணம் பண்ணு கிறான் பரமாத்மா. சர்வாந்தர்யாமியாய் இருந்துகொண்டு முத்தொழிலைப் பண்ணு கிறான் என்பதையே 'திஸ்ரஸ்சமே' என்ற சமக சப்தம் உணர்த்துகிறது.

பஞ்சசமே - பஞ்ச பூதங்களிலே அவன் விசேஷமாய் உறைகிறான்.

விஷ்ணு புராணத்தில் அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது :

பிரதானாத்மா, பூதாத்மா, பரமாத்மா, ஆத்மா, சர்வாத்மா - இப்படி ஐந்து விதமாக பகவான் சொல்லப்படுகிறான்.

பூதாத்மா - பூதங்களுக்கெல்லாம் அந்த ராத்மா. பூலோகத்திலே எத்தனையோ விதமான பூதங்கள் வாழ்கின்றன. இங்கே பூதம் என்றால் பயங்கர உருக் கொண்டது என்று அர்த்தம் இல்லை. தேவ கணங்கள், பூத கணங்கள் இவற்றுக்கெல்லாம் அந்த

இந்துத்வா பற்றிய வாசகர்களின் காரசாரமான விவாதம்... அடுத்த இதழில்...

ராத்மா அவன் என்று அர்த்தம்.

சர்வபூதங்கள் என்றால் சராசரங்கள் என்றும் அர்த்தம். அவை அனைத்துக்கும் - சேதனம், அசேதனம் - அனைத்துக்கும் அந்தராத்மா பூதாத்மா - முக்கியமான ஆத்மா. அவனைத் தவிர மற்றொன்று முக்கியமில்லை என்பதை உணர வேண்டும்.

பீஷ்மாச்சார்யர் சொல்கிறார் : உயர்ந்த ராஜசூய யக்ஞ சமயத்தில், பகவான் ஒருவனே முக்கியம், மீதியெல்லாம் அமுக்கியம் என்று ஒதுக்கித் தள்ளுகிறார்.

வேதம், உபநிஷத்தில் சில இடங்களில் 'ஆத்மா' என்ற சப்தம் வருகிறபோது விசாரம் எழும்.

ஆத்மா என்பது ஜீவாத்மாவைச் சொல்கிறதா? பரமாத்மாவைச் சொல்கிறதா...? என்ற கேள்வி எழும்.

ஆத்ம சப்தம் பகவானையே சொல்கிறது என்பதற்கான பிரமாண விளக்கங்களை உபநிஷத்திலிருந்தே எடுத்துச் சொல்லலாம். அப்படியானால் திடீரென்று ஜீவாத்மாவைக் குறிக்கவும் அதே சப்தத்தை ஏன் பயன்படுத்த வேண்டும்? ... பரமாத்மா என்று சொன்னால்தானே பகவானைக் குறிக்கும், என்றெல்லாம் சண்டையே கூட வரும்.

பரமாத்மா என்று சொன்னாலும் பகவான் தான். ஆத்மா என்று சொன்னாலும் அது அவனையே குறிக்கும். இந்த ஞானம் நமக்கு வேண்டும்.

பரமோ - அவனைக் காட்டிலும் மேம்பட்டது இல்லை என்பதனால் பரமாத்மா.

இப்படியே ஐந்து நிலைகளிலும் பேசப்படுகின்ற உன்னை என்னவென்று எடுத்துக் கொள்வது?

பஞ்ச பூதங்களுக்கு அந்தராத்மா, பஞ்ச பூதங்களை உண்டாக்கியவனே நீதான்; அவற்றுக்கு ஆதாரமாய் இருப்பவனும் நீதான். இதைத்தான் திருமழிசை ஆழ்வார் வியக்கிறார்.

பூ நிலாய ஐந்துமாய், புனற்கண் நின்ற நான்குமாய்
தீ நிலாய மூன்றுமாய், சிறந்த கால் இரண்டுமாய்,
மீ நிலாயது ஒன்றும் ஆகி, வேறு வேறு தன்மையாய்,
நீ நிலாய வண்ணம் நின்னை யார் நினைக்க வல்லரே?

இப்போது சொல்கிற விஷயங்களையெல்லாம் வைத்து, உன்னைப் புரிந்து கொள்ள முடியுமா...? உன்னை நினைக்க முடியுமா..? நீ எப்படிப்பட்டவன் என்று நிர்ணயிக்க முடியுமா? என்று கேட்கிறார்.

உபநிஷத்தை இந்தப் பாசுரம் அப்படியே உரித்து வைத்துக் கொண்டிருக்கிறது.

ஆகாசம் என்கிற விஷயத்தை நாம் பார்க்கிறோம். அதற்கு சாஸ்திர நிர்ணயப்படி சப்தம் மாத்திரம்தான் குணம்.

ஆகாசத்திலிருந்து தோன்றிய வாயுவுக்கு சப்தம், ஸ்பரிசம் இரண்டும் குணங்கள்.

வாயுவிலிருந்து தோன்றிய அக்னிக்கோ மூன்று குணங்கள் - சப்தம், ஸ்பரிசம், ரூபம் - மூன்றும் உண்டு. தொட்டால் சுடுகிறது; கண்ணால் பார்க்க முடிகிறது; ஓசை வருகிறது.

அக்னியிலிருந்து உண்டான ஜலத்துக்கு சப்த - ஸ்பரிச - ரூப - ரஸ குணங்கள் - அதாவது நான்கு குணங்கள்.

தீர்த்தத்திலிருந்து ப்ருத்வி அல்லது மண் உண்டாயிற்று. ப்ருத்விக்கு ஐந்து குணங்கள். தீர்த்தத்தின் நான்கு குணங்களோடு ஐந்தாவதாக, சுகந்தம் என்ற குணமும் மண்ணுக்கு உண்டு. சமஸ்த சுகந்தங்களின் இருப்பிடமாய் இருக்கிறாள் பூதேவி.

பரமாத்மாவோ, ஆகாசமாகவும் இருக்கிறான்; ஆகாசத்துக்கு உள்ளேயும் உறைகிறான்; வாயுவாகவும் இருக்கிறான்; வாயுவுக்கு உள்ளேயும் உறைகிறான்; அக்னியாகவும் இருக்கிறான்; அக்னிக்குள்ளே அந்தர்யாமியாகவும் இருக்கிறான்; தீர்த்தமாக இருக்கிறான்; தீர்த்தத்துக்கு அந்தர்யாமியாவும் இருக்கிறான்; ப்ருத்விக்குள்ளே இருக்கிறான்; ப்ருத்விக்கு அந்தர்யாமியாகவும் இருக்கிறான்.

கர்ப ஸ்துதியிலே தேவகி கர்ப்பத்திலே எம்பெருமானைப் பார்த்தபோது தேவர்கள் ஸ்தோத்திரம் பண்ணினார்கள் :

'சத்தாகவும் இருப்பவனே! வியத்தாகவும் இருப்பவனே!' என்று துதித்தார்கள்.

ப்ருத்வி, அப்பு, தேஜஸ் - மூன்றும் சத்து. வாயு ஆகாசம் இரண்டும் வியத்து.


சத் ஸ்வரூபியாகவும் வியத்தாகவும் பஞ்ச பூதங்களாகவும் இருப்பதால் ஒன்றுக்கொன்று விபரீதமான, முரணான வஸ்துக்களாகவும் அவன் இருக்கிறான். அதனால் தான் உன்னை 'யார் காண வல்லரே! யார் நினைக்க வல்லரே!' என மீண்டும் மீண்டும் ஆழ்வார்கள் வியக்கிறார்கள்.

(வளரும்)

வசீகரா...

"என்ன ஸார்... இப்படிப் பண்ணிட்டீங்களே... உயிரே இல்லாமல் சப்புன்னு போச்சே..!" உஷா அவனைப் பிடித்து உலுக்கினாள்...கோபம் தலைக்கேற, தலைமுடி அவிழ்ந்து ஒரே கோரம்!

"பிடிக்கலைன்னா, திருப்பி அனுப்புய்யா! அதுக்காக... என் கருவே அழிஞ்சு போச்சே!" குரோம்பேட்டை குகநாதன் 'தட்தட்' என்று மேஜையில் குத்தி ரகளை செய்தான்.



"ஞானபீடமே கிடைச்சிருக்கும்யா... உன்னை மதிச்சு அனுப்பினேன் பார்..!" சாந்தனு ஸ்ரீனிவாஸ் பல்லை 'கர்ர்க்... கர்ர்ரக்' என்று கடித்து, சட்டையைப் பிடித்து...

பயந்து போய் எழுந்துவிட்டான் 'அமுதம்' பத்திரிகையின் உதவி ஆசிரியர் வசிகரன்.

வியர்வையில் பனியன் நனைந்து போயிருக்க, தொண்டை வறண்டது.

'சே! என்ன பயங்கரமான கனவு..!'

"ஸார்... உங்க பேச்சைக் கேட்டு, வாசகர் கதைகளை நறுக்கி, சுருக்கி, ஒரு பக்கக் கதையா ஒப்பேத்திக் கொடுத்தேன் பாருங்க.. நைட் எல்லாம் தூக்கமே யில்லை. பயங்கர நைட்மேர்" என்று எடிட்டரிடம் சொல்லிக்கொண்டே அன்று வந்த வாசகர் கடிதங்களை எடுத்துப் படித்தான் வசிகரன்.

"வளவளனு எழுதியிருந்தேன்... அதை ரத்தினச் சுருக்கமாக எடிட் செய்து வெளியிட்ட உங்கள் சாமர்த்தியமே சாமர்த்தியம்.!" சாந்தனு ஸ்ரீனிவாஸ் உருகியிருந்தான்.

"தாங்க்ஸ் ஃபார் யுவர் ஒன்டர்ஃபுல் கிரிஸ்பி எடிட்டிங்"

- உஷாவின் ஈமெயில் நன்றி சொன்னது.

வசிகரன் படு குஷியாகி, இந்தச் சம்பவத்தையே ஒரு பக்கக் கதையாக்கி, இன்னொரு பக்கத்தை ஒப்பேத்தினான்.


குறிப்பு: கல்கியில் மூன்று பக்கம் அமையும்படி எழுதப்பட்டிருந்த இக்கதையை ஒரு பக்கத்துக்குச் சுருக்கி வெளியிட்டிருக்கிறோம்!

(ஆர்)

அனுராதா சேகர்



KALKI 9.2.2003 இதழுடன் இலவச இணைப்பு



ஆயிரங்காலத்துப் பயிரோ, ஐயாயிரங் காலத்துப் பயிரோ, கல்யாணங்கறது பனியில நனையற பூ மாதிரி ஒரு 'ஜில்' அனுபவம்! இரண்டு மனங்களோட சங்கமத்துக்கான விழான்னாலும், அதை நடத்தி முடிக்கறதுக்குள்ள ஒரு வழியாயிடறோமில்லையா?

நகரங்கள்ல கல்யாணம் பண்ணனும்னா சும்மாவா? அதான், வாசகர்களுக்கு டிப்ஸ் தரலாமேன்னு இந்த சப்ளிமெண்ட்.



பியூட்டி பார்லரில் நிச்சயமாகும் திருமணங்கள்!


"**சௌ**ம்யா நல்ல அழகு. இன்ஜினியரிங் படித்திருக்கிறாள். ஒரே பெண். வசதியான குடும்பம். இருந்தும் அவளது திருமணம் தட்டித் தட்டிப் போனது.

"இந்தக் காலத்துப் பசங்களோட ரசனையைப் புரிஞ்சுக்கவே முடியலை. பட்டுப் புடைவை கட்டி ஃபோட்டோ எடுத்து அனுப்பினோம். 'எங்களுக்கு மாடர்னா பொண்ணு தேவை'ன்னு பதில் வந்துடுச்சு. அடுத்த தடவை, மாடர்னா ஃபோட்டோ எடுத்து அனுப்பி வைச்சோம். 'எங்க பையன், குடும்பப் பாங்கான பொண்ணுதான் வேணுங்கிறான்'னு பதில் வருது. என்ன பண்றதுன்னே தெரியலை" என்று அலுத்துக் கொண்டார் சௌம்யாவின் தாயார்.



• தேவி

"உடனே ஓர் ஐடியா சொல்லிக் கொடுத்தேன். அதன்படி சின்ன ஸ்லீவ், ஹை காலர் ப்ளவுஸ், மெல்லிய ஜரி



மணப்பெண் அலங்காரத்துக்கென ஸ்பெஷல் பேக்கேஜ் அம்சங்களை வைத்திருப்பதால், ஆரோஷிகாவில் கல்யாணக்களை வைபோகமே!. "சில பெண்கள் கல்யாணத்திற்கு முதல் நாள் தான் பியூட்டி பார்லரின் வாசலையே



புடைவை அணிவித்தோம். 'ஃப்ரெண்ட் ஹேர்' செட் செய்து, மைல்ட் மேக்கப் போட்டு புகைப்படம் எடுக்கப்பட்டதில், நல்ல ரிஸல்ட். சௌம்யா ஹோம்லியாகவும் தெரிந்தாள். நவீனமாகவும் இருந்தாள். அப்புறம் என்ன? இப்ப கல்யாணமாகி ஆஸ்திரேலியாவில் இருக்கிறாள்" என்றார் அசோக்நகரில் ஆரோஷிகா பியூட்டி பார்லர் நடத்தும் தேவி.


மிதிப்பார்கள். இது சரியல்ல. தலைமுடி, சருமத்தை முறையாகப் பராமரிக்க வேண்டும். மணப் பெண்ணுக்காகவே எங்கள் பார்லரில், 'ட்ரெண்டி', 'எலிகென்ஸ்', 'ஸ்டார்' என்று மூன்று விதமான பியூட்டி பேக்கேஜ் வைத்திருக்கிறோம்'' என்றார்.

'ட்ரெண்டி'யில் கல்யாணத்துக்கு ஒரு வாரம் முன்பாக அழகு சிகிச்சை தொடங்கப்படும். 'எலிகென்ஸ்'ஸில் ஒரு மாதம் முன்பாகவே அழகு படுத்த ஆரம்பிப்பார்கள். 'ஸ்டார்' பேக்கேஜில் மூன்று மாதங்களுக்கு முன்பாகவே, முழுமையான அழகு சிகிச்சை தந்து, கல்யாண மேக்கப், ஹேர்டிரஸ், நகை அலங்காரம் எல்லாவற்றையும் எழிலுடன் செய்து விடுவார்களாம்!



ஆரோஷிகா தரும் மணப்பெண் அலங்கார அம்சங்களில் ஒரு சில...

- ரிசப்ஷன் புடைவையைத் தேர்ந்தெடுப்பதிலிருந்து, பொருத்தமான



ரவிக்கை, ஸ்லிப்பர், நகை, மேக்கப், பூ அலங்காரம் என எல்லாமே நாங்களே தேர்ந்தெடுத்து செய்கிறோம்.

- 'ரெட் ஆல்கே', 'ஸ்பா ஆயில்ஸ்' கொண்டு தரப்படும் நவீன சிகிச்சைகளின் மூலம் மணப் பெண்ணை பளபளப்பாக்கி விடுகிறோம்.
- 'கேமஃப்ளேஜ்' மேக்கப் போட்டு, முகப்பரு, தழும்புகளைக் கூட எளிதாக மறைத்து விடுவோம்.
- 'மெஹந்தி' புழக்கமில்லாதவர்களுக்கு 'பாடி பெயிண்டிங்' செய்து விடுகிறோம். இது லேட்டஸ்ட் ஃபாஷன்!



● கல்யாணப் புடைவைக்கு ஏற்ற நிறத்தில் பூக்களுக்கு வர்ணம் பூசி, ஹேர் டிரஸ் செய்து விடுகிறோம். மேச்சிங்! மேச்சிங்!

● மாப்பிள்ளையுடன் நிற்கும்போது, எப்படிப் போஸ் கொடுக்கணும், எப்படிச் சிரிக்கணும் என்றெல்லாம் கூட சொல்லிக் கொடுத்து விடுவதால், மணப்பெண் விசேஷ அழகுடன் மட்டுமில்லாமல், வசீகரியாகவும் இருப்பாள்.



சில பியூட்டி பார்லர் முகவரிகள்:

ஆரோஷிகா, போன்: 24853282.

எம். ஹசீனா
ஆயுர்வேத ப்யூட்டி பார்லர்,
போன்: 28442970.

தி விசிபில்
டிஃப்பரென்ஸ்
போன்: 28254079.


இம்மார்டல் ப்யூட்டி
பார்லர்,
போன்: 28207132

ட்யூலிப்ஸ்
போன்: 28524674

பத்து கல்யாணம் பண்ணிய பங்கஜம் மாமி தரும் 10 டிப்ஸ்!

● கல்யாணப் பத்திரிகை அச்சடித்தும், முந்திரிக் கொட்டை மாதிரி பெயர்களை எழுதிவிட வேண்டாம். அழைக்கும் போது, எழுதிக் கொடுத்தால் போதும். இதனால் அழைப்பிதழ்கள் வீணாகாமல் தடுக்கலாம்.

● தாம்பூலத்தோடு, நெருங்கியவர்



லாம். அந்தக் கண்டீஷனோடேயே வாங்குவது நல்லது.

● நான்கு பிளாஸ்டிக் வாளி, அரை டஜன் 'மக்', ட்வைன் நூல் கண்டு, பிளாஸ்டிக் வயர், கத்திரி, சுத்தியல், கத்தி, கோணி ஊசி, இரண்டு பூட்டு, பூந்



களுக்கு தட்டு, பேஸின், என ஏதாவது பரிசாகத் தரும் ஃபேஷன் இருக்கிறது. எதிர்பார்த்த கூட்டம் வரவில்லை என்றால் டஜன் கணக்கில் பரிசுப் பொருட்கள் தங்கிப் போகும். பழக்கமுள்ள கடையாக இருந்தால், மிச்சம் மீதியாகும் பரிசுப் பொருட்களைத் திருப்பித் தந்து விட

துடைப்பம் போன்றவற்றை மறக்காமல் சத்திரத்துக்கு எடுத்துப் போகவும். அவசரத்துக்கு உதவும்.




● ஜானவாச சாமான்கள், மணப் பெண் பொருட்கள், நலுங்குக்கு வேண்டியவை, முதலிரவு அலங்காரம் என தனித் தனியாக டிரங்க் பெட்டி போட்டு, பளிச் சென்று எழுதியும் வைத்துவிட்டால், கடைசி நேர டென்ஷன் இருக்காது.

● உறவினர்களிடம் இரவலாக செல்ஃபோன்கள் வாங்கி வைத்துக் கொள்ளலாம். மாடிக்கும் கீழுக்கும், விருந்து மண்டபத்துக்கும், போர்டிகோவுக்குமாக மூச்சிரைக்க அலைந்து, தொண்டை கிழிய கத்தி, சிரமப்பட வேண்டாம்.


● ஸ்டோர் ரூம், சீர்வரிசை அலமாரி, மணமகள் அறை போன்றவற்றுக்கு டூப்ளிகேட் சாவிகள் தயார் செய்து கொள்ளுங்கள். தொலைந்து போனால் பதறத் தேவையில்லை.

● குழந்தைகளுக்குக் குழைந்த பருப்பு சாதம் நெய் சேர்த்து கலந்து, தனியாக வைத்துவிட்டால், கைக் குழந்தைகளுடன்



வரும் இளம் தாய்மார்களின் பாராட்டை சுலபமாகப் பெற்றுவிடலாம்.

- ஸ்டோர் ரூமுக்கு இரண்டு பேர், வெளிவேலைக்கு இரண்டு பேர், சுற்று வேலைக்கு இரண்டுபேர் என, தனித் தனியாக பொறுப்புகள் தந்து விடுங்கள். பிளானிங் மிக முக்கியம்.



- சில்லறையாக நிறையப் பணத்தை, நாலைந்து முக்கிய நபர்களிடம் கொடுத்து வைக்கவும். அவசர ஆபத்துக்கு ஒருத்தரைத் தேடி ஓட வேண்டாம். காப்பிப் பொடியோடு, கூடவே ப்ரூ காபி, டிப் டீத்தூள் போன்றவற்றை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். வட இந்திய கோஷ்டிகளைச் சமாளிக்க உதவும்.

- அதிகாலை முகூர்த்தம் என்றால், டிபன் அயிட்டத்தைக் குறைத்துக் கொண்டு, காலை எட்டரை மணிக்கே முழு விருந்து கொடுத்து உபசரிக்கலாம்.


- வீடியோ, ஃபோட்டோ கவரேஜ்களில் எல்லா உறவினர்களும் நண்பர்களும் பங்கெடுக்கும் சந்தர்ப்பங்களை உருவாக்க வேண்டும். இதனால் மனக் கஷ்டம் உண்டாகாமல் தடுக்கலாம்.

- கல்யாண மண்டபத்துக்குள் இறக்கும் போதும், ஏற்றும் போதும், சாமான்களின் லிஸ்டை கவனமாக சரிபார்க்கவும். கல்யாண விருந்து ருசியாக இருந்தாலே


கல்யாணம் சக்ஸஸ் ஆகி விடும். அதனால் ஐயிட்டங்களைக் குறைத்து, ருசிக்கு முக்கியத்துவம் கொடுங்கள். சுடச்சுட பரிமாறுவது அவசியம்.

● மணப்பெண் – மாப்பிள்ளையுடன் கையை வீசிக் கொண்டு, மண்டபத்துக்குப் போய், சொகுசாகக் கல்யாணம் முடித்துக் கொண்டு திரும்பும் வகையில்,





உதவி செய்ய நிறைய கல்யாண காண்ட்ராக்டர்கள் இருக்கிறார்கள். கோலம் ()



கட்டுச் சாதம் வரை அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். பணத்தைப் பற்றிக் கவலை இல்லை என்றால், காண்ட்ராக்ட் விட்டு விடுவது நல்லது!

அட்டென்ஷன்; நோ டென்ஷன்!

"சுபகாரிய நிகழ்ச்சியா? சாப்பாட்டுப் பொறுப்பை சுபம் கணேசனிடம் விட்டுடுங்க. எல்லாம் சுபமாக நடந்து முடியும்!"

டீ.வி. விளம்பர பாணியில் இப்படிச் சொல்கிறார்கள் மயிலாப்பூர் பகுதி மக்கள்!


சுபம் மேரேஜ் கேட்ரிங்கை நடத்தி வரும் 'சுபம்' கணேசன், காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர்.

"ஆரம்பத்துல ஊறுகாய்



நிறுவனம்தான் தொடங்கினேன். அப்புறம் ஒருபடி மேலே போய், சுபம் அப்பளம் விற்பனையை ஆரம்பிச்சேன். தரம், என் பணிவான பேச்சு காரணமாக, வியாபாரம் பிக் அப் ஆனது. வடாம், வற்றல், முறுக்கு வகையையும் பல்வேறு விதமான பொடிகளையும் விற்க ஆரம்பித்தேன். இப்போ கேட்டரிங்'' என்று சிரிக்கிறார் கணேசன்!

''தெரிந்த கஸ்டமர்கள், தங்கள் வீட்டு சுபகாரியங்களுக்கு, என்னை உணவு தயாரித்து அனுப்பி வைக்கச் சொல்வார்கள். காலையில் ஒன்பது மணிக்கு அவர்கள் வீட்டில் உணவு டெலிவரி செய்ய வேண்டுமென்றால், அதிகாலை மூணு மணிக்கு, நாங்கள் இரண்டு பேருமாய் எழுந்து, வேலைகளை கவனிப்போம்.



இத்தனைக்கும், மறுநாள் சமையலுக்கான காய்கறிகளை நள்ளிரவு பன்னிரண்டு மணி வரை கண் விழித்து நறுக்கித் தயார் பண்ணின பின்னரே தூங்கப் போயிருப் போம். இருந்தாலும் அதிகாலை மூணு மணிக்கு 'டாண்' என்று எழுந்து விடுவோம்.

• சுபம் கணேசன்



என்னுடைய திருப்தி கரமான சேவையால் கவரப்பட்ட கஸ்டமர்கள், தங்கள் வீட்டுத் திருமணங் களின்போது முழுப் பொறுப் பையும் என் வசம் ஒப்ப டைத்தார்கள். ஒவ்வொரு திருமணத்தையும், என் சொந்த மகள், மகன் திருமணம் போல அக்கறையுடன் சீரும், சிறப்புமாக நடத்தி, எல்லாத் தரப்பி னரது ஆதரவையும், பாராட்டையும் பெற் றேன். திருப்தியடைந்த கஸ்டமரின் பாராட்டையும் சிபாரிசையும் விட சிறப் பான விளம்பரம் வேறு ஏதுமில்லையே! இன்று சென்னை நகரின் குறிப்பிடத்தக்க மேரேஜ் காண்டிராக்டர்களில் ஒருவனாக நான் இருக்கிறேன்."

"திருமணங்களை, காண்டிராக்டில் விடாமல், நாமே நேரடியாகச் செய் தால் செலவைக் கட்டுப்படுத்தலா மில்லையா?"


"நீங்கள் சொல்லுவது ஒரு விதத்தில் சரிதான். ஆனால், இந்தக் காலத்தில், அது எல்லோருக்கும் சாத்தியமில்லையே! அந்தக் காலம் போல, குடும்பத்தில் ஒரு கல்யாணம்



என்றால், இழுத்துப் போட்டுக் கொண்டு, எல்லா வேலைகளையும் கவனிக்க ஆட்கள் இல்லையே! இருக்கிறவர்களாலும் ஆபீசுக்கு லீவு போட்டு விட்டு, வேலைகளை கவனிக்க முடிவதில்லையே! எனவே, கல்யாண காண்டிராக்டர்களிடம் எல்லாப் பொறுப்புகளையும் ஒப்படைத்து விட்டு, எந்தவித டென்ஷனும் இல்லாமல், ரிலாக்ஸ் ஆக திருமணத்தை நடத்தவே அனைவரும் விரும்புகிறார்கள்.

இன்னொரு விஷயம். காண்டிராக்டரிடம் பொறுப்பை விடாமல், நீங்களாகவே எடுத்துப் போட்டுக் கொண்டு செய்தால், மொத்தச் செலவில் ஒரு பத்து சதவீதம் சேமிக்கலாம். அவ்வளவுதான்!

"இங்கே நான் ஒரு விஷயத்தை எச்சரிக்க விரும்புகிறேன். ஒரு சிலர், குறைந்த பணத்துக்கு காண்டிராக்ட்டை ஏற்க முன் வரலாம். ஆனால், அவர்களின் செயல்



பாட்டில் முழுத் திருப்தி கிடைக்காது. சில ஆயிரங்கள் மிச்சம் பிடிக்கிறேன் பேர்வழி என்று அனுபவமில்லாதவர்களிடமோ, நேர்மையில்லாதவரிடமோ, பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, அதன்பின் வருந்திப் பயனில்லை. காரணம், திருமணம் என்பது வாழ்க்கையில் ஒரு தடவை நடக்கும் சுப காரியம்"என்கிறார் கணேசன்!

'சுப'த்தில் என்னென்ன கிடைக்கும்?

- மண்டப வாசலில் கோலம் போடுவதிலிருந்து, தாம்பூலப்பைத் தருவது வரை எல்லாவற்றையும் இவர்கள் பொறுப்பில் விட்டு விடலாம்.
- சீர்பட்சணங்கள், வைதிக சாமான்கள், அங்குமணி சாமான்கள், காசியாத் திரை சாமான்கள் என திருமணத்துக்குத் தேவையான இருநூறுக்கும் மேற்பட்ட பொருட்கள் இங்கே கிடைக்கும்.
- ஃபோனில் ஆர்டர் கொடுத்தாலே வீடு தேடி வந்துவிடும் அயிட்டங்கள்.
- கல்யாண ஏற்பாடுகளுக்கானத் தேவைகளைச் சொல்லிவிட்டால், ஜான வாசத்திலிருந்து கட்டுச் சாதம் கொடுத்து மணமக்களை வழியனுப்புகிற வரை, இவர்கள் பார்த்துக் கொள்வார்கள்.

சுபம் கேட்டரிங், 210, செயின்ட் மேரிஸ் சாலை, மந்தைவெளி, சென்னை - 28. தொலைபேசி: 24616007, 24933656.

மேலும் சில கேட்டரிங் சர்வீஸ் தொடர்பு எண்கள்:

ஜே. துரை கேட்டரிங் சர்வீஸ்,
போன்: 22450164.

மீனாம்பிகா கேட்டரிங் சர்வீஸ்,
போன்: 24743236

பிரபலா மேரேஜ் கேட்டரிங் சர்வீஸ்,
போன்: 24890044

கிருஷ்ணாஸ் A toZ மேரேஜ் & கேட்டரிங் சர்வீஸ். போன்:22551369.


ஞானாம்பிகா, போன்:24740345

சீர்வரிசை...

கும்பகோணத்திலிருந்து ஆறு கி.மீ.ல் உள்ளது பித்தளைக் குத்து விளக்குகள் உற்பத்திக்குப் பிரசித்தி பெற்ற நாச்சியார் கோயில். இங்கு நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இத் தொழிலில் ஈடுபட்டுள் ளன். அரையடி உயரக் குத்துவிளக்கி லிருந்து எட்டடி உயரக் குத்துவிளக்கு வரை தயாரித்துத் தருகிறார்கள். இந்தியா முழுமைக்கும் இங்கிருந்து பித்தளைக் குத்து விளக்குகள் உற்பத்தி செய்து அனுப் பப்பட்டு வருகின்றன.

● பித்தளைக் குவளை, அடுக்குகள், தாம்பாளம், குடம், தவலைப் பானை, காமாட்சியம்மன் விளக்கு, பூஜை மணி, தூபக் கால், செம்பு, படி, மரக்கால் – தட்டு





ஆகியன பித்தளைச் சாமான்கள் வகையில் சீர்வரிசைப் பாத்திரங்களில் இடம் பெற்றிருக்கும்.

● எவர்சில்வர் அடுக்குகள், குடம், தவலைப் பானை, டபரா டம்ளர் செட், சாப்பாடு தட்டு, கரண்டி வகைகள், தினசரி உபயோகப் பாத்திரங்கள், அஞ்சரைப் பெட்டி, குக்கர், கேஸ் ஸ்டவ் ஆகியன எவர்சில்வர் பாத்திர வகையில் அடங்கும்.

● கல்யாண சீர்வரிசை பாத்திரங்கள் பித்தளை மற்றும் எவர்சில்வரில் மிக விமரிசையாக எடுத்துத் தருவதாக இருந்தால், சுமார் நூறு வகையான உருப்படிகளில் அவை நிறைந்திருக்குமாம்.

● சிக்கனமான சீர்வரிசை செய்வதாக இருந்தால், எட்டாயிரம் ரூபாய் இருந்தால் போதும். ஜமாய்த்து விடலாம். தாராளமாக செய்வதாக இருந்தால், உங்கள் இஷ்டம் போல.

● இம்மாதிரியான கடைகள் ஐம்பதுக்கும் மேற்பட்டவை கும்பகோணத்தில் இருக்கின்றன. பொற்றாமரை வடக்கு வீதி, தெற்கு வீதி, பெரிய தெரு, சின்னக் கடைத் தெரு ஆகிய நான்கு வீதிகளில் பித்தளைப் பாத்திரக் கடைகள் கலகலவென மியூசிக் போடுகின்றன.

● என்னதான் எவர்சில்வர் அது இது வென்று வந்தாலும், "பித்தளை மாதிரி வருமா?" என்று இன்றும் பித்தளைக் காதலாக இருக்கிறார்கள் கிராமத்து மக்கள்..

மண்டபம்!


திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டாலும் கல்யாண மண்டபத்தில் தான் நடந்தாக வேண்டும்! முகூர்த்த காலங்களில் தம்மாத்துண்டு சைஸ் கல்யாண மண்டபமாவது கிடைக்காதா? என்று அலையும் கல்யாண வீட்டுக்காரர்களைப் பார்த்தால் பரிதாபம்! இம்மாதிரியான சமயங்களில் ஒரே நாளில் ஒரே கல்யாண மண்டபத்தில் காலை, நண்பகல், மாலை, என்று கல்யாணம் நடப்பது கூட உண்டாம்! (காலை கல்யாணத்துக்கு, நண்பகல் கல்யாணத்துக்கு மாலையும் வந்து, உறவுக்காரர்கள் படும் கலாட்டா தனிக் கதை)

இங்கு ஏற்படும் பிரச்னைகளை மண்டபக்காரர்கள் எப்படிச் சமாளிக்கிறார்கள்?

சென்னை புளியந்தோப்பு வட்டார நாடார்கள் சங்க திருமண மாளிகையின் மேலாளர் தென்னவன் சொல்கிறார்: –

'கல்யாணத்துல பிரச்னை பண்ணனும்னே சில உறவுக்காரர்கள் வருவார்கள். அவர்களை நாம் ஒண்ணும் சொல்லவும் முடியாது. வேறு ஏதோ கோபத்தை மண்டப சேர்களிலும் பொருட்களிலும் காண்பித்து விடுவார்கள்.





ஒருமுறை தண்ணியடித்துவிட்டு வந்திருந்த பெண் வீட்டுக்காரர் (மண்டப ஏற்பாடு மணமகன் வீட்டார்) நான்கு சேர்களை தனியே தூக்கிப் போய் வேண்டுமென்றே மிதிமிதியென்று மிதித்து உடைக்க, எதேச்சையாகச் சென்று பார்த்த நான் 'ஷாக்'காகித் தடுத்தேன். பிறகுதான் தெரிந்தது. அவருக்கு வேண்டிய மரியாதையைப் பிள்ளை வீட்டில் கொடுக்கவில்லையாம். அதுக்காகத்தான் இப்படியென்று. அதுக்கு மண்டப சேர்கள் என்ன செய்தது? பிறகென்ன, பில்லில் இந்தச் செலவையும் சேர்த்து எழுதி வசூலித்து விட்டோம்.

இம்மாதிரியான பிரச்னைகள் வந்துவிடும் என்பதற்காகவே, முதலிலேயே ஒரு லிஸ்ட் கொடுத்து விடுவோம். இன்னின்ன பொருட்கள் இருக்கிறது என்று. நிகழ்ச்சி முடித்துப் போகும்போது 99சதவீதம் சரியாகத்தான் இருக்கும். ஒரு சதவீதம் காணாமல் போவதற்கும், உடைந்து போவதற்கும், வாய்ப்பிருக்கிறது. சில நேரங்களில் மண்டபப் பொருட்கள் வீட்டுப் பொருட்களுடன் கலந்து செல்வதற்கும் வாய்ப்பிருக்கிறது.

குழந்தைகளின் தொல்லைகள் தாங்க முடியாது. அவர்களை மண்டபக்காரர்கள் கண்டிக்கவும் முடியாது. எதையாவது எடுத்து சுவரில் கிறுக்கியும், ஜரிகைகளை பிய்த்து எரிந்தும் விடுவார்கள். இதற்கு நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது. குழந்தைகளின் பெற்றோர்களிடம்தான்

முறையிட முடியும்.


- பூலோக வைகுண்டமான ஸ்ரீரங்கத்தில் கல்யாண மண்டபத்துக்கு மட்டும் குறைவில்லை. முப்பத்தைந்து மண்டபங்கள் உள்ளன.

- முதல் நாள் மாலை பெண் பார்க்கும் படலம், இரவு ஜானவாச ஊர்வலம், மறுநாள் காலை காசி யாத்திரை, அதன் பின் முகூர்த்தம், மதியம் நாகவல்லி நலங்கு (பாட்டு மற்றும் பருப்புத் தேங்காய் உருட்டுதல்), இரவு சாந்தி முகூர்த்தம், மறுநாள் காலையில் சம்பந்தி மரியாதையுடன் கட்டு சாதக் கூடை, என மூன்று நாள் முகூர்த்தங்களின் நிகழ்ச்சி நிரல் அடங்கும்.

- மூன்று நாள் முகூர்த்தங்களுக்கு இடமளிக்கும் கல்யாண மண்டபங்களில் சாந்தி முகூர்த்தத்துக்கென விசேஷமான தனியறை வசதிகளும் உண்டு.

- கீழ உத்திர வீதியில் இருப்பது திருவேங்கடத்தான் கல்யாண மண்டபம். இதனை ஹைகோர்ட் சத்திரம் என்கிறார்கள். திருவேங்கடம் என்பவர் இம் மண்டபத்தை சென்னை உயர்நீதி மன்றத்துக்கு எழுதி வைத்து விட்டு இறந்து விட, உயர்நீதி மன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இப்பொழுதும் செயல்பட்டு வருவதால்





இந்தச் செல்லப் பெயர்.

● ஸ்ரீரங்கத்திலேயே மிகக் குறைந்த வாடகை இந்த மண்டபத்தில்தான். பாத்திரங்கள், மின்சார செலவு உட்பட ஒரு நாள் வாடகை ரூ. 2115. மூன்று நாள் வாடகை ரூ. 2850.

● கார் பார்க்கிங் வசதியுடன் அம்மா மண்டபம் ரோட்டில் அமைந்துள்ளது ஸ்ரீ சிருங்கேரி வித்யா பாரதி பவனம். ஒரு நாள் வாடகை ரூ. 25,000 (அம்மாடி!) மூன்று நாள் வாடகை ரூ. 32,000/- ஆன்மீக சம்பந்தப்பட்ட பொது நிகழ்ச்சிகளுக்கு மண்டபத்தை இலவசமாகத் தந்து உதவுகிறார்கள். மண்டபத்தின் வருமானத்தை வைத்து ஸ்ரீ சாரதா தேவி ஆலயத்தைப் பராமரித்து வருகின்றனர். மேலும் யஜுர் வேத பாடசாலை, பகுதி நேர வேதப் பள்ளி, வாரத்தில் இரு தினங்களில் (சனி, ஞாயிறு) ஜாதக பரிவர்த்தனை, மிருக சீரிட நட்சத்திரத்தன்று ஒரு மூட்டை அரிசி அன்னதானம் ஆகியன நடைபெற்று வருகின்றன.

● கொடியாலம் சேஷாத்திரி அய்யங்கார் கல்யாண மண்டபம், லிங்காயத் சமாஜ் திருமண மண்டபம் ஆகிய இரண்டிலும் வருடத்தில் ஒவ்வொரு நாள் பெருமாள் எழுந்தருளி வந்திருந்து தங்கிச் செல்வார். பெருமாள் வந்து தங்கிச் செல்லும் கல்யாண மண்டபம் என்




• தென்னவன்

தற்காகவே, விசேஷமாக இங்கு தங்கள் வீட்டுக் கல்யாணங்களை நடத்திக் கொள்பவர்களும் இருக்கிறார்கள்.

● "எங்களுக்கு முக்கியமான பிரச்னை எது என்றால், ஊழியர்களை வேலை வாங்குவதுதான். மண்டபங்களில் வேலை செய்பவர்கள் எங்கள் நிரந்தர ஊழியர்கள் இல்லை. முகூர்த்த நாட்களில் மட்டும் வேலைக்கு வைத்துக் கொள்ளப்படுபவர்கள். அதனால், மிகவும் நாணயமான, நம்பிக்கையானவர்களாக அமைவது சிரமம். ஏமாந்தால் வேலையில் ஏய்த்து விடுவார்கள். ரொம்ப விரட்டினால், முழு ஒத்துழைப்பு கிடைக்காது" என்கிறார் தி.நகர் முருகன் கல்யாண மண்டப மேனேஜர் நாகராஜன்.

அடுத்த பிரச்னை மின்சார பில். திருமணங்களின் போது, மின்சாரம் தண்ணீராக செலவழியும். எனவே வர்த்தக வாடிக்கையாளர்கள் பிரிவின் கீழ்வரும் கல்யாண மண்டபங்களுக்கு ஒரு யூனிட்டுக்கு ஆறு ரூபாய் போல கட்டணம் ஆகும். முகூர்த்தம் இல்லாத நாட்களில் செலவாகும் மின்சாரத்துக்கும் அதே ரேட்தான். திருமணம் முடிந்து, கஸ்டமர் மண்டபத்தை காலி செய்தபின், மண்டபத்தைக் கழுவி, சுத்தம் செய்வது என்பது அரை நாள் வேலை. சுத்தம் செய்யும் போது, கணிசமான மின்சாரச் செலவு ஆகும். சுத்தம் செய்யும் ஊழியர்களுக்குக் கூலி கொடுக்க, தனியாக சார்ஜ்





வாங்கினாலும், அந்த மின்சார செலவு, கஸ்டமர்களிடம் வாங்குவதில்லை. இது பல கஸ்டமர்களுக்குத் தெரிவதில்லை'' என்கிறார் அவர்.

''ஹனிமூனுக்குப் போலாமா?''

தன் ஸ்வீட் ஹார்ட்டை அழைத்துக் கொண்டு நிலவுக்கே போக வேண்டுமென்றால் கூட, இன்றைய டூர் ஆபரேட்டர்கள் 'அரேஞ்மெண்ட்' பண்ணத் தயாராயிருக்கிறார்கள். 'ஹனிமூன் பேக்கேஜ்' இருக்கவே இருக்கிறதே?

மும்பையைப் பொறுத்தவரை ஹனிமூன் ஸ்பெஷலுக்குப் பெயர் போனவர்கள் 'ஹீனா ட்ராவல்ஸ்காரர்கள். வில்ல பார்லாவில் ஆபீஸ் வைத்திருக்கும் இவர்களுக்கு, மும்பையிலுள்ள எல்லா 'டூர் & ட்ராவல்காரர்களுடனும்' தொடர்பு உண்டு. உதாரணத்துக்கு முலுண்டிலுள்ள 'தீபாலி ட்ராவல்ஸ்'ஸிடம் சென்று 'ஹனிமூன் பேக்கேஜ்' பற்றி என்று ஆரம்பித்த உடன்... சீச்சி... அதெல்லாம் நம்மை சந்தேகப் பார்வை எதுவும் பார்க்கவில்லை; நம்பினால் நம்புங்கள்... 'எங்கே போக நினைக்கிறீங்க?' என்று தான் துவங்கினார்கள். அதுதான் மும்பை ஸ்பெஷாலிடி... உங்கள் மனசின் இளமையைக் கணித்து மாசா மாசம் கூட ஹனிமூன் அனுப்பி விடுவார்கள்!

எடுத்து விஷயத்தை சொன்னதும் ஹீனா ட்ராவல்ஸுக்குப் போட்டுக் கொடுத்தார்கள் (கனெக்ஷனைத்தாங்க!)

ஹீனா டைரக்டர் பிரபு பாய் அளித்த பேட்டியிலிருந்து சில தேன் (?) துளிகள்...


● இப்போதெல்லாம் கப்பிள்ஸ் தேர்ந்தெடுப்பது குலு மணாலி, ஷிம்லா - டார்ஜிலிங், கேரளா முதலானவற்றைத்தானாம். ஒரு டூரில் 15 / 20 ஜோடிகள் செல்கிறார்கள்.

● குலு மணாலி என்றால், எல்லா ஜோடிகளையும் மும்பை சென்ட்ரல் ஸ்டேஷனுக்கழைத்து, ட்ரெயினேற்றுகிறார்கள். வி.வி.ஐ.பி. ஜோடிகளுக்கு மட்டுமே, அதுவும் ராஜ்தானி போன்ற ட்ரெயின்களில் தான் 'கூபே' வசதி எல்லாம். மற்றபடி எல்லோரும் கும்பலோடு கோவிந்தா!


● கூடவே இவர்களுடைய கிச்சனும் செல்வதால், தினம் விதவிதமான விருந்தாம். இரவில் ஸ்பெஷல் பாதாம் பிஸ்தா பால் உண்டாம். "பட், நோ லிக்கர்", யாராவது 'தண்ணி பார்ட்டி' மாட்டினால், 'ஸ்பெஷல் அட்வைஸ்' கொடுக்கவென்றே ஒரு 'ஸ்வாமிஜி'யை அழைத்துப் போவார்களாம். பெண்களுக்கு எது பிடிக்கும் எது பிடிக்காது (முக்கியமாக மது) என்பது பற்றி லெக்சரடிப்பாராம்... போரடிக்காமல்.

● ஹோட்டல் அரேஞ்மெண்ட்ஸ் ஸுப்பராக இருக்குமாம். (வருபவர்கள்





ஊரைச் சுற்றிப் பார்க்கவா வருகிறார்கள் என்கிறார்.) இரவில் 'காம்ப்ஃபயர்', 'டிஸ்கோ', 'டாண்டியா' இவை எல்லாம் உண்டாம்! ரொமாண்டிக் கேம்ஸ், அதற்



குப் பரிசுகள், இவை, தனி அட்ராக்ஷ னாம்.

● பஸ்ஸில், ட்ரெயினிலெல்லாம் போகும்போது, 'காதல் கடி'கள்' சொல்ல, தனி கடி மன்னர்கள் உண்டாம். 'ஒரு கல் கலப்பு... ஒரு ஜாலி... ஒரு கலர்ஃபுல் சூழ் நிலையை உருவாக்குவதே எங்கள் நோக் கம்'' என்கிறார்.

● ஒருமுறை, திருமணமாகாமலேயே ஹனிமூனுக்குக் கிளம்பிய ஜோடி ஒன்று மாட்டியதாம். 'அவர்களை மற்றவர்களு டன் கலக்க விடாமல், தனியாகக் கிச் சனில் வைத்துக் கண்காணித்தோம்,' என்கிறார் (நிஜம்மாவா?)

● பிரிதொரு சமயம், ஹனிமூன் ஜோடி களை ஏற்றிச் சென்ற பஸ் பள்ளத்தில் பல்டி அடிக்க, இரண்டு இளம் ஹீரோக் களின் வாழ்வு சோகமயமாக முடிந்து விட்டதாம்! (போலீஸ் கேசாகாமல் சமூக

மாக எல்லாவற்றையும் முடித்திருக்கிறார்கள்.) இதில் கணவனை இழந்த ஒரு பெண், அதே டூரில் வந்திருந்த மற்றொரு பெண் அடுத்த வருடம் பிரசவத்தில் மரிக்க, அவள் கணவனை மணந்து கொண்டு அதற்கடுத்த வருடம், இதே டூரில் 'ஹனிமூன்' கொண்டாடினாளாம். அவர்களுக்கு இவர்கள் ஸ்பெஷலாக 50% டிஸ்கெளண்ட் அளித்தார்களாம்.... ஹனிமூன்கள் பலவிதம்!

சில சுற்றுலா அமைப்பாளர்கள்:

குமரன் டிராவல்ஸ் :
Cell No. 98423 - 52105

சீதா டிராவல்ஸ் : 25964534

ஏஞ்சல் டிராவல்ஸ் : 2236 5579

சங்கீதா டிராவல் ஏஜென்ஸி:
25385652


ஸ்ரீ டிராவல்ஸ் : 28516799

பிரைடல் கலெக்ஷன்!

கழுத்தில் ஒட்டினாற்போல சிறு



நெக்லஸ், ஒரு நீளமான நெக்லஸ், காதுக்குத் தோடு, மூக்குக்கு மூக்குத்தி, தலைக்கு நெற்றிச் சுட்டி, கைக்கு வளையல்,




விரலுக்கு மோதிரம் என்று ஒரு மணப் பெண்ணுக்குத் தேவையான அனைத்து நகைகளையும், ஒரு செட்டாக 'பிரைடல் கலெக்ஷன்' என்ற பெயரில் விற்பனை செய்கிறார்கள் பிரின்ஸ் ஜுவல்லரியில். முன்பு, இதற்கு 'முகூர்த்த கலெக்ஷன்' என்று பெயர் வைத்திருந்தார்கள்!

"இதன் சிறப்பு அம்சமே, இரண்டு தலைமுறையினரை திருப்திப் படுத்து வதுதான். பாரம்பரிய டச்சும் இருக் கும், அதே நேரத்தில், அதில் நவீன டிசைனும் இருக்கும். காரணம், எங்கள் பாட்டி நகைகளை வடிவமைத்துக் கொடுக்க, அந்த டிசைன்களில் நகைகள் செய்து நகை வியாபாரம் ஆரம்பித்த பரம்பரை எங்களுடையது. இன்று லண்டன், நியூயார்க்கில் கூட எங்களுக்குக்



கிளைகள் இருக்கின்றன. ஜுவல்லரி டிசைனிங் முடித்த புது தலை முறை இப்போது நகைகளை டிசைன் செய்து கொடுக்கிறார்கள்" என்கிறார் பிரின்ஸ் ஜுவல்லரியின் பிரின்ஸ் ஜோஸ்!

"காலத்துக்கேற்ப, நகைகளிலும் புதுப் புது டிசைன்கள் அறிமுகமாகின்றன. சமீப காலமாக, தங்கம், வெள்ளியைப் போல, பிளாட்டினம் பாபுலராகி இருக்கிறது. வைரத்துக்கும் அதிக அளவில் வரவேற்பு கிடைக்கிறது. இந்தச் சூழ்நிலையில், சிறுகச் சிறுக சேர்ப்பவர்கள் ஒரு புறம் இருந்தாலும், மணமகளுக்கு என்று எல்லா நகைகளையும் ஒட்டு மொத்தமாக வாங்குகிறவர்களும் அதிகமாகிக் கொண்டுதான் இருக்கிறார்கள். தவிர, சீட்டுக் கட்டி, சேமித்து, கடைசியில் வாங்கும் பழக்கம் இன்னமும் பிரபலமாகத்தான் இருக்கிறது.




நெற்றிச் சுட்டியில் தொடங்கி, மோதிரம் வரை மணப் பெண்ணுக்குரிய முழுமையான நகை செட்கள், நாற்பதாயிரம் ரூபாயிலிருந்து ஆரம்பமாகின்றன. அதிக பட்சம் என்பது அவரவர் சக்தியைப் பொருத்த விஷயம்.

மணமகளுக்கு மட்டும் தானா? மணமகனுக்கென்று ஸ்பெஷல் கலெக்ஷனும் இருக்கிறது. பிரேஸ்லெட், மோதிரம், செயின், கடிகாரம், பெல்ட்டின் பக்கிள், கஃப்ளிங் என்று இருக்கின்றன. பெண்களுக்குரிய நகை செட்டை விட, இந்த செட்

விலை குறைவாம்1

மணமக்களுக்குரிய நகை





களில் லேட்டஸ்ட் டிரெண்ட் எப்படி இருக்கிறது?

'நிச்சயதார்த்த மோதிரம் என்றால், பிளாட்டினத்தை விரும்புகிறார்கள். அதிலே விலை உயர்ந்ததாக வேண்டும் என்றால், வைரக் கல் பதித்துக் கொள்ளுகிறார்கள். தவிர, பிளாட்டினத்தில் தங்கம் இணைத்து செய்யப்பட்ட நகைகளுக்கும் வரவேற்பு உள்ளது. வைரத்துக்கு புது மவுசு கிடைத்துள்ளது. இளைய தலைமுறை டிசைனர்கள், பாரம்பரியம் ப்ளஸ் நவீனம் இணைத்து நகைகளை வடிவமைப்பதில் வல்லவர்களாக இருக்கிறார்கள். வைரக் கற்களில் தோஷம் இல்லாமல் இருக்க வேண்டும்

என்பதில் வாடிக்கையாளர்கள் கண்டிப்பாக இருப்பதால், ஒவ்வொரு வைரத்தையும் நிபுணர்கள் மூலம் பரிசோதித்து, தோஷம் இல்லாத வைரங்களைத் தேர்ந்தெடுத்து, 'இது தோஷம் இல்லாத வைரம்' என்ற உறுதிமொழி சான்றிதழும் கொடுப்பது எங்கள் வழக்கம். இது எங்களிடம் வைரம் வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு நிம்மதியையும் நம்பிக்கையையும் கொடுக்கிறது. பிரின்ஸ் ஜுவல்லரி ராசியான கடை என்று பெயர் எடுத்ததும் இதனால்தான்" என்கிறார் ஜோஸ்!



பிரின்ஸ் ஜுவல்லரி,
பனகல் பார்க்க,
சென்னை - 17.
தொலைபேசி: 24346783,
24347493.

ஒரிஜினல் கேரளா
ஜுவல்லர்ஸ் :
243410027

ஸ்வர்ணாலயா ஜுவல்லரி
28156386,

வி.பி.சி. ஜுவல்லரி:
28229560,

சுக்ரா ஜுவல்லரி: 24940699

தொகுப்பு : அப்பு, அனு, மௌலி,
ஜெய்ஸ்ரீ ராஜ், திருநாவு
படங்கள் : வெங்கடேஷ்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05* Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka. Supplement to the Kalki issue Dated 9.2.2003



சுபம் A/C dts
3.15pm 6.45pm 10.15pm
பாலஅபிராமி A/C dts
3 காட்சிகள்
மினிஉதயம் A/C dts
4 காட்சிகள்
மகாராணி A/C dts
பகல் காட்சி
Super Good films
R.B.சௌத்ரியின்
அறிமுகநாயகன்
ஜீவா
நடிக்கும்
இனி இப்படிக் காதலிக்கலாம்
என்று சொல்லவைக்கும் காதல்கதை
SUPER GOOD FILMS 50 PICTURE
ஆசை ஆசையாய்
நொடிக்கு நொடி
dts
S.ரவிமரியா
STAR
B.சுரேஷ்சௌத்ரி
மணிசர்மா வைரமுத்து பவண்சேகர்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 " Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 "
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 " Registered as a Newspaper in Srilanka

